॥ ஸ்ரீஹ.: ॥ 1134

கீதையின் பெருமையை விளக்கும் கதைகள்

गीतामाहात्म्यकी कहानियाँ (तमिल)



गीताप्रेस गोरखपुर
GITA PRESS, GORAKHPUR

கீதாபிரஸ், கோரக்பூர்

॥ஸ்ரீ ஹரி:॥

வேண்டுகோள்

கீதை எல்லோருக்கும் ஏற்றது என்று சொல்லும்போது குழந்தைகள் அதன் பயனை ஏன் அடையக் கூடாது? கீதா ப்ரெஸ்ஸை நிறுவியவரும், பேணிக் காத்தவருமான பிரம்மத்தில் ஒன்றிய ஸ்ரீஜயதயால் கோயந்தகா கீதையை மனப்பாடம் செய்யுமாறு குழந்தைகளை ஊக்கி வந்தார். இந்த நோக்கில் பார்த்தால், இந்தப் புத்தகம் குழந்தைகளுக்கும் அதுபோன்றே கீதையில் உள்ள விஷயங்களை அறியாதவர்களுக்கும் மிகவும் பயன்படக் கூடியது. பத்மபுராணத்தில் கீதையின் ஒவ்வொரு அத்யாயத்தின் பெருமையும் கதைகள் மூலமாக விளக்கப்பட்டுள்ளது. அதுவே இப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் பலரும் கீதையை மனப்பாடம் செய்யவும், கீதையிலுள்ள விஷயத்தைப் புரிந்து கொள்ளவும் ஆர்வம் கொள்வர் என நம்புகிறோம்.

பகவான் கூறினார் : ''அழகியே! கீதையில் நான் எவ்வாறு இருக்கிறேன் என்பதை வர்ணித்துக் கூறுகிறேன், கேள்! வரிசையாக, முதல் ஐந்து அத்யாயங்களை என் ஐந்து முகங்கள் என்று அறிந்து கொள். அடுத்த பத்து அத்யாயங்களை பத்து புஜங்கள் என்று அறிந்து கொள். ஓர் அத்யாயத்தை வயிறு என்றும் அடுத்த இரு அத்யாயங்களை என் இருபாதத் தாமரைகள் என்று அறிந்து கொள். இவ்விதம் இந்த பதினெட்டு அத்யாயங்களையும் சொல் வடிவான ஈசுவர வடிவம் என்று புரிந்து கொள்ள வேண்டும். இந்த ஞானமே பெரிய பாதகங்களை அழிக்கக்கூடியது. சிறந்த அறிவுள்ள மனிதன் கீதையின் ஒரு அத்யாயத்தையோ, அதன் பாதியையோ, அல்லது ஒன்று, அரை கால் சுலோகத்தையாவது ஒவ்வொரு நாளும் பயின்றால், அவன் ஸுசர்மாவைப் போன்று பக்தனாக ஆவான்.''

லக்ஷ்மீ தேவி கூறினாள் : ''தேவரே! ஸுசர்மா யார்?''

(இப்புத்தகத்தை படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்)

வெளியீட்டாளர்



॥ ஸ்ரீ ஹரி ॥

ஸ்ரீமத்பகவத்கீதையின்

முதல் அத்யாயத்தின் பெருமை

''பகவானே! நீங்கள் தத்வங்கள் அனைத்தையும் அறிந்தவர். உங்களுடைய கிருபையால், அகில உலகையும் கடைத்தேற்றக் கூடியவையான பகவான் விஷ்ணுவின் தொடர்பான தர்மங்களைக் கேட்கும் பேறு கிடைத்தது. இப்போது எதைக் கேட்டால் பகவான் ஸ்ரீஹரி மீதுள்ள பக்தி அதிகரிக்குமோ அந்தக் கீதையின் பெருமையைப் பற்றிக் கேட்க ஆசைப்படுகிறேன்'' என ஒரு முறை உமாதேவியார் சிவபெருமானை வினவினார்.

ஸ்ரீ மஹாதேவர் கூறினார் — ''நீலோத்பல மலர் போன்று கருநிறமான திருமேனியை உடையவரும், பறவைகளுக்கெல்லாம் அரசனான கருடனை வாஹனமாக உடையவரும், எப்பொழுதும் பெருமை குன்றாதவரும், ஆதிசேஷன் மீது பள்ளி கொண்டிருப்பவருமான அந்த பகவான் விஷ்ணுவையே நாம் உபாஸிக்கிறோம். ஒரு காலத்தில் நடந்த ஸம்பவம். முராஸுரனை ஸம்ஹாரம் செய்து பகவான் விஷ்ணு ஆதிசேஷனாகிய அழகிய இருக்கையில் சுகமாக வீற்றிருந்தார். அகில உலகுக்கும் ஆனந்தமளிக்கும் லக்ஷ்மீதேவி தன் பதியை மரியாதையுடன் இவ்வாறு வினவினாள்.

''பகவானே! அகில உலகையும் நீங்கள் பேணிக் காத்து வந்தாலும், உங்கள் பெரும் ஐச்வர்யத்தைச் சிறிதும் பொருட்படுத்தாமல், இப் பாற்கடலில் துயில் கொண்டிருக்கிறீர்கள். இதற்குக் காரணம் என்ன?''

பகவான் கூறினார், ''அழகிய முகமடையவளே! நான் உறங்கிக் கொண்டிருக்க வில்லை. ஆனால் தத்வத்தைப் பின்பற்றும் உள்நோக்கின் மூலம், என்னுடையதேயான (மிகப் பெருமை பொருந்திய) மாஹேச்வர தேஜஸை அநுபவித்துக் கொண்டிருக்கிறேன். தேவி! யோகிகள் தங்கள் கூர்மையான புத்தியின் மூலமாகத் தங்கள் மனதில் இந்தத் தேஜஸை தான் தர்சனம் செய்கிறார்கள்; மீமாம்ஸா* சாஸ்திரத்தைக் கற்றுத் தேர்ந்த வித்வான்கள் இந்த தேஜஸ்தான் வேதங்களின் ஸாரமான தத்வம் என்று தீர்மானம் செய்கிறார்கள்.''

---

* ஆறு தர்சனங்களில் ஒன்று. இதில் பூர்வ மீமாம்ஸை, உத்தர மீமாம்ஸை என்ற இரு பிரிவுகள் உண்டு.

அந்த மாஹேச்வர தேஜஸ் (பிரிவற்று) ஒன்றேயானது. மூப்பற்றது (காலத்தால் குன்றாதது). ஒளிமயமானது, ஆத்ம வடிவானது, நோய் - துன்பம் இவை இல்லாதது; பிரிவற்ற ஆனந்தத்தின் குவியல், அசைவற்றது (விருப்பம் எதுவும் இல்லாதது); அதற்கு ஒப்பான வேறு ஒன்று இல்லாதது. இவ்வுலகில் வாழும் உயிரினங்கள் அதனுடைய அதீனத்திலேயே இருக்கின்றன. நான் அதைத் தான் அநுபவித்துக் கொண்டிருக்கிறேன். தேவதைகளுக்கு ஈச்வரியே! இக்காரணத்தினால் தான் நான் உறங்கிக் கொண்டிருப்பது போல் தோன்றுகிறது.''

லக்ஷ்மி தேவி கூறினாள் :

''ஹ்ருஷீகேசரே! யோகிகளால் தியானிக்கத் தக்கவர் நீங்களே! உங்களைத் தவிர தியானம் செய்யத் தக்க வேறு ஒரு தத்வம் இருக்கிறதா என்ன? அதை அறிந்து கொள்ள எனக்கு ஆவலாக இருக்கிறது. அசைவன, அசையாதவை நிறைந்த இவ்வுலகைப் படைத்து, ஒடுக்குபவர் நீங்களே தான். நீங்கள் எல்லாம் வல்லவர். இத்தகைய நிலையில் இருந்தும் கூட, நீங்கள் இறுதியான உயர்ந்த தத்வத்திலிருந்து வேறுபட்டவரானால், அதை நான் அறிந்து கொள்ளுமாறு செய்யுங்கள்.''

பகவான் கூறினார் ''பிரியமானவளே! ஆத்மாவின் ஸ்வரூபம் த்வைதத்திலிருந்தும், அத்வைதத்திலிருந்தும் வேறுபட்டது. தனியானது; உண்மை - இன்மை இவைகளிலிருந்து விடுபட்டது; தொடக்கமும் முடிவும் இல்லாதது. தூய்மையான அறிவின் ஒளியால் காணக்கூடியதும், உயர்ந்த ஆனந்தத்தின் வடிவாக இருக்கும் காரணத்தால் அழகே வடிவானது. அதுதான் ஈச்வரத்தன்மையுடைய என் ஸ்வரூபம். ஆத்மா ஒன்றேயானது என்பது எல்லோராலும் அறிந்து கொள்ளத்தக்க விஷயம். கீதா சாஸ்திரம் இதைத்தான் விளக்குகிறது.''

அளவற்ற பொலிவுடன் விளங்கும் பகவான் விஷ்ணுவின் இச்சொற்களைக் கேட்டதும்,

''பகவானே! உங்களுடைய வடிவம், (ஸ்வரூபம்) மிக உயர்ந்தது; ஆனந்தமயமானது, மனதிற்கும் சொல்லுக்கும் அடங்காமல் அவற்றிற்கு அப்பாற்பட்டது என்றால், கீதை அதை எவ்வாறு உணர்த்துகிறது? என்னுடைய இந்த சந்தேகத்தைப் போக்குங்கள்'' என்றாள் லக்ஷ்மி தேவி.

பகவான் கூறினார் ''அழகியே! கீதையில் உள்ள என் நிலையை வர்ணித்துக் கூறுகிறேன். கேள்! வரிசைக்கிரமமாகச் சொன்னால், முதல் ஐந்து அத்யாயங்களை என் ஐந்து முகங்கள் என்று அறிந்து கொள்; அடுத்து உள்ள பத்து அத்யாயங்களை என் பத்து புஜங்கள் என்ற புரிந்து கொள்; ஓர் அத்யாயம் வயிறு என்றும், இரண்டு அத்யாயங்கள் என் பாதத் தாமரைகள் என்றும் தெரிந்து கொள். இவ்விதம் இந்தப் பதினெட்டு அத்யாயங்களும் ஈச்வரனை அடைய வாக்குவடிவமான ஸ்வரூபம் என்று புரிந்து கொள்ள வேண்டும்.*

இதை இவ்வாறு அறிந்து கொள்வதே, பெரிய பாதகங்களை அழிக்கக் கூடியதாகும். சிறந்த அறிவுள்ள மனிதன் கீதையின் ஓர் அத்யாயத்தையோ அல்லது அத்யாயத்தில் பாதியை யோ, அல்லது ஒன்று, பாதி அல்லது கால் சுலோகத்தையாவது ஒவ்வொரு நாளும் பயின் றால் ஸுசர்மாவைப் போன்று அவன் முக்தனாவான் (பிறப்பு இறப்பிலிருந்து விடுபடுவான்)

லக்ஷ்மீ தேவி கேட்டாள் ''தேவரே! ஸுசர்மா யார்? அவர் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்? என்ன காரணத்தினால் அவர் பிறப்பிறப்பிலிருந்து விடுபட்டார்?

---

* **ஶ்ருணு ஸுஶ்ரோணி வக்ஷ்யாமி கீ$_3$தாஸு ஸ்தி$_2$திமாத்மந: ।**
வக்த்ராணி பஞ்ச ஜாநீஹி பஞ்சாத்$_4$யாயாநநுக்ரமாத் ॥
த$_3$ஶாத்$_4$யாயாந் பு$_4$ஜாஶ்சைகமுத$_3$ரம் த்$_3$வௌ பதா$_3$ம்பு$_3$ஜே ।
ஏவமஷ்டாத$_3$ஶாத்$_4$யாயீ வாங்மயீ மூர்திரைஶ்வரீ ॥

(பத்ம - உத்தர 171/27-28)

பகவான் கூறினார் ''பிரியமானவளே! ஸுசர்மா மிகவும் தீய புத்தியுள்ளவன். பாவிகளில் அவன் தலையானவன். வேதங்களின் அறிவற்றவர்களாக, கொடிய செயல்களைச் செய்யும் அந்தணர்கள் உள்ள குடும்பம் ஒன்றில் அவன் பிறந்திருந்தான். அவன் தியானமோ, ஜபமோ செய்ய மாட்டான். ஹோமம் செய்வதில்லை; விருந்தினர்களை உபசரிப்பதில்லை; காம வெறியுள்ளவனாக இருந்ததால், இன்பங்களை அநுபவிப்பதிலேயே பற்றுள்ளவனாக இருந்தான். கலப்பையினால் வயலை உழுதும், இலைகளை விற்றும் வாழ்க்கையை நடத்தி வந்தான். கள் குடிக்கும் பழக்கமும் அவனிடம் இருந்தது. அவ்வாறே புலாலும் உண்டு வந்தான். இவ்விதம் அவன் தன் வாழ்நாளின் பெரும் பகுதியைக் கழித்து விட்டான். ஒரு நாள் அறிவிலியாகிய ஸுசர்மா இலைகள் கொண்டு வருவதற்காக ஏதோ ஒரு முனிவரின் தோட்டத்தில் சுற்றிக் கொண்டிருந்தான். அப்போது ஒரு கருநாகம் அவனைத் தீண்டிவிட்டது. ஸுசர்மா இறந்து விட்டான். அதன் பிறகு பற்பல நரகங்களை அடைந்து அங்குள்ள தண்டனைகளை அனுபவித்து விட்டு மனித உலகத்திற்குத் திரும்பி வந்தான். அங்கு அவன் பாரங்களைச் சுமக்கும் காளைமாடாகப் பிறந்தான். அச்சமயத்தில் ஒரு நொண்டி, தன் வாழ்க்கையை சௌகரியமாகக் கழிப்பதற்காக, அம்மாட்டை விலைக்கு வாங்கினான்; நொண்டியைத் தன் முதுகின் மீது சுமந்து கொண்டு மிகுந்த துன்பத்துடன் ஏழெட்டு ஆண்டுகளை அக்காளை மாடு கழித்தது. ஒரு நாள் மிக உயரமான ஓர் இடத்தில், அதிக நேரம் வரையில், நொண்டி மிக வேகமாகக் காளை மாட்டை ஓட்டினான். இதனால் மிகவும் களைப்படைந்த அது மிக வேகமாகத் தரையின் மீது விழுந்தது, மூர்ச்சையடைந்தது. அச்சமயம் ஆவலினால் உந்தப்பட்ட பலர் அங்கு ஒன்று கூடினார். அந்த மக்கள் கூட்டத்திலிருந்த ஒரு புண்யாத்மா, அந்த மாட்டிற்கு நன்மை செய்வதற்காக, அதற்குத் தமது புண்ணிய பலனை தானம் செய்தார். அதன் பிறகு மற்றும் சிலர் தாங்கள் செய்த புண்யச் செயல்களை நினைவு கூர்ந்து, அவற்றின் பலனை அதற்கு தானம் செய்தார்கள். அக்கூட்டத்தில் ஒரு வேசியும் நின்று கொண்டு இருந்தாள். அவளுக்குத் தான் செய்த புண்யச் செயல் எதுவும் நினைவிற்கு வரவில்லை. மக்கள் கண்டும் காணாமலும் அந்த மாட்டிற்காகச் சிறிது தியாகம் செய்தாள்.

அதன்பிறகு யமதர்ம ராஜனின் தூதர்கள், இறந்த அந்தப் பிராணியை முதலில் யமபுரிக்கு எடுத்துச் சென்றார்கள். வேசி அளித்த புண்ய பலனால் அம்மாடு புண்ணியசாலியாக ஆகிவிட்டது என்பதைக் கருத்தில் கொண்டு, அதை விட்டுவிட்டனர். அது பூவுலகிற்கு வந்து, சிறந்த குலத்தைச் சேர்ந்தவர்களும், ஒழுக்கமுடையவர்களுமான அந்தணர்கள் உள்ள ஒரு குடும்பத்தில் பிறந்தது. அப்போது கூட தன் முற்பிறவியில் நடந்த விஷயங்களின் நினைவு அவனுக்கு இருந்து கொண்டிருந்தது. தனது அறியாமையை விலக்கக்கூடியதும், மேன்மை அளிக்கக்கூடியதுமான தத்வத்தை அறிந்து கொள்ள விரும்பி, அந்த வேசியிடம் சென்று, அவள் செய்த தானத்தைப் பற்றிக் குறிப்பிட்டு அவன் ''நீ எத்தகைய புண்யத்தைத் தானம் செய்தாய்?'' என வினவினான். வேசி இவ்வாறு விடை பகர்ந்தாள். ''கூண்டில் அமர்ந்து கொண்டிருந்த கிளி ஒவ்வொரு நாளும் ஏதோ ஒன்று சொல்லும். அதைக் கேட்டதனால் என் மனம் புனிதமாகிவிட்டது. அந்தப் புண்யத்தைத் தான் நான் உனக்கு தானம் செய்தேன்'' இதன் பிறகு இருவரும் இது பற்றிக் கிளியிடம் கேட்டனர். அப்போது தன் முற்பிறவியை நினைவு கூர்ந்து, அக்கிளி பண்டைய கதையைக் கூறத் தொடங்கியது.

கிளி கூறியது ''முற்பிறவியில் நான் வித்வானாக இருந்தும் கூட, வித்வான் என்ற கர்வத்தினால் மோஹம் அடைந்திருந்தேன். குணமுள்ள வித்வான்களிடத்திலும் பொறாமை ஏற்படும் அளவிற்கு என் விருப்பு-வெறுப்பு அதிகமாயிற்று. பிறகு காலப் போக்கில் நான் மரணம் அடைந்தேன். பிறகு வெறுக்கத்தக்க பல உலகங்களில் நான் சுற்றித் திரிந்தேன். அதன் பிறகு இவ்வுலகிற்கு வந்தேன். நல்லவரான குருவை நிந்தை செய்ததால், நான்

கிளியாகப் பிறந்தேன். நான் பாவியாக இருந்த காரணத்தால், என் தாய்-தந்தையர்களைச் சிறு வயதிலேயே இழந்தேன். கோடை காலத்தில் ஒரு நாள் வெய்யில் கொளுத்திக் கொண்டிருந்த வழியில் கீழே விழுந்து கிடந்தேன். சிறந்த முனிவர் ஒருவர் என்னை அங்கிருந்து எடுத்துக் கொண்டு வந்து, மஹாத்மாக்களின் பாதுகாப்பில் ஆச்ரமத்தின் உள்ளே ஒரு கூட்டில் என்னை அடைத்து வைத்தார். அங்கேயே எனக்கு கல்வி புகட்டப்பட்டது. முனிகுமாரர்கள் மிகுந்த சிரத்தையுடன், மதிப்பு அளித்து, கீதையின் முதல் அத்யாயத்தைத் திரும்பத் திரும்பச் சொன்னார்கள். அவர்கள் பாடம் சொல்வதைக் கேட்டு, நானும் திரும்பத் திரும்பச் சொல்ல ஆரம்பித்தேன். இதற்கிடையில் திருடும் பழக்கமுள்ள ஒரு வேடன் அங்கிருந்து என்னைத் திருடினான். அதன் பின்னர் இப்பெண் என்னை விலைக்கு வாங்கிவிட்டாள். இதுதான் என் கதை; இதை நான் உங்களிடம் சொல்லிவிட்டேன். முற்காலத்தில் இந்த முதல் அத்யாயத்தை நான் மனப்பாடம் செய்தேன்; அதன் மூலமாக என் பாவங்களைப் போக்கிக் கொண்டேன். பிறகு அதனாலேயே இந்த வேசியின் மனமும் தூய்மையடைந்தது. அதன் புண்ய பலனால் ஸுசர்மாவும் பாவம் நீங்கப் பெற்றான்''.

இவ்வாறு ஒருவருக்கொருவர் உரையாடிக் கொண்டும், கீதையின் முதல் அத்யாயத்தின் பெருமையைப் புகழ்ந்து கொண்டும், அம்மூவரும் இடைவிடாமல் தங்கள் வீட்டில் கீதையை மனப்பாடம் செய்யத் தொடங்கினார்கள். பிறகு ஞானம் பெற்று, அவர்கள் முக்தி அடைந்தார்கள். ஆகவே கீதையின் முதல் அத்யாயத்தைப் படிப்பவர்கள், கேட்பவர்கள், மனப்பாடம் செய்பவர்கள் இவர்களுக்குப் பிறவிக் கடலைக் கடப்பதில் ஒரு சிரமமும் ஏற்படாது.


ஸ்ரீமத் பகவத்கீதையின் சுலோக எண்ணை நினைவில் வைத்துக் கொள்வதற்கான வழி

மனப்பாடம் ஆன அத்யாயத்தை, புத்தகத்தைப் பார்க்காமல், தலை கீழ் வரிசையாக அதாவது கடைசி சுலோகத்தில் தொடங்கி முதல் சுலோகம் வரை சொல்ல வேண்டும். 12வது அத்யாயத்தைச் சொல்ல வேண்டுமானால் முதலில் 20வது சுலோகம், பிறகு 19வது அதன் பிறகு 18 வது - இவ்விதம் முதல் சுலோகம் வரை சொல்ல வேண்டும்.

*மனப்பாடம் செய்த அத்யாயத்தை, புத்தகத்தைப் பார்க்காமல், சுலோக எண்ணோடு சேர்த்து, குறிப்புக்காக மாத்திரம் முதலடியைச் சொல்ல வேண்டும். அதாவது 12வது அத்யாயத்தைச் சொல்ல வேண்டுமானால், இவ்விதம் சொல்ல வேண்டும். முதலில் சுலோகம் - **ஏவம் ஸததயுக்தா:**, இரண்டாவது **மய்யாவேஶ்ய;** மூன்றாவது - **யே த்வக்ஷரம்** - இப்படி.*

மனப்பாடம் ஆன அத்யாயத்தை, புத்தகத்தைப் பார்த்து, இவ்வாறு பாராயணம் செய்ய வேண்டும் - முதல் சுலோகம் இது; ஐந்தாவது சுலோகம் இது; பத்தாவது சுலோகம் இது என்று ஐந்து ஐந்து சுலோகங்களாக இடைவெளிவிட்டு அத்யாயம் முழுவதையும் பாராயணம் செய்ய வேண்டும். அதன்பின் புஸ்தகம் முழுவதையும் மனப்பாடம் செய்ததை முதல் சுலோகம் இது, இரண்டாவது சுலோகம் இது, மூன்றாவது சுலோகம் இது என்று கூறியவாறு படிக்கவும். இவ்வாறு ஐந்து ஐந்து சுலோகங்களாக இடைவெளிவிட்டு சொல்லும்போது, ஏதாவது மறந்து விட்டால், அதற்கு முன்னுள்ளதைப் படிப்பதனால் ஐந்து பத்து எண்ணுள்ள சுலோக எண்களை மனத்தில் கொள்வது இயலும்.

(தொடர்ச்சி 15-ம் பக்கம்)



ஸ்ரீமத்பகவத்கீதையின் இரண்டாவது அத்யாயத்தின் பெருமை

பகவான் கூறுகிறார் ''லக்ஷ்மீ, (கீதையின்) முதல் அத்யாயத்தின் பெருமையை விளக்கும் சிறந்த கதையை நான் உனக்கு எடுத்துரைத்தேன். இப்போது மற்ற அத்யாயங்களின் பெருமையைப் பற்றிக் கேள்.

தக்ஷிண பாரதத்தில் வேதங்களை அறிந்த அந்தணர்கள் வசிக்கும் புரந்தரபுரம் என்ற பெயருள்ள நகரில் தேவசர்மா என்ற பெயர் கொண்ட, நன்கு கற்றறிந்த வித்வானான அந்தணர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் விருந்தினரைப் பூஜிப்பவர்; வேதம் கற்பதில் ஆர்வமுள்ளவர்; வேதங்கள் - சாஸ்திரங்கள் இவற்றில் சிறப்பான அறிவுடையவர்; யக்ஞங்களைச் செய்பவர் தவம் செய்பவர்களுக்கு எப்போதும் பிரியமானவர். சிறந்த பொருள்களைக் கொண்டு அக்னியில் ஹோமம் செய்து, வெகுகாலம் வரையில் தேவதைகளைத் திருப்தி செய்துவந்தார். ஆனால் தர்மாத்மாவான அந்த அந்தணருக்கு ஒரு பொழுதும், நிலைத்த அமைதி கிடைக்கவில்லை. சிறந்த நன்மையைப் பயக்கும் தத்வத்தின் ஞானத்தை அடைய விருப்பங் கொண்டு, தினந்தோறும் ஏராளமான பொருட்களைக் கொண்டு, வைராக்யமுடைய தவச்செல்வர்களுக்குப் பணிவிடை செய்யத் தொடங்கினார். இவ்விதம் நன்மை நிறைந்த வழியில் அவர் வெகு காலம் வாழ்ந்து வந்தார். அதன் பிறகு ஒருநாள் அவர் கண் முன்பு தியாக இயல்புள்ள ஒரு மஹான் தோன்றினார். அவர் மிகுந்த அநுபவமுள்ளவர்; எதையும் எதிர்பாராதவர்; யோகியானதால் மூக்கின் நுனி மீது பார்வையை வைத்திருப்பவர்; அமைதியான உள்ளங் கொண்டவர். இடைவிடாது பரமாத்மாவின் சிந்தனையில் ஈடுபட்டு அவர் எப்பொழுதும் ஆனந்தத்தில் திளைத்திருந்தார். எப்பொழுதுமே திருப்தி கொண்ட அத்தபஸ்வியை தூயமனத்துடன் தேவசர்மா வணங்கி, ''அமைதி நிறைந்த நிலை எனக்கு எப்படிக் கிடைக்கும்?'' என வினவினார். அப்போது ஆத்ம ஞானியாகிய அந்த மஹான் ஸௌபுரம் என்ற கிராமத்தில் வசித்து வந்த ஆட்டிடையனான மித்ரவான் என்பவனைப் பற்றிய விவரங்களைத் தெரிவித்து, ''அவனே உங்களுக்கு உபதேசம் அளிப்பான்'' என்று கூறினார்.

இதைக் கேட்ட, தேவசர்மா அந்த மஹாத்மாவின் பாதங்களில் விழுந்து வணங்கினார். செழிப்பு நிறைந்த ஸௌபுர கிராமத்தை அடைந்ததும், அதன் வடதிசையில் விசாலமான காடு ஒன்று இருப்பதைக் கண்டார். அதே காட்டில் ஆற்றங்கரையில் ஒரு பாறையின் மீது மித்ரவான் அமர்ந்திருந்தான். அவனுடைய கண்கள் ஆனந்த பெருக்கால் அசைவற்றிருந்தன. அவன் கண்களை இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். இயற்கையிலேயே ஒன்றுக்கொன்று பகைமையுடைய பிராணிகள் தங்கள் பகைமையை விட்டுவிட்டு அந்த இடத்தில் ஒன்று கூடி அந்த இடத்தைச் சூழ்ந்து கொண்டிருந்தன. அங்கு காற்று மென்மையாக வீசிக் கொண்டிருந்தது. விலங்குகளின் கூட்டங்கள் அமைதியாக உட்கார்ந்து கொண்டிருந்தன. கருணை நிறைந்ததும், ஆனந்த மயமானதும், மனத்தைக் கொள்ளை

கொள்ளும் தன்மையுடைய பார்வை மூலம் மித்ரவான் பூமியின் மீது அமுதத்தைப் பொழிந்து கொண்டிருந்தது போல் இருந்தான். இந்த வடிவில் அவனைக் கண்ட தேவசர்மாவின் மனம் மகிழ்ச்சியடைந்தது. மிகவும் ஆவலுள்ளவராக ஆகி, மிகுந்த பணிவுடன் மித்ரவானுக்கருகே சென்றார். மித்ரவானும் தலையைச் சிறிது அசைத்து தேவசர்மாவை வரவேற்று உபசரித்தான். அதன் பிறகு வித்வானான தேவசர்மா வேறு எதிலும் மனத்தைச் செலுத்தாமல், மித்ரவானுக்கு மிக அருகில் சென்றார். அவனுடைய தியான காலம் முடிவுற்றவுடன், தேவசர்மா தமது மனத்தில் இருந்த விஷயத்தைப் பற்றிக் கேட்டார். ''பெரும் பேறு பெற்றவனே! நான் ஆத்மாவைப் பற்றிய ஞானத்தை அடைய விரும்புகிறேன். என்னுடைய இந்த விருப்பம் நிறைவேற, சித்தி அடைவதற்கான, ஏதாவது ஓர் உபாயத்தை உபதேசித்தருள வேண்டும்!''

தேவசர்மாவின் சொற்களைக் கேட்டுவிட்டு மித்ரவான் சிறிது நேரம் யோசித்தான். அதன் பிறகு இவ்வாறு கூறினான். ''அறிஞரே! ஒரு காலத்தில் நடந்த விஷயம். காட்டிற்குள் நான் ஆடுகளைப் பாதுகாத்துக் கொண்டிருந்தேன். இதற்கிடையில் ஒரு புலி மீது என் பார்வை விழுந்தது. எல்லாவற்றையும் விழுங்க விரும்புவது போல் இருந்தது அதன் பார்வை. நான் இறந்துவிடுவேனோ என்று அஞ்சினேன். புலி வருவதைக் கண்ட நான் ஆட்டு மந்தையை முன்னால் ஓட்டி, அங்கிருந்து தப்பி ஓடினேன். ஆனால் பயமனத்தையும் விடுத்து, எவ்விதத் தடங்கலுமின்றி, ஓர் ஆடு விரைவில் ஆற்றங்கரையில் இருந்த அந்தப் புலியினருகே சென்றது. பிறகு அந்தப் புலியும் பகைமையைத் துறந்து ஒன்றும் செய்யாமல் நின்று கொண்டது. இந்நிலையில் அதைக் கண்ட ஆடு கூறியது ''புலியே! உனக்கு விருப்பமான உணவு கிடைத்திருக்கிறது. என்னுடைய உடலிலிருந்து மாமிசத்தை வெளியே எடுத்து, விருப்பத்துடன் சாப்பிடு. நீ ஏன் இவ்வளவு நேரம் நின்று கொண்டிருக்கிறாய்? என்னைச் சாப்பிட வேண்டும் என்ற எண்ணம் ஏன் உன் மனதில் ஏற்படவில்லை?''

புலி கூறிற்று ''ஆடே! இந்த இடத்திற்கு வந்ததுமே என் மனத்திலிருந்து பகைமை உணர்ச்சி அகன்று விட்டது. பசி, தாகங்களும் அடங்கிவிட்டன. ஆகவே நீ அருகே வந்திருந்தும் கூட நான் உன்னைப் புசிக்க விரும்பவில்லையே''.

புலி இவ்விதம் கூறியதும் ஆடு கூறிற்று ''எப்படி நான் பயமற்றவனாக ஆனேன் என்பது எனக்குத் தெரியாது. இதற்குக் காரணம் என்னவாக இருக்கக் கூடும். உனக்குத் தெரிந்தால் அதை என்னிடம் கூறு'' இதைக் கேட்டுவிட்டு புலி கூறியது ''எனக்கும் தெரியாது. செல், எதிரில் நின்று கொண்டிருக்கும் மஹானைக் கேட்போம்.'' இவ்வாறு தீர்மானித்து, அவ்விரண்டும் அங்கிருந்து சென்று விட்டன. அந்த இரண்டு பிராணிகளின் சுபாவத்தில் விசித்திரமான இந்த மாறுதலைக் கண்ட நான் மிகுந்த வியப்பில் ஆழ்ந்தேன். இதற்கிடையில் என்னிடமே வந்து அவை காரணத்தைக் கேட்டன. அங்கே ஒரு மரக்கிளையில் ஒரு பெரிய குரங்கு ஒன்று இருந்தது. அவை இரண்டுடன் சேர்ந்து கொண்டு, நானும் குரங்கிடம், 'காரணம் என்ன'வென்று கேட்டேன். அந்தணச் செம்மலே! நான் கேட்டதற்கிணங்க வானரராஜன், எனக்கு மதிப்பளித்துக் கூறியது. ''ஆட்டிடையனே! இந்த விஷயம் தொடர்பாக முன்னொரு காலத்தில் நடந்த சம்பவம் ஒன்றை நான் கூறுகிறேன். கேள்! நம் எதிரிலுள்ள இக்காட்டிற்குள் பெரிய ஒரு சிவன் கோயில் இருப்பதைப் பார்!* முன்னொரு காலத்தில் இங்கே ஸுகர்மா என்ற பெயர் கொண்ட கூரிய அறிவு படைத்த அந்தணர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் தவத்தில் சிறப்பாக ஈடுபட்டு கோயிலில் உபாஸனை செய்து வந்தார். காட்டிலிருந்து அவர் மலர்களைத் திரட்டிக் கொண்டு வருவார்; ஆற்றிலிருந்து நீர் கொண்டு வந்து, பூஜிக்கத் தக்க பகவான் சங்கரருக்கு அபிஷேகம்

* *இதில் பிரம்மாவால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்கம் இருக்கிறது.*

செய்வார்; மலர்களைக் கொண்டு அர்ச்சனை செய்வார். இவ்விதம் பகவானுக்கு ஆராதனை செய்து கொண்டு ஸுகர்மா அங்கே வாழ்ந்து வந்தார். வெகுகாலம் கழித்து, அவரருகே யாரோ ஒரு விருந்தாளி வந்து சேர்ந்தார். அவருக்கு உணவு அளிக்கும் பொருட்டு, ஸுகர்மா பழங்களைக் கொண்டு வந்து விருந்தாளிக்கு அர்ப்பணம் செய்தார். பிறகு அவரிடம் கூறினார், ''அறிஞரே! தத்வ ஞானத்தை அடையும் விருப்பத்தாலேயே பகவான் சங்கரருக்கு ஆராதனை செய்கிறேன். ஆராதனையின் பலன் இன்று நிறைவேறி விட்டது. ஏனெனில் உங்களைப் போன்ற மஹான் எனக்கு அருள் பாலித்திருக்கிறார்.''


ஸுகர்மா கூறிய இனிய சொற்களைக் கேட்டதும், தவசீலரும், மஹாத்மாவுமான அந்த அதிதிக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. ஒரு பெரிய கல்லின் மீது கீதையின் இரண்டாவது அத்யாயத்தை எழுதி முடித்தார். அதைப் படிக்குமாறும், மனப்பாடம் செய்யுமாறும் அவ்வந்தணருக்குக் கட்டளையிட்டவாறே கூறினார் ''அந்தணரே! இதன் மூலம் ஆத்ம சம்பந்தமான உங்களுடைய விருப்பம் தானாகவே கைகூடும்'', எனக் கூறி, அறிவு நிறைந்தவரும் தவச் செல்வருமான ஸுகர்மாவின் எதிரிலேயே, அவர் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, அவர் மறைந்து விட்டார். ஸுகர்மா வியப்படைந்து, அவர் ஆணைப்படி இடைவிடாமல் கீதையின் இரண்டாம் அத்யாயத்தைப் பாராயணம் செய்யத் தொடங்கினார். அதன் பிறகு வெகுகாலம் கழித்து, அவரது மனம் தூய்மை அடைந்தது; அவர் ஆத்ம ஞானத்தை அடைந்தார். அதனால் அவர் சென்ற தபோவனங்கள் அனைத்திலும் அமைதி நிலவியது. அவ்விடங்களில் தட்ப-வெப்பம், விருப்பு-வெறுப்பு முதலிய இடையூறுகள் விலகின. அந்த இடங்களில் பசி-தாகம் இவற்றின் துன்பமும் ஏற்படவில்லை. அச்சம் என்பதே முற்றிலும் இல்லாமற் போய்விட்டது. இவை அனைத்தும் கீதையின் இரண்டாவது அத்யாயத்தை ஜபம் செய்த அந்தணர் ஸுகர்மாவின் தவத்தின் பெருமை என்று அறிந்து கொள்ள வேண்டும்.


மித்ரவான் கூறினான் ''அப்பெரிய குரங்கு இவ்வாறு கூறியதும் ஆடு, புலி இவற்றுடன் நான் அந்த கோயிலுக்குச் சென்றேன். அங்கு சென்று பாறையின் மீது எழுதப்பட்டிருந்த கீதையின் இரண்டாவது அத்யாயத்தைப் பார்த்தேன்; படித்தேன். அதைத் திரும்பத் திரும்பச் சொன்னதன் (ஆவ்ருத்தி செய்ததன்) பயனாக, நான் தவத்தின் எல்லையை அடைந்தேன். ஆகவே, மங்களகரமானவரே! நீங்களும் எப்பொழுதும் இரண்டாவது அத்யாயத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருங்கள். அப்படிச் செய்தால், முக்தி கிடைப்பது கடினமே இல்லை.''

பகவான் கூறுகிறார் ''இனியவளே! மித்ரவான் இவ்வாறு கட்டளையிட்டதும் தேவசர்மா அவனைப் பூஜித்து, வணங்கி புரந்தரபுரத்திற்குப் புறப்பட்ட பின், அங்கே ஒரு கோயிலில், முன்பு கூறப்பட்ட ஆத்ம ஞானியைக் கண்டு, அவரிடம் நடந்தது எல்லாவற்றையும் தெரிவித்தார். முதல் பணியாக, அவரிடமிருந்து இரண்டாவது அத்யாயத்தைக் கற்றறிந்தார். அவரிடம் உபதேசம் பெற்று, உள்ளத் தூய்மை அடைந்த தேவசர்மா தினந்தோறும் மிகுந்த சிரத்தையுடன் இரண்டாவது அத்யாயத்தை மனப்பாடம் செய்யத் தொடங்கினார். மனனம் செய்யச் செய்ய தேவசர்மாவின் மனம் நிலைத்த அமைதி பெற்றது. முடிவில் பரமபதத்தையும் பெற்றார். லக்ஷ்மீ! இரண்டாவது அத்யாயத்தின் பெருமையை விளக்கும் இந்தக் கதையை நான் இப்போது உனக்குக் கூறினேன்.''

ஸ்ரீமத்பகவத்கீதையின்

மூன்றாவது அத்யாயத்தின் பெருமை





பகவான் கூறுகிறார் ''இனியவளே! ஜனஸ்தானத்தில் கௌசிக குலத்தில் பிறந்த ஜடன் என்ற பெயர் கொண்ட அந்தணன் இருந்தான். அவன் தன் ஜாதிக்குரிய தர்மங்களை விட்டு விட்டு, வியாபாரத் தொழிலில் ஈடுபட்டான். பிறன் மனை நயக்கும் தீய பழக்கம் அவனுக்கு ஏற்பட்டது. அவன் எப்பொழுதும் சூதாடுவான்; கள் குடிப்பான்; வேட்டையாடி பிராணிகளுக்கு ஹிம்ஸையும் செய்து வந்தான். இவ்விதமாக அவன் தன் காலத்தைக் கழித்தான். செல்வமனைத்தையும் இழந்த பின்னர், வாணிபம் செய்வதற்காக, வடக்கு திசையில் வெகுதூரம் சென்று விட்டான். அங்கே செல்வம் சம்பாதித்து, வீட்டிற்குத் திரும்பினான். பாதையில் அதிக தூரத்தைக் கடந்து விட்டான். ஒரு நாள் கதிரவன் மறைந்ததும், நாற்புறங்களிலும் இருள் சூழ்ந்தது. அப்போது ஒரு மரத்தடியில் கொள்ளைக்காரர்கள் அவனைத் தாக்கினர். விரைவிலேயே அவனைக் கொன்று விட்டனர். அவன் அறநெறி பிறழ்ந்தவன் ஆனதால், அவன் ஒரு பெரிய பயங்கரமான பிரேதமாக ஆகிவிட்டான்.

அவனுடைய மகன் சிறந்த தர்மாத்மா; வேதங்களைக் கற்றறிந்த வித்வான். தந்தை திரும்பி வருவார் என்று எண்ணி அவர் வருவதை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். அவர் திரும்பி வராததால், அவரைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காக அவனும் கிளம்பிச் சென்றான். ஒவ்வொரு நாளும் அவன் தேடினான்; வழிப் போக்கர்களைக் கேட்டும் கூட தந்தையைப் பற்றிய எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. அதன் பிறகு ஒரு நாள் தன் தந்தைக்கு உதவியாளராக இருந்தவரைச் சந்தித்தான். அவரிடமிருந்து எல்லா விவரங்களையும் அறிந்து கொண்ட அவன், தந்தையின் மரணச் செய்தியைக் கேட்டு மிகுந்த துயரத்தை அடைந்தான். அவன் சிறந்த அறிவாளி. எல்லா விஷயங்களையும் நன்கு யோசித்து, தந்தையின் உத்தரக் கிரியைகளைச் செய்யும் விருப்பத்துடன், வேண்டிய பொருள்களைத் தன்னுடன் எடுத்துக் கொண்டு, காசிக்குச் செல்லத் தீர்மானித்தான். வழியில்

ஏழெட்டு இடங்களில் தங்கி, ஒன்பதாவது நாளன்று, அவனுடைய தந்தை கொல்லப்பட்ட அதே மரத்தடியை அடைந்தான். அந்த இடத்தில் அவன் ஸந்தியாவந்தனம் செய்தான். கீதையின் மூன்றாவது அத்யாயத்தைப் பாராயணம் செய்தான். இதே சமயத்தில் ஆகாயத்தில் பயங்கரமான சப்தம் எழுந்தது. அவன் தன் தந்தையை கோர வடிவத்தில் கண்டான். அதைத் தொடர்ந்து அவன் முன்பு திவ்யமான ஒரு விமானம் தென்பட்டது. அது மிகுந்த ஒளி வீசிக் கொண்டிருந்தது. அதில் அநேக சிறிய மணிகள் கட்டப்பட்டிருந்தன. அவ்விமானத்தின் பேரொளியால் திசைகள் எல்லாம் உலகில் காண்பதற்கரிய பிரகாசத்துடன் விளங்கின. இந்தக் காட்சியைக் கண்டதும் அவன் மனத்தில் இருந்த கவலை அகன்று விட்டது. விமானத்தில் தன்னுடைய தந்தை திவ்யமான வடிவம் பெற்றுப் பொலிவுடன் விளங்குவதைக் கண்டான். அவரது உடலில் பட்டாடை பொலிவுடன் விளங்கியது. முனிவர்கள் அவரைத் துதி செய்து கொண்டிருந்தார்கள். அவரைக் கண்டவுடனேயே மகன் அவரை வணங்கினான்; அப்போது தந்தையும் அவருக்கு ஆசி அளித்தார்.

அதன் பிறகு அவன் நடந்த செய்திகளைப் பற்றி தன் தந்தையிடம் கேட்டான். அதற்கு விடையளிக்கும் வகையில், தந்தை எல்லா விஷயங்களையும் கூறிவிட்டு, ''மகனே! விதிவசத்தால் நான் இறந்த இடத்தில் கீதையின் மூன்றாவது அத்யாயத்தைப் பாராயணம் செய்து, இந்த சரீரத்தினால் செய்யப்பட்ட வினைகளின் பயனாய் ஏற்பட்டதும், எளிதில் விடுபட முடியாததுமான தளையிலிருந்து என்னை விடுவித்துவிட்டாய். ஆகவே இப்போது வீட்டிற்குத் திரும்பி விடு. எதற்காக நீ காசி சென்று கொண்டிருக்கிறாயோ, அந்த நோக்கம் இச்சமயம் கீதையின் மூன்றாவது அத்யாயத்தைப் பாராயணம் செய்ததாலேயே நிறைவேறிவிட்டது'' என்றார். தந்தை இவ்வாறு கூறியதும், மகன் ''என்னுடைய நன்மைக்கான உபதேசத்தைக் கூறியருளுங்கள். நான் செய்யவேண்டிய கடமை ஏதும் இருக்குமாகில் அதையும் கூறுங்கள்'' என வினவினான். அப்போது அவனுடைய தந்தை, ''பாவமற்றவனே! மேலும் நீ இப்பணியைச் செய்யவேண்டும். நான் செய்த செயல்களையே என் சகோதரனும் செய்திருக்கிறான். இதனால் அவன் கோரமான நரகத்தில் அவதிப்படுகிறான். அவனையும் நீ கடையேற்றிவிட வேண்டும்; அவ்வாறே நரகத்தில் உழலும் என் குலத்தைச் சேர்ந்த மற்றவர்களும் உன்னால் கடைத்ததேற வேண்டும்; இதுதான் என் விருப்பம். எந்த ஸாதனை மூலமாக என்னைத் துன்பத்திலிருந்து விடுவித்தாயோ, அதையே மற்றவர்கள் விஷயத்திலும் கையாண்டு, அவர்களை உய்விப்பது பொருத்தமாகும். அதை அநுஷ்டித்து, அதன் புண்யபலனை நரகத்தில் உழலும் ஜீவர்களுக்கு சங்கல்பம் மூலமாகக் கொடுத்துவிடு. இதன் மூலமாக எல்லா மூதாதையர்களும் என்னைப் போலவே நரகயாதனைகளிலிருந்து விடுபட்டு விரைவிலேயே விஷ்ணுவின் பரமபதத்தை அடைந்து விடுவார்கள்'' என்றார் அவர்.

தந்தை கூறிய செய்தியைக் கேட்ட மகன் ''அப்பா! தங்களது விருப்பப்படியே நரகத்தில் உழலும் எல்லா ஜீவர்களையும் நரகத்திலிருந்து கரையேற்றி விடுவேன்'' என்று உறுதியளித்தான். இதைக் கேட்ட தந்தை கூறினார், ''மகனே! அவ்வாறே ஆகுக. உனக்கு நன்மை உண்டாகுக! எனக்கு மிகவும் பிடித்தமான செயல் நிறைவேறி விட்டது.'' இவ்விதம் மகனுக்கு ஆறுதல் அளித்துவிட்டு, அவன் தந்தை விஷ்ணுவின் பரமபதத்திற்குச் சென்று விட்டார். அதன் பிறகு அவனும் ஜனஸ்தானத்திற்குத் திரும்பி வந்தான். பகவான் ஸ்ரீ கிருஷ்ணருடைய கோயிலில் அவர் சந்நிதானத்தில் அமர்ந்து கொண்டு, தந்தையின் கட்டளைப்படி கீதையின் மூன்றாவது அத்யாயத்தைப் பாராயணம் செய்யத் தொடங்கினான். நரகத்தில் உழலும் ஜீவர்களைக் கடைத்தேற்றும் விருப்பத்துடன், அதற்கு உரிய ஸங்கல்பம் செய்து, கீதையைப் பாராயணம் செய்த புண்யபலன் அனைத்தையும் அவர்களுக்குக் கொடுத்தான்.

இதற்குள் பகவான் விஷ்ணுவின் தூதர்கள், நரகத்திலுள்ள ஜீவர்களை விடுவிப்பதற்காக, யமதர்மராஜனிடம் வந்தனர். யமதர்மராஜன் அவர்களை நன்கு உபசரித்து, அவர்களது நலனைப் பற்றிக் கேட்டார். அவர்கள் கூறினார்கள் ''தர்மராஜனே! நாங்கள் எல்லா விதங்களிலும் மகிழ்ச்சியுடன் இருக்கிறோம்.'' இவ்விதம் விஷ்ணு தூதர்களை உபசரித்து விட்டு, பித்ரு லோகத்தின் அதிபதியும் சிறந்த அறிவாளியுமான யமன் அவர்கள் வந்த காரணத்தைக் கேட்டார்.

அப்போது விஷ்ணு தூதர்கள் கூறினார்கள் ''ஆதிசேஷன் மீது பள்ளி கொண்டிருக்கும் பகவான் விஷ்ணு உங்களிடம் சொல்வதற்காக, எங்கள் மூலமாக செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார். எங்கள் மூலமாக உங்கள் நலனைப் பற்றி அவர் கேட்கிறார். ''நரகத்தில் உழலும் பிராணிகளையும் விடுவித்து விடுங்கள்'' என்ற இந்தக் கட்டளையை இட்டிருக்கிறார்.''

அளவற்ற தேஜஸ் உடைய பகவான் விஷ்ணுவின் ஆணைக்குச் செவிமடுத்துத் தலை வணங்கி யமதர்மராஜன் அதை ஏற்றுக் கொண்டார். மனத்திற்குள் சிறிது யோசித்தார். அதன் பிறகு மதம் பிடித்த நரக வாழ் ஜீவர்கள் விடுவிக்கப்பட்டதைக் கண்டு, அவர்களுடன் கூட, யமதர்மராஜனும் பகவான் விஷ்ணுவின் உறைவிடமான வைகுண்டத்திற்குச் சென்றார். சிறந்த விமானத்தில் அமர்ந்து யமதர்மராஜன் பாற்கடலைச் சென்றடைந்தார். அதில் கோடி சூரியர்களின் ஒளிக்கு ஒப்பான ஒளியுடையவரும், நீல நிறத் தாமரை இதழ் போன்று நீல வண்ணம் கொண்டு அழகுற விளங்கும் உலகநாதனும், அகில உலகுக்கும் குருவுமான ஸ்ரீ ஹரியை தர்சனம் செய்தார். பகவானுடைய பொலிவு அவருடைய படுக்கையாக ஆன சேஷநாகத்தின் படங்களில் உள்ள மணிகளின் பிரகாசத்தால், இருமடங்காக இருந்தது. அவர் ஆனந்தத்தோடு கூடியவராகக் காட்சி அளித்துக் கொண்டிருந்தார். அவர் இதயம் மகிழ்ச்சியினால் நிறைந்து இருந்தது. லக்ஷ்மி தேவி எளிமை நிறைந்த தன் பார்வையால் அன்புடன் அவரைத் திரும்பத் திரும்ப பார்த்த வண்ணமாக இருந்தாள். நான்கு புறங்களிலும் யோகிகள் பகவானுக்குப் பணிவிடை செய்வதற்காக நின்று கொண்டிருந்தார்கள். அந்த யோகிகள் தியானத்தில் இருந்ததால், அவர்களுடைய கண்மணிகள் அசைவற்று இருந்தன போன்று தோன்றியது. தேவராஜனான இந்திரன் தன் விரோதிகளை வெல்லும் நோக்கத்துடன் பகவானைத் துதி செய்து கொண்டிருந்தான். ப்ரம்ம தேவனின் திருமுகத்திலிருந்து தோன்றிய வேதாந்த வாக்கியங்கள் வடிவெடுத்து பகவானின் குணங்களைப் பாடித் துதித்தன. பகவான் பரிபூர்ணமாக மகிழ்ச்சி கொண்டவராக இருந்தார்; பகவான் தமது ஸ்வரூபமேயான, அசைவன அசையாதன நிறைந்த அகில உலகையும் ஆனந்தம் நிறைந்த பார்வையால் மகிழச் செய்து கொண்டிருந்தார். சேஷ நாகத்தின் பிரகாசத்தினால் ஒளியூட்டப்பட்டும், அதே போன்று எங்கும் வியாபிக்கும் திவ்யமான வடிவம் தாங்கிக் கொண்டும், நீலநிறத் தாமரை போன்ற ச்யாமள நிறம் கொண்ட ஸ்ரீ ஹரி, நிலவொளியால் அழகுற விளங்கும் ஆகாயம் போன்று விளங்கினார். இவ்விதம் பகவானது காட்சியைக் கண்டு, பேரறிவாளியான யமதர்மராஜன் அவரைத் துதி செய்யத் தொடங்கினார்.

''அகிலமனைத்தையும் படைக்கும் பரமேச்வரா! உங்கள் மனம் மிகவும் தூய்மையாக, மாசற்றதாக இருக்கிறது. உங்கள் திருமுகத்திலிருந்தே வேதங்கள் வெளிவந்தன. நீங்கள் விச்வமே வடிவானர்; இவ்வுலகம் சரிவர இயங்குவதற்கு விதிமுறையை அமைப்பவரும் நீங்களே! பிரம்மதேவனும் நீங்களே! உங்களுக்கு நமஸ்காரம். தங்களுடைய வலிமை, வேகம் இவற்றின் காரணமாக, வெல்ல முடியாதவர்கள் என்று கருதப் படும் மாபெரும் அஸுரர்களின் கர்வத்தைப் பொடிப் பொடியாக்கிய பகவான் விஷ்ணுவே! உங்களுக்கு நமஸ்காரம். உலகைக் காப்பாற்றும் சமயத்தில் ஸத்வமயமான வடிவைத் தாங்குபவரே! உலகத்திற்கு ஆதாரமாக உள்ளவரே! எங்கும் நிறைந்தவரான ஸ்ரீ ஹரியே! உங்களுக்கு நமஸ்காரம். உடல் படைத்தோர்களின் பாவக் குவியல்களை அழிக்கும் பரமாத்மாவே! உங்களுக்கு நமஸ்காரம். நெற்றியில் உள்ள கண்ணைச் சிறிது திறந்தாலும், நெருப்பின் ஜ்வாலைகள் வெளிப்படத்

தொடங்கும், ருத்ரரூபமாக விளங்கும் உங்களுக்கு நமஸ்காரம்! உலகமனைத்திற்கும் நீங்களே குருவாகவும், ஆத்மாவாகவும், பரமேச்வரனாகவும் விளங்குகிறீர்கள். ஆகவே எல்லா பக்தர்களையும் சங்கடங்களிலிருந்து விடுவித்து, அருள் புரிகிறீர்கள். மாயையினால் விரிவடைந்த அகில உலகிலும் நீங்கள் வியாபித்து இருந்தாலும், மாயையினாலோ அதிலிருந்து உண்டான குணங்களினாலோ நீங்கள் மயங்குவதில்லை. மாயை, அதிலிருந்து உண்டான குணங்கள் இவற்றிற்கிடையே இருந்தாலும் கூட, அவைகளால் நீங்கள் பாதிக்கப் படுவதில்லை. உங்களுடைய மஹிமைக்கு முடிவே இல்லை; ஏனெனில் நீங்கள் எல்லையற்றவர். இந்நிலையில் தங்களை வெறும் சொற்களால் விளக்குவது எப்படி? ஆகவே எதுவும் பேசாமல் மௌனமாக இருப்பதே எனக்கு உரித்த செயல்.''

இவ்வாறு துதி செய்துவிட்டு, யமதர்மராஜன் கைகளைக் குவித்துக் கொண்டு, ''உலகிற்கு குருவானவரே! இந்த ஜீவர்களிடம் குணமில்லாவிட்டாலும், உங்கள் கட்டளைக்கிணங்க இவர்களை விடுவித்து விட்டேன். இப்போது எனக்குப் பொருத்தமானதும், செய்யத் தக்கதுமான செயல் எது என்று கூறுங்கள்'' என்றார். யமதர்மராஜன் இவ்வாறு கூறியதும், பகவான் மதுஸூதனர் மேகத்திற்கு இணையான குரலில், அமுதத்தைப் பாய்ச்சுவது போன்று கூறினார். ''தர்மராஜனே! நீ எல்லோரிடமும் சமபாவனை வைத்து, பாவங்களிலிருந்து மக்களைக் கடைத்தேற்றுகிறாய். உடல் படைத்தோர்களைப் பற்றிய பொறுப்பை உன் மீது சுமத்திவிட்டு நான் கவலையற்றிருக்கிறேன். ஆகவே நீ உனது கடமையைச் செய்; உனது உலகுக்குத் திரும்பிச் செல்''.

இவ்வாறு கூறிவிட்டு பகவான் மறைந்தார். யமதர்ம ராஜனும் தமது நகரத்திற்குத் திரும்பி வந்தார். அப்போது அந்த அந்தணர் நரகத்தில் உழன்ற எல்லா ஜீவர்களையும் நரகத்திலிருந்து கரையேற்றி விட்டு, சிறந்த விமானத்தின் மூலம் தாமும் வைகுண்டத்திற்குச் சென்று விட்டார்.

ஞ • ஞ • ஞ • ஞ • ஞ

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கீதை முழுவதையும் மனப்பாடம் செய்தபின், ஒவ்வொரு அத்யாயத்தின் முதல் சுலோகத்தை சொல்லிக் கொண்டே, பதினெட்டு அத்யாயங்களின் முதல் சுலோகங்களைப் பாராயணம் செய்ய வேண்டும். பிறகு இரண்டாவது சுலோகங்கள், அதன் பிறகு மூன்றாவது சுலோகங்கள் - இவ்விதம் ஒவ்வொரு முறையும் 18, 18 சுலோகங்களை நினைவுக்குக் கொண்டு வந்து கீதை முழுவதையும் பாராயணம் செய்ய வேண்டும்.

கீதையின் முக்கியமான விஷயத்தை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். அதன் மூலம் ஒவ்வொரு முக்கியமான விஷயத்தோடு கூட, இரண்டு சுலோகங்களின் எண்களின் நினைவு உண்டாகும். உதாரணமாக, 12வது அத்யாயத்தில் 1 லிருந்து 12வது சுலோகங்கள் வரை ஸகுண, நிர்குண, உபாஸகர்களில் சிறந்தவர் யார் என்பதின் நிர்ணயமும் பகவானை அடைவதற்கான நான்கு ஸாதனங்கள் எவை என்பதும் எடுத்துக் கூறப்படுகின்றன. இதை நினைவில் வைத்துக் கொண்டால் முதலாவது சுலோகத்தின் எண்ணும் பன்னிரெண்டாவது சுலோகத்தின் எண்ணும் நினைவிற்கு வரும். அதன் பிறகு நிர்ணயம் எந்த எந்த சுலோகத்தில் இருக்கிறது என்று பாருங்கள். பகவானை அடைவதற்கான உபாயங்கள் எது எதில் வருகின்றன என்று பாருங்கள். இவ்விதம் நடுவில் கூறப்பட்டுள்ள விஷயங்களின் அடிப்படையில் 12 சுலோகங்களின் எண்களையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். பொருள், விஷயம் இவற்றுடன் சுலோக எண்ணை நினைவு கொள்வதற்கு இது சிறந்த வழி.

(தொடர்ச்சி 18-ம் பக்கம்)

ஸ்ரீமத்
பகவத்கீதையின்

நான்காவது அத்யாயத்தின் பெருமை

ஸ்ரீமத் பகவத் கீதையின் நான்காவது அத்யாயத்தின் பெருமையை பகவான் கூறுகிறார் ''பிரியமானவளே! இப்போது நான் நான்காவது அத்யாயத்தின் பெருமையைக் கூறுகிறேன், கேள். கங்கை நதிக்கரையில் காசி என்ற பெயருள்ள ஒரு நகரம் இருக்கிறது. அங்கே பகவான் விச்வநாத ருடைய கோயிலில் பரதன் என்ற பெயருள்ளவரும், யோகத்தில் நிலை பெற்றவருமான மஹாத்மா வாழ்ந்து வந்தார். ஒவ்வொரு நாளும் ஆத்ம சம்பந்தமான விஷயங்களைப் பற்றிச் சிந்திப்பதில் ஈடுபட்ட அவர், கீதைக்கு உயர்வு அளித்து, அதன் நான்காவது அத்யாயத்தைப் பாரா யணம் செய்துவந்தார். அந்தப் பயிற்சியினால் அவர் மனம் மாசற்றதாக ஆகிவிட்டது. தட்பம்-வெப்பம் முதலிய இரட்டைகளால் ஒரு பொழுதும் துன்புறவில்லை. ஒரு சமயம் நடந்த சம்பவம். அந்த தவச்செல்வர் நகரின் எல்லையிலிருந்த தேவதைகளை தர்சனம் செய்யும் விருப்பத்துடன், நகரை விட்டு வெளியே சென்றார்.
அங்கு இரண்டு இலந்தை மரங்கள்



இருந்தன. அவற்றின் அடியில் அவர் இளைப்பாறத் தொடங்கினார். ஒரு மரத்தின் அடியில் அவர் தலையை வைத்தும் மற்றொரு மரத்தின் அடியில் அவரது ஒரு காலை நீட்டிக் கொண்டுப் படுத்தார். பின்னர் அவ்விடத்தை விட்டகன்றார்.

ஐந்து, ஆறு நாட்களுக்குள் அவ்விரு இலந்தை மரங்களும் பட்டுப் போய்விட்டன. அவற்றில் கிளைகள், இலைகள் எதுவுமே எஞ்சவில்லை. அதன் பிறகு அந்த இரு மரங்களும் ஒரு அந்தணரின் புனிதமான இல்லத்தில் இரு கன்னிகைகளாகப் பிறந்தன.

அந்த இரு கன்னிகைகளுக்கும் ஏழு வயது நிரம்பிய போது, ஒரு நாள் வெகு தொலைவில் உள்ள நாடுகளைச் சுற்றிவிட்டு வந்து கொண்டிருந்த பரத முனிவரைக் கண்டனர். அவரைக் கண்டதுமே, அந்த இரு கன்னிகைகளும் அவரது பாதங்களில் விழுந்து வணங்கி, இனிமையான குரலில் ''முனிவரே! உங்களுடைய கிருபையினாலேயே நாங்கள் கடைத்தேறினோம். இலந்தை மரமாக இருந்த நாங்கள் மனிதப் பிறவியைப் பெற்றுவிட்டோம்'' எனக் கூறினர். அவர்கள் இவ்வாறு கூறியதும் முனிவருக்கு மிகுந்த வியப்பு ஏற்பட்டது. அவர் ''பெண்களே! எப்போது, எந்த ஸாதனை மூலம் நான் உங்களை விடுவித்தேன்? அத்துடன் இதையும் கூறுங்கள். நீங்கள் இலந்தை மரங்களானதற்குக் காரணம் என்ன? ஏனெனில் இது விஷயமாக எதுவும் எனக்குத் தெரியவில்லை'' எனக் கேட்டார்.

அப்போது தாங்கள் இலந்தை மரங்களானதற்கான காரணத்தை அவர்கள் சொன்னார்கள் ''முனிவரே! கோதாவரி நதிக்கரையில் சின்னபாபம் என்ற பெயர் கொண்ட புனித ஸ்தலம் இருக்கிறது. அது மனிதர்களுக்குப் புண்யத்தை அருளக் கூடியது. அது மிகச் சிறந்த, ஈடு இணையற்ற புனிதம் நிறைந்த தலம். அந்த இடத்தில் ஸத்யதபா என்ற பெயர் கொண்ட ஒரு தபஸ்வி கடுமையாகத் தவம் செய்து கொண்டிருந்தார். கோடை காலத்தில் கொழுந்து விட்டு எரிகின்ற நெருப்பின் மீது அமர்வார்; மழைக் காலத்தில் மழையினால் அவர் கேசங்கள் எப்பொழுதும் ஈரமாகவே இருந்தன; குளிர் காலத்தில் நீரில் வாசம் செய்ததால், அவருடைய உடலில் ரோமங்கள் சிலிர்த்து நின்றன. அகத்திலும் புறத்திலும் அவர் எப்போதும் தூய்மை கொண்டிருந்தார்; உரிய காலத்தில் தவம் செய்து வந்தார்; மனத்தையும் புலன்களையும் வசப்படுத்தி, மிக உயர்ந்த அமைதியைப் பெற்று, ஆத்மாவிலேயே இன்புற்றிருந்தார். தமது புலமையை வெளிப்படுத்தி அவர் சொற்பொழிவு செய்யும்போது பிரம்மதேவனும் அதைக் கேட்க விருப்பங்கொண்டு அங்கே வருவார்; சந்தேகங்களைக் கேட்பார். பிரம்மதேவனின் வரவாலும் தவத்தை நிறுத்தவில்லை. பரமாத்மாவின் தியானத்தில் இடைவிடாமல் எப்போதும் ஈடுபட்டிருந்ததால், அவர் தவம் வளர்ந்து கொண்டே வந்தது. ஸத்யதபாவை ஜீவன்முக்தருக்கு ஒப்பானவராகக் கருதி, சீரும் செழிப்பும் உள்ள தன் பதவி சம்பந்தமாக தேவேந்திரனுக்கு சிறிது அச்சம் ஏற்பட்டது. அப்போது அவருடைய தவத்திற்கு பலவிதமாக இடையூறு செய்யத் தொடங்கினான். அப்ஸரப் பெண்களில் எங்கள் இருவரையும் அழைத்து, இந்திரன் ''நீங்கள் இருவரும் அந்தத் தபஸ்வி தவம் செய்ய முடியாதபடி இடையூறு செய்யுங்கள்; அவர் என்னை இந்திர பதவியிலிருந்து அகற்றி விட்டு, தாமே ஸ்வர்கத்தை ஆள விரும்புகிறார்'' என்று ஆணையிட்டான்.

இந்திரனின் இக் கட்டளையை ஏற்று, இருவரும் கோதாவரி நதிக்கரையில் அவர் தவம் செய்து கொண்டிருந்த இடத்தில் அவருக்கு முன்னர் வந்தோம். அங்கே மென்மையானதும், கம்பீரமானதும் ஆன ஒலியுடன் மிருதங்கத்தையும், புல்லாங்குழலையும் இசைத்துக் கொண்டு, மற்ற அப்ஸரப் பெண்களுடன் சேர்ந்து கொண்டு, இனிமையாகப் பாட ஆரம்பித்தோம். இதோடு மட்டும் இல்லாமல், அந்த மஹாத்மாவின் மனத்தை வசப்படுத்த, ஸ்வரம், ராகம், லயம் இவற்றுடன் நாட்டியமாடத் தொடங்கினோம்; இடையிடையே புடவைத் தலைப்பு நழுவியதால் எங்கள் மார்பகங்களும் அவருக்குத் தென்பட்டன. சித்தத்தைக் கலக்கக் கூடிய எங்களது செயல்கள் காமத்தைக் கொழுந்து விட்டு எரியச்

செய்யக் கூடியதாக இருந்தது; ஆனால் கலங்காத சித்தமுடைய அந்த மஹாத்மாவின் மனத்தில் கோபத்தையே மூட்டியது. கையினால் நீரைத் தெளித்து மிகுந்த சினத்துடன் ''பெண்களே! நீங்கள் கங்கைக் கரையில் இலந்தை மரங்களாக ஆகுங்கள்'' என்று எங்களுக்கு சாபம் கொடுத்தார். இதைக் கேட்டதும், மிகப் பணிவுடன் நாங்கள் அவரிடம் கூறினோம் ''மஹாத்மாவே! நாங்கள் இருவரும் பிறர் கட்டளைப்படி நடப்பவர்கள். ஆகவே நாங்கள் செய்த தகாத செயலுக்காக எங்களைப் பொறுத்தருளுங்கள்.''

இவ்வாறு கூறி, நாங்கள் முனிவரை மகிழ்வித்தோம். அப்போது புனிதமான சித்தம் கொண்ட அம்முனிவர், சாபம் முடியும் காலத்தை நிர்ணயம் செய்து, ''பரத முனிவர் வரும்வரைதான் இந்த சாபம் உங்களைக் கட்டுப்படுத்தும். அதன் பின்னர் நீங்கள் மனித உலகில் மனிதர்களாகப் பிறப்பீர்கள்; உங்களுக்கு முற்பிறவியின் நினைவு தொடர்ந்து இருந்து கொண்டிருக்கும்'' என்று எங்களிடம் கூறினார்.

''முனிவரே! நாங்கள் இருவரும் இலந்தை மரங்களின் வடிவில் நின்று கொண்டிருந்த போது, நீங்கள் எங்களருகில் வந்து கீதையின் நான்காவது அத்யாயத்தை ஜபம் செய்து எங்களைக் கடைத்தேற்றினீர்கள். ஆகவே நாங்கள் உங்களை வணங்குகின்றோம். சாபத்திலிருந்து மட்டுமின்றி இக் கொடிய உலக வாழ்விலிருந்தும் கூட, கீதையின் நான்காவது அத்யாயத்தைப் பாராயணம் செய்ததன் மூலமாக எங்களை விடுவித்து விட்டீர்கள்.''

பகவான் ''அவர்கள் இருவரும் இவ்வாறு கூறியதும் முனிவர் மிகவும் மகிழ்ச்சியடைந்தார். அவர்களால் பூஜிக்கப்பட்டு, அவர்களிடம் விடைபெற்றார். அந்தக் கன்னிகைகளும் பக்தி சிரத்தையுடன் ஒவ்வொரு நாளும் கீதையின் நான்காவது அத்யாயத்தைப் பாராயணம் செய்யத் தொடங்கினார்கள். அதன் மூலம் அவர்கள் முக்தி அடைந்தனர்'' என்று பகவான் கூறி முடித்தார்.

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

இதே புத்தகத்தில் முன்பு கூறப்பட்ட கீதையின் சுருக்கமான விஷயத்தைப் பற்றித் தலைகீழாகப் பாராயணம் செய்யுங்கள். அதாவது 12வது அத்யாயத்தைப் பாராயணம் செய்யும்போது, கடைசி சுலோகமான 20வதின் சுருக்கமான விஷயத்தைப் பார்த்துக் கொண்டே, மனப்பாடம் ஆன 20வது சுலோகத்தை உச்சரியுங்கள். சுலோகத்தின் பொருளையும் விஷயச் சுருக்கத்தையும் மனதில் ஒன்று சேருங்கள். இவ்விதம் முழு அத்யாயத்தையும் பாராயணம் செய்யுங்கள். கீதை முழுவதையும் நினைவு படுத்திக் கொண்ட பிறகு, கீதையின் மூல சுலோகத்தைப் பார்க்காமலேயே, விஷயத்தின் ஸாரத்தை ''யத்ர யோகே₃ஶ்வர :' என்ற சுலோகத்திலிருந்து ''த₄ர்ம க்ஷேத்ரே' என்ற சுலோகம் வரை - பொருளை ஒன்று சேர்த்து தலை கீழாகப் பாராயணம் செய்யுங்கள்; இதன் மூலம் கீதை முழுவதின் கருத்து, பொருள், விஷயம், சுலோக எண் நன்கு நினைவில் பதிந்து விடும்.


கீதையைப் பயிலும் இரண்டும் அல்லது அதற்கு அதிகமான அன்பர்களாக கேள்விகள் கேட்டு, சுலோக எண், பொருள், கருத்து இவற்றைச் சிந்தனை செய்யுங்கள்.

முன்பு கூறப்பட்ட கீதையின் சுலோக எண்ணை நினைவுபடுத்தக் கூடிய உபாயத்தின் அடிப்படையில் மனப்பாடமானவற்றைப் பாராயணம் செய்யுங்கள்.

ஸ்ரீமத்பகவத்கீதையின்
ஐந்தாவது அத்யாயத்தின் பெருமை

பகவான் கூறுகிறார் ''தேவி! இப்போது மக்களால் பெரிதும் மதிக்கப்படும் கீதையின் ஐந்தாவது அத்யாயத்தின் பெருமையைப் பற்றிச் சுருக்கமாகக் கூறப் போகிறேன், கவனமாகக் கேள்!

மத்ர தேசத்தில் புருகுத்ஸபுரம் என்ற நகரின்கண் பிங்களன் என்ற பெயர் கொண்ட ஓர் அந்தணன் வசித்து வந்தான். அவன் களங்கமற்ற, புகழ் பெற்ற ஒரு குலத்தில் பிறந்தவன். ஆனால் தான் பிறந்த குலத்திற்குப் பொருத்தமான வேதம். சாஸ்திரங்கள் இவற்றைக் கற்காமல், மத்தளம் முதலிய வாத்தியக் கருவிகளை இசைத்துக் கொண்டு, நாட்டியம், பாட்டு இவற்றில் மனத்தைச் செலுத்தினான். பாட்டு, நடனம் இசைக் கருவிகளை மீட்டுவது முதலிய கலைகளில் நன்கு உழைத்து மிகவும் புகழடைந்தான். அதனால் அவன் அரசனுடன் வாழத் தொடங்கினான். பிறருடைய மனைவிகளை அழைத்து அவர்களுடன் இன்பம் துய்த்து வந்தான். பெண்களைத் தவிர வேறு எந்த விஷயத்திலும் அவன் மனம் ஈடுபடவில்லை. சிறிது சிறிதாக அவனது கர்வம் அதிகரித்ததால், மனம் போனபடி, கட்டுப்பாடு எதுவுமின்றி அரசன் தனிமையாக இருந்த சமயங்களில் பிறருடைய குறைகளை எடுத்துரைத்தான். பிங்களனுக்கு அருணா என்ற ஒரு மனைவி இருந்தாள். அவள் தாழ்ந்த குலத்தில் பிறந்தவள். காமுகர்களான ஆண்களிடம் இன்பம் துய்ப்பதில் விருப்பங்கொண்டு எப்பொழுதும் அவர்களைத் தேடுவதற்காக அவள் சுற்றித் திரிந்தாள். தன்னுடைய போக்குக்குத் தன் கணவன் இடைஞ்சல் என்று கருதி, ஒரு நாள் நள்ளிரவில் வீட்டிற்குள்ளேயே அவன் தலையை வெட்டிக் கொன்றுவிட்டாள். பிணத்தை அவள் பூமியில்



புதைத்துவிட்டாள். இவ்வாறு உயிர் துறந்த அவன் யமலோகத்தை அடைந்தான். கொடிய நரகங்களில் தண்டனைகளை அனுபவித்துவிட்டு, ஜன நடமாட்டமற்ற காட்டில் ஒரு கழுகாகப் பிறந்தான்.


அருணாவும் நோய்வாய்ப்பட்டு அழகிய தன் உடலைத் துறந்து, கோரமான நரகங்களின் துன்பங்களை அநுபவித்த பின்னர் பிங்களன் கழுகாக இருந்த அதே காட்டில் ஒரு பெண் கிளியாகப் பிறந்தாள். ஒரு நாள் தானியங்களைக் கொத்துவதற்காக இங்குமங்கும் அது தத்திக் குதித்துக் கொண்டிருந்தது. இதற்குள் அந்தக் கழுகு முற்பிறவியின் பகைமையை நினைத்து, தன் கூரிய நகங்களால் அதன் உடலைக் கிழித்து விட்டது. காயமடைந்த பெண்கிளி, நீர் நிறைந்த ஒரு மனிதனின் மண்டை ஓட்டின் மீது விழுந்தது. கழுகு அதன் மீது மறுபடியும் பாய்ந்தது. இதற்கிடையில் வேடன் ஒருவன் அதன் மீது அம்பெய்து கொன்றான். முற்பிறவியில் மனைவியாக இருந்த பெண் கிளி நீரில் மூழ்கி உயிர் துறந்தது. பிறகு அந்தக் கொடிய இயல்புள்ள கழுகும் அதில் விழுந்து மூழ்கி விட்டது. யமதர்ம ராஜனுடைய தூதர்கள் இருவரையும் யமலோகத்திற்கு அழைத்துச் சென்றார்கள். முற்பிறவியில் தாங்கள் செய்த பாவச் செயல்களை நினைத்து இருவரும் மிகவும் பயமடைந்தனர். அதன் பிறகு வெறுக்கத்தக்க அவற்றின் பாவச் செயல்கள் ஒருபுறம் இருப்பினும், இறக்கும் தருணத்தில் எதிர்பாராத விதமாக மண்டை ஓட்டு நீரில் நீராடியதால், இருவர்களுடைய பாவங்கள் அழிந்து விட்டன என்ற விஷயம் புலப்பட்டது. ஆகவே யமராஜன் அவர்கள் விரும்பிய உலகத்திற்குச் செல்வதற்கு அவர்களுக்குக் கட்டளையிட்டான். இதைக் கேட்டதும் அவர்கள் தங்கள் பாவங்களை நினைவு கூர்ந்து, மிகுந்த வியப்பில் மூழ்கினர். யமதர்மராஜனருகே சென்று, அவர் பாதங்களில் விழுந்து வணங்கி, ''பகவானே! நாங்களிருவரும் முற்பிறவியில் மிகவும் வெறுக்கத்தக்க தீய செயல்களைச் செய்து பாவத்தை சம்பாதித்திருக்கிறோம். அப்படி இருக்கும்போது நாங்கள் விரும்பும் உலகங்களுக்கு எங்களை அனுப்புவதற்கான காரணம் என்ன? கூறுங்கள்'' என வினவினர்.

யமதர்ம ராஜன், ''கங்கைக் கரையில் வடர் என்ற பெயர் கொண்ட சிறந்த ஒரு பிரம்மஞானி வாழ்ந்து வந்தார். அவர் தனிமையான இடத்தை நாடுபவர்; கர்வமற்றவர்; சாந்தமான இயல்புடையவர்; ஆசையற்றவர்; யாரிடமும் பகைமை உணர்ச்சி இல்லாதவர். ஒவ்வொரு நாளும் கீதையின் ஐந்தாவது அத்யாயத்தை ஜபம் செய்வது எப்பொழுதும் அவர் ஒழுகி வந்த நியமம். ஐந்தாவது அத்யாயத்தைப் பிறர் கூறக்கேட்டால் கூட மிகப் பெரிய பாவியும் நித்திய பிரம்மஞானத்தை அடைந்து விடுகின்றான். அந்தப் புண்யத்தின் மஹிமையினாலேயே உள்ளம் தூய்மை அடைந்து, அவர் தம் உடலைத் துறந்தார். கீதை பாராயணத்தினால் பாவம் நீங்கியவனும், ஆத்ம ஞானத்தை அடைந்து விட்டவனுமான அந்த ஞானியின் மண்டை ஓட்டில் இருந்த நீரின் தொடர்பால் நீங்கள் இருவரும் புனிதமாகி விட்டீர்கள். ஆகவே நீங்கள் இருவரும் விரும்பும் உலகங்களுக்குச் செல்லுங்கள்; ஏனெனில் கீதையின் ஐந்தாவது அத்யாயத்தின் மஹிமையினால் நீங்கள் இருவரும் தூயவர்கள் ஆகிவிட்டீர்கள்'' என்று விடையளித்தார்.

பகவான், ''எல்லோரிடத்திலும் சமபாவனை உள்ள யமதர்மராஜன் விஷயத்தை விளக்கிக் கூறியதும் அவர்கள் இருவரும் மகிழ்ச்சி அடைந்தனர். விமானத்தில் அமர்ந்து கொண்டு வைகுண்டத்திற்குச் சென்றுவிட்டனர்'' என மொழிந்தார்.

ஸ்ரீமத்பகவத்கீதையின்
ஆறாவது அத்யாயத்தின் பெருமை

சிவபெருமான் கூறுகிறார் ‘‘இன்முகம் கொண்டவளே! இப்போது நான் ஆறாவது அத்யாயத்தின் பெருமையைக் கூறப்போகிறேன். இதைக் கேட்பதால் மனிதனுக்கு முக்தி உள்ளங்கையில் விழுந்தது மாதிரிதான். கோதாவரி நதிக்கரையில் பிரதிஷ்டானபுரம் (பைடண்) என்ற பெயருள்ள விசாலமான ஒரு நகரம் உள்ளது. அங்கே நான் பிப்பலேசன் என்ற பெயருடன் புகழ்பெற்று வாழ்கிறேன். அந்த நகரத்தில் ஜானச்ருதி என்ற பெயர் கொண்ட அரசன் வாழ்ந்து வந்தான். பூவுலகில் உள்ள எல்லா மக்களுக்கும் அவன் மிகவும் பிரிய மானவன். அவனுடைய பெருமை



சூரியனுடைய பிரகாசமான ஒளிக்கு ஒப்பானதாக விளங்கியது. ஒவ்வொரு நாளும் அவன் செய்த யக்ஞங்களிலிருந்து வெளிக் கிளம்பிய புகையால் நந்தனவனத்தில் இருந்த கற்பகமரம் அரசனின் கொடைத் திறனைப் பார்த்து நாணமடைந்தது போல் கருநிறமாயிற்று. அவர் செய்த யக்ஞங்களின் மூலம் கிடைத்த புரோடாசத்தின் சுவையில் எப்போதும் விருப்பங்கொண்ட காரணத்தால் தேவதைகள் பிரதிஷ்டானபுரத்தை விட்டு வேறெங்கும் செல்ல விரும்பவில்லை. அவர் தானமளித்த போது கீழே விழுந்த நீர், பெருமை வடிவான ஒளி, யக்ஞங்களிலிருந்து வெளிவந்த புகை இவற்றால் வளர்ச்சி பெற்ற மேகங்கள் தவறாது காலத்தில் மழையைப் பொழிந்தன. அந்த அரசன் ஆட்சி செய்த காலத்தில், விவசாயத்தில் ஏற்படக் கூடிய ஆறு விதமான இடைஞ்சல்கள் எங்குமே சிறிது கூட ஏற்படவில்லை. எங்கும் போற்றத்தக்க வகையில் தர்மபிரசாரம் நடைபெற்றது. குளம், கிணறு, குட்டை இவைகளைத் தோண்டுவது என்ற நிமித்தத்தில் அவன் பூமிக்கு அடியில் இருந்த செல்வங்களைக் கண்ணுற்றான். அரசனின் கொடைக்குணம், தவம், யக்ஞம், ஆட்சி செய்த முறை இவற்றால் மகிழ்ச்சியடைந்த ஸ்வர்க்கத்தில் இருந்த தேவதைகள், அவனுக்கு வரமளிப்பதற்காக வந்தார்கள். தாமரைத் தண்டு போன்று ஒளி பொருந்திய அன்னப்பறவைகளின் வடிவம் தாங்கி, தமது சிறகுகளை அசைத்துக் கொண்டு, ஆகாய வழியாக வரத் தொடங்கினர். மிக ஆவலுடன் பறந்து சென்று கொண்டே, அவை ஒன்றுக்கொன்று பேசிக் கொண்டும் பறந்தன. அவற்றில் பத்ராச்வர் முதலிய இரண்டு மூன்று அன்னப்பறவைகள் வேகமாக முன்னே பறந்தன. அப்போது பின்னால் வந்த அன்னப் பறவைகள் முன்னே சென்ற அன்னங்களைக் கூப்பிட்டுக் கூறின ''பத்ராச்வ அண்ணா! வேகமாகப் பறந்து நீங்கள் ஏன் முன்னால் போகிறீர்கள்? இந்த வழி, செல்வதற்குக் கடினமானது. நாம் எல்லோரும் ஒன்றாக இதில் செல்ல வேண்டும். புண்ணிய மூர்த்தியான ஜானச்ருதி மஹாராஜாவின் ஒளிக்கற்றை மிகவும் தெளிவாக முன்னாலேயே பிரகாசித்துக் கொண்டிருக்கிறதே, இது உங்களுக்குத் தென்படவில்லையா?'' (அந்த உஷ்ணத்தினால் சாம்பலாகி விடுவோமோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது; ஆகவே ஜாக்கிரதையாகச் செல்ல வேண்டும்.)

பின்னால் பறந்த அன்னப் பறவைகளின் வார்த்தையைக் கேட்டு, முன்னால் பறந்த பறவைகள் கடகடவென்ற சிரித்தன. அவை கூறியதை உரத்த குரலில் அலட்சியப்படுத்தியவாறு கூறின ''தம்பி! பிரம்மவாதியான மஹாத்மா ரைக்வருடைய தேஜஸை விட இந்த ஜானச்ருதியின் பொலிவு அதிக ஒளியுள்ளதா என்ன?''

அன்னப் பறவைகள் கூறிய இச்சொற்களைக் கேட்டதும் மன்னன் ஜானச்ருதி அரண்மனையின் மேல்தளத்திலிருந்து இறங்கி சௌகரியமாக இருக்கையில் அமர்ந்து கொண்டு, தேர்ப்பாகனை அழைத்து, அவனிடம் ''நீ சென்று, மஹாத்மா ரைக்வரை இங்கே அழைத்து வா'' என்று ஆணையிட்டான். அமுதத்திற்கு ஒப்பான இச்சொற்களைக் கேட்டதும் மஹன் என்ற பெயருடைய தேரோட்டி உற்சாகத்தோடு புறப்பட்டான். முதன் முதலில், உலகத்திற்கெல்லாம் அதிபதியான பகவான் விச்வநாதர் மனிதர்களுக்கு உபதேசம் செய்யும் தலமானதும், முக்தியை அளிப்பதுமான காசி க்ஷேத்திரத்திற்குப் பிரயாணம் செய்தான். அதன் பிறகு, மலர்ந்த கண்களுடன் கூடிய பகவான் கதாதரர் (விஷ்ணு) உலகனைத்தையும் கடைத்தேற்றுவதற்காக வாசம் செய்யும் கயா க்ஷேத்திரத்தை அடைந்தான். அதன் பிறகு பல புனிதஸ்தலங்களுக்கும் யாத்திரை செய்துவிட்டு, அத்தேரோட்டி பாவங்களை அழிக்கும் மதுராபுரிக்குச் சென்றான். இது பகவான் ஸ்ரீகிருஷ்ணர் முதலில் வசித்த இடம்; இது மிகப் புனிதமானது; மோக்ஷத்தை அருளக் கூடியது. வேதங்களிலும் சாஸ்திரங்களிலும் மூவுலகங்களுக்கும் அதிபதியான பகவான் கோவிந்தன் அவதரித்த புண்ணிய பூமி என்ற பெயர் பெற்று புகழுடன் விளங்குகிறது. எல்லாவிதமான தேவதைகளும், பிரம்ம ரிஷிகளும் இப்புனித ஸ்தலத்தில் விளங்குகின்றனர். மதுரா நகரம் யமுனை நதிக்கரையில் அழகுற விளங்குகிறது. அதன் வடிவம் பாதிமதிக்கு ஒப்பானதாகத் தோற்றமளிக்கிறது. எல்லா

தீர்த்தங்களும் அங்கிருப்பதால் அது பரிபூர்ணமாக இருக்கிறது. மிகச் சிறந்த ஆனந்தத்தை அளிப்பதால், அது அழகாகத் தோன்றுகிறது. கோவர்தன மலை இருப்பதால், வடமதுரையைச் சேர்ந்த இடங்களின் அழகு இன்னும் அதிகரித்துள்ளது. புனிதமான மரங்களாலும் கொடிகளாலும் அது சூழப்பட்டுள்ளது.

அதில் பன்னிரண்டு வனங்கள் உள்ளன. அது மிகச் சிறந்த புண்யமயமானது; எல்லோருக்கும் இளைப்பாறுதல் அளிப்பதும் வேதங்களின் ஸாரமானதுமான பகவான் ஸ்ரீகிருஷ்ணனின் ஆதார பூமி.

அதன் பிறகு வடமதுரையிலிருந்து கிழக்கு முகமாகவும், பின்னர் வடக்கு முகமாகவும் வெகு தூரம் சென்ற பின்னர், காச்மீரம் என்ற பெயர் கொண்ட நகரம் தென்பட்டது. அங்கு சங்கைப் போன்று ஒளிபொருந்திய, விண்ணை முட்டும் மாளிகைகளின் வரிசைகள், சிவபெருமானுடைய அட்டஹாஸச் சிரிப்பு போன்று, ஒளி பெற்று விளங்குகின்றன. அந்தணர்களின் சாஸ்திர சம்மந்தமான பேச்சுக்களைக் கேட்டு, ஊமைகள் கூட அழகான பேச்சுக்களையும் பதங்களையும் உச்சரித்துக் கொண்டு தேவதைகளுக்கு நிகராக விளங்குகிறார்கள். இடைவிடாமல் யக்ஞ குண்டங்களிலிருந்து வெளிக் கிளம்பும் புகை மண்டலங்களால் வியாபிக்கப்பட்டிருக்கும் காரணத்தால் மேகங்களிலிருந்து நீர் பொழிந்து விட்டாலும், ஆகாய மண்டலத்தின் கருமை நிறம் விலகவில்லை. அங்கே, ஆசிரியர்களிடம் வந்து, மாணவர்கள் வாழ்நாள் முழுவதும் பயில்வதால் கலைகள் அனைத்தையும் முழுவதும் படித்துவிடுகிறார்கள். மாணிக்யேச்வரர் என்ற பெயருடன் புகழ்பெற்று, பகவான் சந்திரசேகரர் உடல் படைத்தோர்களுக்கு வரமளிப்பதற்காக, அங்கே எப்பொழுதும் வசிக்கிறார். காச்மீர தேசத்தரசனான மாணிக்யேசன் திக்விஜயம் செய்து, எல்லா அரசர்களையும் தோற்கடித்து, அங்கே சிவபெருமானுக்குப் பூஜை செய்தான். அப்பொழுதிலிருந்து அவருக்கு மாணிக்யேச்வரர் என்ற பெயர் ஏற்பட்டது. அந்த ஆலயத்தின் வாயிலில் தான் மஹாத்மா ரைக்வர் ஒரு சிறிய வண்டியில் அமர்ந்து கொண்டு, தமது அங்கங்களைச் சொரிந்து கொண்டு, மரத்தின் நிழலில் அமர்ந்திருந்தார். அரசர் கூறிய பல்வேறு அடையாளங்களிலிருந்து அவர் தான் ரைக்வர் என்று எளிதாகவே தேரோட்டி அடையாளம் கண்டு கொண்டான். அவர்தம் பாதங்களில் விழுந்து வணங்கி, ''அந்தணரே! நீங்கள் எந்த இடத்தில் வசிக்கிறீர்கள்? உங்களுடைய முழுப் பெயர் என்ன? நீங்களோ எப்பொழுதும் இஷ்டப்படி ஸஞ்சரிப்பவர்கள்; அப்படி இருக்கும் போது இங்கே எதற்காகத் தங்கியிருக்கிறீர்கள்? இப்போது என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?'' என வினவினான்.

ஸாரதியின் இச் சொற்களைக் கேட்டு மிகுந்த ஆனந்தத்தில் மூழ்கிய மஹாத்மா ரைக்வர் சிறிது யோசித்து, அவனிடம் ''நான் எல்லா விருப்பங்களையும் அடையப் பெற்றவனாக இருந்தாலும், எந்தப் பொருளும் எனக்குத் தேவை இல்லை என்றாலும், யாரும் என் மனத்திற்கிசைந்தபடி பணிவிடை செய்யமுடியாது'' என்று கூறினார். ரைக்வருடைய மனக் கருத்தைத் தெரிந்து கொண்டு, ஸாரதி மெதுவாக அரசனிடம் சென்றான். அங்கு சென்று அரசனை வணங்கி, இரு கைகளையும் கூப்பிக் கொண்டு அரசனிடம் எல்லா விவரங்களையும் தெரிவித்தான். மரியாதைக்குரிய யஜமானனைப் பார்த்ததில் அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. தேரோட்டி கூறிய சொற்களினால் அரசனின் கண்கள் வியப்பால் திடுக்கிட்டன. அவன் மனதில் ரைக்வருக்கு மரியாதை செய்ய வேண்டும் என்ற சிரத்தை எழுந்தது. இரண்டு கோவேறு கழுதைகள் பூட்டிய ஒரு வண்டியை எடுத்துக் கொண்டு பிரயாணமானான். தன்னுடன் முத்துமாலைகள், குதிரைகள், சிறந்த ஆடைகள், ஓராயிரம் பசுக்கள் இவற்றையும் எடுத்துச் சென்றான். காச்மீரப் பிரதேசத்தில் மஹாத்மா ரைக்வர் இருந்த இடத்தை அடைந்து, எல்லாப் பொருள்களையும், அவர் முன் வைத்து, நிலம் தோய நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினான். மிகுந்த பக்தியுடன் தமது பாதங்களில்

விழுந்து வணங்கிய அரசன் ஜானச்ருதி மீது அவர் சினங்கொண்டு இவ்வாறு கூறினார் ''கவலை கொண்ட அரசனே! என்னைப் பற்றி உனக்குத் தெரியாதா? கோவேறு கழுதைகள் பூட்டிய இவ்வண்டியை எடுத்துச் செல். இந்த ஆடைகள், முத்துமாலைகள், பால் கறக்கும் இப்பசுக்கள் இவைகளையும் நீயே எடுத்துச் செல்.'' ரைக்வரின் சினம் தோய்ந்த இச்சொற்களால் அரசன் அச்சமுற்றான். மஹாத்மா தனக்கு சாபம் கொடுத்து விடுவாரோ என்று அஞ்சிய அரசன், ரைக்வரின் இரு பாதங்களையும் பற்றிக் கொண்டு பக்தியுடன் ''அந்தணரே! என் மீது மகிழ்ச்சி கொள்ளுங்கள். பகவானே! உங்களுக்கு இந்த அற்புதமான பெருமை எப்படிக் கிடைத்தது? கருணை கூர்ந்து எனக்கு சரியான பதிலைக் கூறி அருள வேண்டும்.'' என்று வேண்டினான்.

ரைக்வர், ''அரசே! ஒவ்வொரு நாளும் நான் கீதையின் ஆறாவது அத்யாயத்தை ஜபம் செய்கிறேன். இதனால்தான் என்னுடைய தேஜஸின் வெப்பம் தேவதைகளால் கூடப் பொறுக்க முடியாததாக இருக்கிறது.'' என்று ரைக்வர் விடை பகர்ந்தார்.

பின்னர் சிறந்த அறிவாளியான மன்னன் ஜானச்ருதி முயற்சி செய்து, மஹாத்மா ரைக்வரிடமிருந்து கீதையின் ஆறாவது அத்யாயத்தைப் பயின்றான். இதனால் அவனுக்கு மோக்ஷம் கிடைத்தது. ரைக்வரும் பகவான் மாணிக்யேச்வரருக்கு அருகில் மோக்ஷத்தை அளிக்கும் கீதையின் ஆறாவது அத்யாயத்தை ஜபம் செய்து கொண்டு இனிதே வசிக்கலானார். அன்னப் பறவைகள் வடிவம் தாங்கி, வரமளிக்கும் நோக்கத்துடன் வந்த தேவதைகளும் வியப்படைந்து, தமது வழியே சென்றுவிட்டனர். இந்த ஓர் அத்யாயத்தை மட்டுமே ஜபம் செய்தாலும் மனிதன் பகவான் விஷ்ணுவின் ஸ்வரூபத்தை அடைந்து விடுவான். இதில் சிறிது கூட சந்தேகமில்லை.

கீதையின் ஸாரம்

அத். 1. *உலகத்திலுள்ள உள்ள மோஹம் காரணமாகவே, ''நான் என்ன செய்யலாம், எதைச் செய்யக்கூடாது'' என்ற தர்மசங்கடத்தில் சிக்கிக் கொண்டு கடமையைச் செய்ய முடியாமல் மனிதன் வழுவிவிடுகிறான். ஆகவே மோஹத்திற்கோ, இன்பம் துய்ப்பதில் உள்ள பற்றுதலுக்கோ ஆட்படக் கூடாது.*

அத். 2. *உடல் அழியக் கூடியது. அதை அறியும் உடலில் உறைபவன் அழிவற்றவன். இந்த விவேகத்தைப் பின்பற்றுவது; தன் கடமைகளை நிறைவேற்றுவது இந்த இரண்டு உபாயங்களில் ஏதேனும் ஒன்றைப் பின்பற்றுவதன் மூலம் கவலையும் துன்பமும் அழிந்துவிடும்.*

அத். 3. *பற்றற்ற மனப்பான்மையுடன் பிறருடைய நன்மைக்காகவே, தன் கடமையை முழு ஈடுபாட்டுடன் செய்வதாலேயே மேன்மை ஏற்பட்டுவிடுகிறது.*

அத். 4. *கர்மத் தளையிலிருந்து விடுபடுவதற்கு இரண்டு உபாயங்கள் உள்ளன. கர்மங்களின் தத்வத்தை அறிந்து கொண்டு, பற்றற்ற மனப்பான்மையுடன் செயல் புரிவது ஓர் உபாயம்; மற்றொன்று தத்வ ஞானத்தைத் தன் சொந்த அநுபவத்தில் பெறுவது.*

(தொடர்ச்சி 36-ம் பக்கம்)


ஏழாவது அத்யாயத்தின் பெருமை




சிவபெருமான் கூறுகிறார் ''பார்வதி! இப்போது நான் கீதையின் ஏழாவது அத்யாயத்தின் பெருமையைப் பற்றிக் கூறப்போகிறேன். இது அமுதம் போன்று சுவை மிக்கது.''



பாடலிபுத்திரம் என்ற பெயருள்ள நகரம் ஒன்று உள்ளது; அதை எளிதில் அடைய முடியாது; அதன் நுழை வாயில் மிகவும் உயரமானது. அந்த நகரத்தில் சங்குகர்ணன் என்ற பெயர் கொண்ட அந்தணன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் வாணிபத் தொழிலில் ஈடுபட்டு மிகுந்த செல்வத்தை சம்பாதித்தான். ஆனால் அவன் ஒருபோதும் பித்ருக்களுக்குத் தர்ப்பணம் செய்ய மாட்டான்; தேவ பூஜையும் செய்ததில்லை. செல்வம் சம்பாதிப்பதிலேயே மனத்தை ஈடுபடுத்தி, அரசர்களுக்கு மட்டும் விருந்து அளித்து வந்தான். ஒரு காலத்தில் நிகழ்ந்த சம்பவம். அந்த அந்தணன் நான்காவது விவாஹம் செய்து கொள்வதற்காக, தன் மகன்களையும், சுற்றத்தினரையும் அழைத்துக் கொண்டு யாத்திரை செய்யப் புறப்பட்டான். வழியில் அவன் உறங்கிக் கொண்டிருந்தபோது, நள்ளிரவில் ஒரு பாம்பு அவனைக் கடித்துவிட்டது. பாம்பு தீண்டியது தான் தாமதம். அவன் உடல்நிலை மோசமடைந்தது. மணி, மந்திரம், மருந்து முதலிய எந்த உபாயத்தினாலும் அவனைப் பிழைக்க வைப்பதரிது என்று தெரிந்தது. அதன் பிறகு சில நொடிகளுக்குள் அவன் உயிர் பிரிந்தது. பிறகு வெகுகாலங் கழித்து அந்தப் பிரேதம், பாம்பாகப் பிறந்தது. பாம்பாக இருந்த அவன் சித்தம் பணத்தில் இருந்த நுட்பமான வாஸனையால் கட்டுப்பட்டிருந்தது. தன் முற்பிறவியை நினைவு





கூர்ந்து, அவன் ''வீட்டிற்கு வெளியே நான் புதைத்து வைத்துள்ள கோடிக்கணக்கான ரூபாய்களை என் மகன்களுக்குக் கொடுக்காமல் நானே காப்பாற்றப் போகிறேன்'' என முடிவு செய்தான். பாம்புப் பிறவியில் துன்புற்ற சங்குகர்ணன் ஒரு நாள் தன் மகன்களின் கனவில் தோன்றி, அவர்களுக்குத் தன் மனத்திலுள்ள கருத்தைத் தெரிவித்தான்.

அவருடைய மைந்தர்கள் அதிகாலையில் துயிலெழுந்தவுடன் கனவில் கண்ட விஷயத்தைப் பற்றி வியப்புடன் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டனர். அவர்களுள் ஒருவன், கையில் மண்வெட்டியை எடுத்துக் கொண்டு, வீட்டிலிருந்து கிளம்பி, சங்குகர்ணன் பாம்பாக வாழ்ந்து கொண்டிருந்த இடத்தை அடைந்தான். பணம் புதைக்கப்பட்ட இடம் சரியாகத் தெரியாவிட்டாலும், சில அடையாளங்கள் மூலம் பணம் புதைக்கப்படிருந்த இடத்தை சரியாகவே கண்டு கொண்டபின் அங்கே சென்று, பேராசையினால் உந்தப்பட்டு, பாம்புப்புற்றைத் தோண்டத் தொடங்கினான். அப்போது புற்றிலிருந்து பெரிய பயங்கரமான பாம்பு வெளிப்பட்டது. ''முட்டாளே! எதற்காக இங்கே வந்திருக்கிறாய்? நீ யார்? ஏன் புற்றைத் தோண்டுகிறாய்? யார் உன்னை அனுப்பியிருக்கிறார்? எல்லா விஷயங்களையும் என்னிடம் கூறு'' என்று அது பேசியது.

''நான் உங்களுடைய புதல்வன். என் பெயர் சிவன். இரவில் கண்ட கனவினால் ஆச்சர்யமடைந்த நான், இங்குள்ள பணத்தை எடுத்துக் கொள்ளும் ஆவலினால் வந்திருக்கிறேன்'' என்றான் மகன்.

மகன் கூறிய இச் சொற்களைக் கேட்டதும், சிரித்துக் கொண்டே. அந்தப் பாம்பு உரத்த குரலில் இவ்வாறு தெளிவாகக் கூறிற்று ''நீ என் மகனானால் விரைவிலேயே இத் தளையிலிருந்து (பாம்பு உடலிலிருந்து) என்னை விடுவித்துவிடு. முற் பிறவியில் புதைத்து வைத்த பணத்திற்காகவே நான் பாம்பாகப் பிறவி எடுத்திருக்கிறேன்''.

''எதைச் செய்தால், நீங்கள் விடுபடுவீர்கள்? அதற்கான வழியை என்னிடம் கூறுங்கள். ஏனெனில் பின்னிரவில் எல்லோரையும் விட்டுவிட்டு உங்களிடம் வந்துள்ளேன்'' என அவன் பாம்பிடம் வினவினான்.

''மகனே! அமுதமயமான கீதையின் ஏழாவது அத்யாயத்தைத் தவிர. வேறு எந்த புனித ஸ்தலமோ, தானமோ, தவமோ, யக்ஞமோ என்னை விடுவிக்கத் திறனுடையதில்லை. கீதையின் ஏழாவது அத்யாயம் ஒன்றுதான் பிராணிகளின் மூப்பு-மரணம் முதலிய துன்பங்களை விலக்கக் கூடியது. எனது சிராத்த தினத்தில், கீதையின் ஏழாவது அத்யாயத்தைப் பாராயணம் செய்யும் அந்தணருக்கு உணவளி; உனக்கு எவ்வித சந்தேகமே வேண்டாம்; இதனால் எனக்கு முக்தி ஏற்பட்டுவிடும். குழந்தாய்! தன் சக்திக்கேற்றபடி. முழு சிரத்தையுடன், வேத வித்யையில் சிறந்து விளங்கும் மற்ற அந்தணர்களுக்கும் விருந்தளிக்க வேண்டும்'' என்று மறுமொழி பகர்ந்தார் பாம்புருவிலிருந்த தந்தை.

பாம்புப் பிறவி எடுத்த தந்தையின் சொற்களைக் கேட்டு அவருடைய புதல்வர்கள் அவர் கட்டளையைச் செவ்வனே நிறைவேற்றினர். அதனால், சங்குகர்ணன் பாம்பு உடலை நீத்து, திவ்யமான உடலைப் பெற்றான். பணமனைத்தையும் மகன்களுக்குரியதாக்கினான். கோடிக்கணக்கான ரூபாய்களைப் பிரித்துக் கொடுத்ததனால், நன்னடத்தையுள்ள புதல்வர்கள் மகிழ்ச்சி கொண்டனர். அவர்களுடைய புத்தி தர்மம் செய்வதில் ஈடுபட்டது.


ஆகவே குளம், கிணறு, குட்டை முதலான நீர்நிலைகள் அமைக்கவும். யக்ஞம், தேவாலயம் இவற்றிற்காகவும் அவர்கள் அந்த செல்வத்தைச் செலவழித்தார்கள். தர்மசத்திரங்களையும் கட்டுவித்தார்கள். பின்னர் ஏழாவது அத்யாயத்தை ஜபம் செய்து. மோக்ஷத்தை அடைந்தார்கள். பார்வதி! இப்போது உனக்கு ஏழாவது அத்யாயத்தின் பெருமையை எடுத்து கூறினேன். இதைக் கேட்பதாலேயே மனிதன் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபடுகிறான்.

• • • • • •

எட்டாவது அத்யாயத்தின் பெருமை

சிவபெருமான் கூறுகிறார் ''தேவி! இப்போது எட்டாவது அத்யாயத்தின் பெருமையைப் பற்றிக் கேள். இதைக் கேட்டால் உனக்கு மிகுந்த ஆனந்தம் ஏற்படும். (லக்ஷ்மி தேவி கேட்டதற்கிணங்க, பகவான் விஷ்ணு அவளுக்கு இவ்விதமாக எட்டாவது அத்யாயத்தின் பெருமையை எடுத்துக் கூறியிருந்தார்.) தென் பிராந்தியத்தில் ஆமர்தகபுரம் என்ற பெயர் கொண்ட புகழ் பெற்ற ஒரு நகரம் இருக்கிறது. அங்கே பாவசர்மா என்ற அந்தணர் வாழ்ந்து வந்தார். அவர், ஒரு வேசியை மனைவியாக்கிக் கொண்டு வாழ்ந்து வந்தார். அவர் புலால் உண்பார்; கள் குடிப்பார்; செல்வந்தர்களின் செல்வத்தைக் கவர்ந்து கொள்வார். பிறர் மனைவிகளுடன் தொடர்பு கொண்டு விபசாரம் செய்வார். வேட்டையாடுவதில் பிரியம் கொண்டவர். அவர் கொடிய இயல்பு கொண்டவர். மனதில் பெரிய பெரிய செயல்களை நிறைவேற்றுவதில் ஊக்கம் வைத்திருந்தார். ஒரு நாள் கள் குடிப்பவர்களின் கூட்டம் ஒன்று திரண்டது. அக்கூட்டத்தில் சேர்ந்து, பாவசர்மா வயிறு முட்ட முட்டக் குடித்தார். அஜீர்ணத்தினால் மிகவும் துன்புற்று அந்த பாபாத்மா, காலவசப்பட்டு இறந்து போனார். அவர் ஒரு பெரிய பனைமரமாக ஆனார். அடர்த்தியாகவும் குளிர்ச்சியாகவும் இருந்த அதன் நிழலை அண்டி பிரம்மராக்ஷஸர்களான ஒரு கணவனும், மனைவியும் வாழ்ந்து வந்தனர்.

அவர்களது முற்பிறப்பின் சம்பவம் வருமாறு. குசீபலர் என்ற பெயர் கொண்ட அந்தணர் ஒருவர் இருந்தார். அவர் வேதங்கள், அவற்றின் அங்கங்கள் இவற்றின் தத்வங்களை அறிந்தவர். எல்லா சாஸ்திரங்களின் பொருள்களையும் சிறப்பாக அறிந்திருந்தார். அவர் நன்னடத்தை யுடையவர். அவருடைய மனைவியின் பெயர் குமதி. அவள் மிகவும் தீய எண்ணங்கொண்டவள். அந்த அந்தணர் கற்றறிந்த வித்வானாக இருந்தாலும், பேராசை வசப்பட்டு, தம்முடைய மனைவியுடன் சேர்ந்து கொண்டு, ஒவ்வொரு நாளும் எருமை, காலபுருஷனின் பிரதிமை, குதிரைகள் முதலிய பெரிய தானங்களைப் பெற்று வந்தார். தானத்தில் கிடைத்ததில் சல்லிக் காசு கூட வேறு அந்தணர்களுக்குக் கொடுக்க மாட்டார். கணவன், மனைவி இருவரும் காலப்போக்கில் மரணமடைந்து பிரம்மராக்ஷஸாக ஆனார்கள். பசியினாலும் தாகத்தினாலும் துன்புற்று, பூமியில் சுற்றித் திரிந்து கொண்டிருந்த அவர்கள் அந்தப் பனை மரத்தருகே வந்தனர்; அதன் அடியில் இளைப்பாறத் தொடங்கி



னர். இதன் பிறகு மனைவி தன் கணவனை இவ்வாறு வினவினாள் ''நாதா! நம்முடைய இந்தப் பெரிய துன்பம் விலகும் வழிதான் என்ன? பிரம்மராக்ஷஸ நிலையிலிருந்து எவ்வாறு நாம் விடுவிக்கப்படுவோம்?'' அப்போது அந்த அந்தணர் உரைத்தார் ''பிரம்ம வித்யையைப் பற்றிய உபதேசம், ஆத்ம சம்பந்தமான விஷயங்களைப் பறறிச் சிந்திப்பது, கர்மநியதியின் அறிவு இவை இல்லாமல் சங்கடத்திலிருந்து எவ்வாறு விடுதலை கிடைக்க இயலும்?''

இதைக் கேட்ட மனைவி ''கிம் தத்$_3$ப்$_3$ரஹ்ம? கிமத்$_4$யாத்மம்? கிம் கர்ம புருஷோத்தம?'' என வினவினாள்.


''புருஷோத்தமரே! அந்தப் பிரம்மம் என்பது எது? அத்யாத்மம் என்பது என்ன? கர்மம் என்பது எத்தகையது?'' மனைவி இதைச் சொன்னதுதான் தாமதம். வியப்பை உண்டு பணணக் கூடிய சம்பவம் நிகழ்ந்தது. அதைக் கேள்! மேற்கூறிய வாக்கியம் கீதையின் எட்டாவது அத்தியாயத்திலுள்ள ஒரு சுலோகத்தின் பாதி. அதைக் கேட்டதால், அந்த மரம் பனைமர வடிவத்தை விடுத்து, பாவசர்மா என்ற பெயருள்ள அந்தணராக ஆயிற்று. அந்நொடியிலேயே, ஞானம் ஏற்பட்டுவிட்டதால், உள்ளம் தூய்மை பெற்று, அவர் பாவத்தின் பயனான மர வடிவிலிருந்து விடுபட்டார். அந்த அரை சுலோகத்தின் மஹிமையாலேயே கணவன்-மனைவி இருவரும் கூட பிரம்மராக்ஷஸ நிலையிலிருந்து விடுபட்டனர். அவர்களுடைய வாயிலிருந்து, எதிர்பாராத விதமாகவே எட்டாவது அத்யாயத்தின் பாதி சுலோகம் வெளிப்பட்டது. அதன் பிறகு ஆகாய வழியாக திவ்யமான ஒரு விமானம் வந்தது. கணவன் மனைவி இருவரும் அவ்விமானத்தில் ஏறி விண்ணுலகிற்குச் சென்று விட்டனர். அங்கு நிகழ்ந்த இந்த சம்பவம் முழுவதும் மிகவும் வியப்பையளித்தது.

அதன் பிறகு அறிவாளியான அந்தணர் பாவசர்மா, மிகுந்த கருணையுடன் அந்தப் பாதி சுலோகத்தை எழுதிக் கொண்டார். தேவாதி தேவனான ஜனார்தனருக்கு ஆராதனை செய்யும் விருப்பத்துடன், முக்தியை அளிக்கும் காசி க்ஷேத்திரத்திற்குச் சென்றுவிட்டார். அங்கே விசாலமான புத்தியுள்ள அந்த அந்தணர் கடுந்தவம் செய்யத் தொடங்கினார். அதே சமயத்தில் பாற்கடலில் உதித்த லக்ஷ்மிதேவி கைகளைக் கூப்பிக் கொண்டு, தேவாதி தேவரான உலகநாயகரான ஜனார்தனரிடம் ''நாதா! திடீரென்று துயிலிலிருந்து எழுந்து ஏன் நின்று கொண்டீர்கள்?'' என வினவினாள்.

பகவான் கூறினார் ''தேவி! காசி க்ஷேத்திரத்தில் கங்கைக் கரையில் அறிவு நிறைந்த அந்தணர் பாவசர்மா என் பக்திச் சுவையில் நிறைந்து மிகவும் கடுமையாகத் தவம் செய்து கொண்டிருக்கிறார். அவர் தமது புலன்களை வசப்படுத்தி, கீதையின் எட்டாவது அத்யாயத்திலுள்ள அரை சுலோகத்தை ஜபம் செய்கிறார். அவரது தவத்தால் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். வெகு நாழிகையாக அவரது தவத்திற்கு உகந்த பலன் எது என்று எண்ணிக் கொண்டிருந்தேன். இனியவளே! இப்போது அந்தப் பலனைக் கொடுக்கத் தீவிரமான விருப்பத்துடன் இருக்கிறேன்.''

பார்வதி தேவி வினவினாள் ''பகவானே! ஆனந்த வடிவினரான ஸ்ரீ ஹரியையே எழுந்து நிற்கச் செய்யுமளவு பக்தி செய்த அந்த பாவசர்மா எத்தகைய பலனை அடைந்தார்?''

மஹாதேவர் கூறினார் ''தேவி! அந்தணப் பெரியோரான பாவசர்மா, மகிழ்ச்சி கொண்ட பகவான் விஷ்ணுவின் அருளை அடைந்து, சுகத்தின் எல்லை நிலையான மோக்ஷத்தை அடைந்தார். நரக யாதனைகளை அநுபவித்துக் கொண்டிருந்த அவருடைய மற்ற வம்சத்தினரும், அவருடைய நற்செயலால், பகவானுடைய இருப்பிடத்தை அடைந்தனர். பார்வதி! இந்த எட்டாவது அத்யாயத்தின் பெருமையைச் சிறிதளவே உனக்குக் கூறினேன். இதைப் பற்றி எப்பொழுதும் சிந்தனை செய்து கொண்டே இருக்க வேண்டும்.''



ஸ்ரீமத்பகவத்கீதையின்
ஒன்பதாவது அத்யாயத்தின் பெருமை

பகவான் மஹாதேவர் கூறுகிறார்:

பார்வதி! இப்போது நான் கீதையின் ஒன்பதாவது அத்யாயத்தின் பெருமையைப் பற்றிக் கூறப்போகிறேன். கவனமாகக் கேள். நர்மதை ஆற்றின் கரையில் மாஹிஷ்மதி என்ற நகரம் உள்ளது. அங்கே வேதங்கள், அவற்றின் அங்கங்கள் இவற்றின் தத்வத்தை அறிந்தவரான மாதவர் என்ற பெயர் கொண்ட அந்தணர் வாழ்ந்து வந்தார். அவர் எந்தச் சமயத்திலும் வீட்டிற்கு வரும் விருந்தினர்களிடம் இன்பம் காட்டுவார். தாம் பெற்ற கல்வியின் மூலமாக



ஏராளமான செல்வத்தை சம்பாதித்து, ஒரு பெரிய யக்ஞத்தைச் செய்யத் தெடங்கினார். அந்த யாகத்தில் பலி கொடுப்பதற்காக ஒரு வெள்ளாட்டுக் கடா வாங்கப்பட்டது. அதன் உடலுக்கு பூஜை செய்து முடிந்த பின்னர், எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தி, அந்த வெள்ளாடு சிரித்துவிட்டு உரத்த குரலில் ‘‘அந்தணரே! இத்தகைய அநேகவிதமான யக்ஞங்களால் என்ன பயன்? இவற்றால் ஏற்படும் பயன் அழிவுடையது; மேலும் இவை பிறப்பு, முதுமை, மரணம் இவற்றிற்கும் காரணம். இவை எல்லாவற்றையும் செய்த போதும் எனது தற்போதைய நிலைமை இப்படி இருக்கிற தென்றால், இந்த யக்ஞங்களினால் என்ன பயன் என்பதை நீங்களே முடிவு செய்து கொள்ளுங்கள்’’ எனக் கூறிற்று. மிகுந்த ஆவலை ஏற்படுத்திய ஆட்டின் சொற்களைக் கேட்டு யக்ஞ மண்டபத்தில் இருந்த அனைவரும் மிகுந்த வியப் படைந்தனர். அப்போது யாகம் செய்து கொண் டிருந்த யஜமானரான அந்தணர் தமது கைகளைக் கூப்பிக் கொண்டு, கண் இமைக் காமல் பார்த்த வண்ணம்



ஆட்டை வணங்கி, ''நீங்கள் எந்த ஜாதியைச் சேர்ந்தவராக இருந்தீர்கள்? உங்களுடைய இயல்பும், நடத்தையும் எப்படி இருந்தன? எந்தச் செயலால் நீங்கள் ஆடாகப் பிறக்க நேரிட்டது? இவையெல்லாவற்றையும் என்னிடம் சொல்லுங்கள்'' என்று மரியாதையுடன் அதை வினவினார்.

ஆடு கூறிற்று: ''அந்தணரே! முன்பிறவியில் மாசற்ற, வேள்வியில் வல்ல ஓர் அந்தணரின் குடும்பத்தில் நான் பிறந்திருந்தேன். வேதவித்யையில் நிபுணனாக இருந்தேன்; எல்லா யக்ஞங்களையும் செய்து வந்தேன். என் மனைவி துர்கா தேவியிடம் பக்தி கொண்டவள்; தன் பாலகன் நோய் நீங்கி குணம் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் துர்க்கைக்கு பலி கொடுப்பதற்காக ஓர் ஆடு வாங்கி வருமாறு ஒருநாள் அவள் என்னிடம் கூறினாள். அதன் பிறகு சண்டிகா தேவியின் கோயிலில் நான் அந்த ஆட்டைக் கொல்ல முற்பட்டபோது, அந்த ஆட்டின் தாய், ''அந்தணர்களிலேயே தாழ்ந்தவனே! பாவி! என் குட்டியை நீ கொல்ல விரும்புகிறாய். ஆகவே நீயும் ஆடாகப் பிறக்கக் கடவது'' என்று எனக்கு சாபம் கொடுத்தது. அப்போது காலகதியினால் மரணம் அடைந்த நான் ஆடாகப் பிறந்தேன். நான் விலங்காகப் பிறந்திருந்தாலும் என் முற்பிறவியின் நினைவு எனக்கு இருந்து கொண்டிருக்கிறது. அந்தணரே! கேட்பதற்கு உங்களுக்குத் தீவிர விருப்பம் இருந்தால், உங்களை இன்னும் அதிக வியப்பில், ஆழ்த்தக்கூடிய விஷயத்தைக் கூறுகிறேன். குருஷேத்திரம் என்ற பெயருள்ள ஒரு நகரம் இருக்கிறது. அது மோக்ஷத்தை அருளக் கூடியது. அங்கே சந்திரவர்மா என்ற பெயர் கொண்ட சூரிய வம்சத்து அரசன் அரசாண்டு வந்தான். ஒரு சமயம் சூரிய கிரஹணம் ஏற்பட்ட போது, மிகுந்த சிரத்தையுடன் காலபுருஷ தானம் செய்வதற்கு செய்வதற்கு ஏற்பாடு செய்தான். தானமளிப்பதற்காக, வேதம் வேதாங்கங்கள் இவைகளில் கரை கண்ட வித்வானான அந்தணர் ஒருவரை அழைத்தவரச் செய்தான். புரோஹிதர்களுடன் கூட புனிதமான ஆற்றில் நீராடச் சென்றான். நீராடிய பின் இரண்டு ஆடைகளை அணிந்து கொண்டான். தூய, மகிழ்ச்சி நிரம்பிய உள்ளத்துடன், வெள்ளை நிறச் சந்தனத்தை பூசிக் கொண்டு, அருகில் நின்று கொண்டிருந்த புரோஹிதருடைய கையைப் பிடித்துக் கொண்டு, அந்த சந்தர்ப்பத்திற்கு ஏற்ற மனிதர்களால் சூழப்பட்டு, தன்னிடத்திற்குத் திரும்பினான். தன்னிடம் வந்த பின்னர் உரிய விதிமுறைப்படி பக்தியுடன் ஒரு அந்தணருக்குக் காலபுருஷனை தானம் செய்தான்.

அப்போது காலபுருஷனின் இதயபாகத்தைக் கிழித்துக் கொண்டு பாவம் ஒரு சண்டாள வடிவில் வெளிப்பட்டது. பிறகு சிறிது நேரங்கழித்து இகழ்ச்சியும் சண்டாளப் பெண் வடிவம் தாங்கி காலபுருஷனின் சரீரத்திலிருந்து வெளிவந்தது. அது அந்தணருக்கருகே வந்தது. இவ்வாறு சண்டாளர்களின் அந்த ஜோடி, சிவந்த கண்களுடன் வெளிப்பட்டனர். அந்தணரின் உடலில் பலவந்தமாக பிரவேசிக்கத் தொடங்கினர். அந்தணர் தம் மனத்திற்குள் கீதையின் ஒன்பதாவது அத்யாயத்தை ஜபம் செய்து கொண்டிருந்தார். அரசன் எதுவும் பேசாமல், மௌனமாக இவையனைத்தையும் ஆவலுடன் பார்க்கத் தொடங்கினான். அந்தணரது மனத்தில் பகவான் கோவிந்தன் சயனித்துக் கொண்டிருந்தார். கீதையின் ஒன்பதாவது அத்யாயத்தை ஜபம் செய்தவாறே தமக்குப் புகலாக விளங்கிய பகவானை அந்தணர் தியானம் செய்தபோது, கீதையின் எழுத்துக்களிலிருந்து வெளிப்பட்ட விஷ்ணு தூதர்களால் துன்புற்ற இரண்டு சண்டாளர்களும் தப்பி ஒடிவிட்டனர். அவர்களது முயற்சி வீணாயிற்று. இந்த சம்பவத்தை இவ்வாறு நேரில் கண்ட அரசனின் கண்கள் ஆச்சரியத்தால் திடுக்கிட்டன. அரசன் அந்தணரை வினவினான் ''அந்தணப் பெரியோரே! மிகவும் பயங்கரமான இந்த ஆபத்திலிருந்து நீங்கள் எப்படித் தப்பினீர்கள்? நீங்கள் எந்த மந்திரத்தை ஜபம் செய்தீர்கள்? எந்த தேவதையை நினைத்துக் கொண்டிருந்தீர்கள்? அந்த மனிதன் யார்? அந்தப் பெண் யார்? அந்த இருவரும் எப்படி இங்கே வந்தனர்? பிறகு அவர்கள் எப்படி சாந்தமானார்கள்? இந்த எல்லாவற்றையும் என்னிடம் கூறுங்கள்.

அந்தணர், ''அரசே! பாவம்தான் சண்டாள வடிவம் தாங்கி வெளிவந்தது. அந்தப் பெண் ஸ்வரூபம் இகழ்ச்சி (நிந்தை)யின் நேரிடையான வடிவம். இந்த இருவரையும் நான் இப்படித்தான் அறிந்து கொள்கிறேன். அந்த சமயத்தில் நான் ஜபமாலையில் கீதையின் ஒன்பது அத்யாயத்தை ஜபம் செய்து கொண்டிருந்தேன். அதன் மஹிமையினால் எல்லா சங்கடங்களும் விலகிவிட்டன. அரசே! நான் தினந்தோறுமே கீதையின் ஒன்பதாவது அத்யாயத்தை ஜபம் செய்கிறேன். அதனுடைய மஹிமையினால், தானம் பெற்றுக் கொள்வதால் ஏற்படும் ஆபத்துக்களைக் கடந்து விடுகிறேன்.''

இதைக் கேட்டு, அரசன் அதே அந்தணரிடமிருந்த கீதையின் ஒன்பதாவது அத்யாயத்தைப் பயின்றான். பிறகு இருவருமே பரமசாந்தியை (மோக்ஷத்தை) அடைந்தனர் என விடைபகர்ந்தார்.

இந்தக் கதையை கேட்டுவிட்டு, அந்தணர் ஆட்டைக் கட்டிலிருந்து விடுவித்தார். கீதையின் ஒன்பதாவது அத்யாயத்தைப் பாராயணம் செய்து, பரமகதியை (மோக்ஷத்தை) அடைந்து விட்டார்.

ஸ்ரீமத் பகவத் கீதையின் பொருள், கருத்து இவைகளை நினைவுபடுத்திக் கொள்வதற்கான வழி :

பாராயணம் செய்வதற்கு முன்னால் சுலோகங்களின் பொருள்களைப் பாராயணம் செய்துவிட்டுப் பிறகு மூல சுலோகத்தின் பதவுரையில் கவனம் செலுத்திப் பாராயணம் செய்யுங்கள்.


கீதா ப்ரெஸ்ஸினால் வெளியிடப்பட்டுள்ள ''ஸாதக - ஸஞ்ஜீவினீ'' என்ற புத்தகத்தின் அடிப்படையில் பொருள் - திரண்ட கருத்து இவற்றைச் சிந்தியுங்கள். கீழ்க்கண்ட முறையில் இதனை செய்யுங்கள்;

1. ஒவ்வொரு அத்யாயத்தின் பெயரையும் அதற்கான காரணத்தையும் பற்றிச் சிந்தித்துப் பாருங்கள்.
2. ஒரு அத்யாயம் மற்றொன்றுடன் எப்படித் தொடர்பு கொண்டுள்ளது என்பதைச் சிந்தியுங்கள்.
3. ஒவ்வொரு சுலோகத்துடன் அடுத்த சுலோகம் எப்படித் தொடர்பு கொண்டுள்ளது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.
4. சுலோகத்தின் பொருள் - சொற்களின் பொருள் - உணர்த்தப்படும் கருத்து இவற்றைப் பற்றிச் சிந்தனை செய்யுங்கள்.

கீதை முழுவதிலும் முக்கியமாகக் கூறப்பட்டிருக்கும் விஷயங்களைப் பற்றிச் சிந்தியுங்கள். உதாரணமாக, பற்றற்ற விதத்தில் செயல்புரிதல் (நிஷ்காம கர்மம்) பயனை எதிர்பார்த்துச் செய்யப்படும் செயல் (ஸகாம கர்மம்) இவற்றைப் பற்றிக் கூறும் சுலோகங்கள் எவை எவை? தேவதைகளின் உபாஸனை, பகவானுடைய உபாஸனை, இவை எங்கெங்கு வர்ணிக்கப்பட்டிருக்கின்றன? ஸாதனைகள் செய்யும் வழிகள் எங்கெங்கு கூறப்பட்டுள்ளன? ஸித்தி பெற்றவர்களின் அடையாளங்கள் எந்த சுலோகங்களில் வர்ணிக்கப்பட்டுள்ளன? ஜீவர்களின் கதி, குணங்களை அடையாளம் கண்டு கொள்வது இவை பற்றி எங்கே கூறப்பட்டுள்ளது? - இது போன்றதான விஷயங்களை எண்ணிப் பார்க்கவும்.

ஸ்ரீமத்பகவத்கீதையின் பத்தாவது அத்யாயத்தின் பெருமை

சிவபெருமான் கூறுகிறார் ''அழகியே! இப்போது நீ கீதையின் பத்தாவது அத்யாயத்தின் பெருமையை விளக்கும் மிகப் புனிதமான கதையைக் கேள்! ஸ்வர்க வடிவான கோட்டையை அடைவதற்கு இது அழகான படிக்கட்டு; மஹிமையின் எல்லைநிலம். காசி மாநகரில் தீரபுத்தி என்ற பெயர் கொண்ட புகழ் பெற்ற ஓர் அந்தணர் இருந்தார். அவர் என்னிடம், நந்தியின் பக்திக்கு சமமான பக்தி கொண்டிருந்தார். நல்ல முறையில் புகழை பெறுவதில் அவர் ஈடுபட்டிருந்தார்; அவர் அமைதி நிறைந்த உள்ளம் கொண்டவர். ஹிம்ஸை, கடுமை, அசட்டுத் துணிச்சல் இவற்றிலிருந்து விலகி இருந்தார். புலன்களை வென்றவராக இருந்ததால், நிவ்ருத்தி மார்க்கத்தில் நிலைபெற்றிருந்தார்; வேத வடிவான கடலைக் கடந்திருந்தார்; சாஸ்திரங்கள் அனைத்தின் உட்கருத்தை அவர் அறிந்திருந்தார். அவருடைய சித்தம் எப்பொழுதும்



என்னுடைய தியானத்தில் நன்கு ஈடுபட்டிருந்தது. அவர் தம் மனதை உள்ளே உள்ள ஆத்மாவில் ஈடுபடுத்தி, எப்பொழுதும் ஆத்மதத்வத்தை அநுபவத்தில் பெற்றுக் கொண்டிருப்பார். ஆகவே, அவர் எங்கேனும் செல்ல முற்பட்டால், அன்புக்குக் கட்டுப்பட்டு அவர் பின்னால் ஓடோடி அவர் கையைப் பிடித்துக் கொண்டு உதவி செய்து கொண்டே இருந்தேன். இதைக் கண்ட என் பார்ஷதரான (சிவகணங்களில் ஒருவர்) ப்ருங்கிரிடி வினவினார் ''பகவானே! இந்த விதமாக, நன்றாக யார் தான் உங்களை தரிசித்திருக்க முடியும்? நீங்களே ஒவ்வொரு காலடியிலும் கை கொடுத்து உதவி, அவருடன் கூடப் போகும் அளவிற்கு அந்த மஹாத்மா எத்தகைய தவம், ஹோமம் அல்லது ஜபம் செய்திருக்கிறார்?''

ப்ருங்கிரிடி இவ்வாறு வினவியதும் நான் விடையளிக்கத் தொடங்கினேன். ''முன்னொரு காலத்தில் நடந்த சம்பவம். கைலாஸ பர்வதத்திற்கருகிலுள்ள புன்னாக வனத்திற்குள் சந்திரனின் அமுதமயமான கிரணங்கள் தோய்ந்த பூமியில் ஒரு மேடையில் நான் அமர்ந்திருந்தேன். நான் உட்கார்ந்ததும் மிக வேகத்துடன் புயல் வீசத் தொடங்கியது. அங்கிருந்த மரங்களின் கிளைகள் மேலும் கீழுமாக ஆடி ஒன்றுக்கொன்று மோதிக் கொள்ளத் தொடங்கின. உடைந்து நொறுங்கி, கீழே விழுந்து சிதறிய சிறு கிளைகளுக்கு அளவே இல்லை. மலையின் அசையாத நிழல் கூட அசையத் தொடங்கியது. இதன் பிறகு அங்கே பயங்கரமான ஓர் ஒலி எழுந்தது; மலையின் குகைகள் அதை எதிரொலித்தன. அதன் பிறகு வானிலிருந்து ஒரு பெரிய பறவை கீழே இறங்கிற்று. அதன் காந்தி கருமேகம் போன்று இருந்தது.

அந்த நிறம் திரண்ட மை போன்றும், அடர்த்தியான இருள் போன்றும், இறகுகள் துண்டிக்கப்பட்ட கருப்பு மலை போன்றும் தோன்றியது. கால்களைத் தரை மீது ஊன்றிக் கொண்டு, அந்தப் பறவை என்னை வணங்கியது. ஒரு அழகான புதிய தாமரை மலரை என் பாதங்களில் வைத்துத் துதி செய்யத் தொடங்கியது.

பறவை ''தேவா! உங்களுக்கு வெற்றி உண்டாகட்டும். சித்தத்தில் உள்ள ஆனந்தமயமான அமுதக் கடல் நீங்கள்; அதே போன்று இவ்வுலகைக் காப்பாற்றுபவர். எப்பொழுதும் நல்லெண்ணத்துடனும், பற்றின்மை என்ற அலைகளாலும் ஒளி மிகுந்து விளங்குகிறீர்கள். உங்களுடைய சிறப்புக்களுக்கு எல்லையே இல்லை. உங்களுக்கு வெற்றி உண்டாகுக! அத்வைத வாஸனை நிறைந்த புத்தியின் மூலமாக நீங்கள் மூன்று வித மலங்களும் இல்லாதவராக இருக்கிறீர்கள். புலன்களை வென்ற பக்தர்களுக்கு நீங்கள் கட்டுப்பட்டிருக்கிறீர்கள். தியானத்தில் உங்களுடைய திருமேனி கண்ணுக்குப் புலப்படுகிறது. அவித்யா மயமான உபாதி (மறைக்கும் பொருள்) இல்லாதவராகவும், என்றும் விடுபட்டவராகவும், வடிவமில்லாதவராகவும், குற்றமற்றவராகவும், எல்லை யற்றவராகவும், அஹங்காரம் இல்லாதவராகவும், எதனாலும் மறைக்கப்படாதவராகவும், குணமற்றவராகவும் விளங்குகிறீர்கள். உங்களுடைய பாதத் தாமரைகள் சரணமடைந்த பக்தர்களைக் காப்பாற்றத் திறமை வாய்ந்தவை. உங்களுடைய பயங்கரமான நெற்றி வடிவான பெரிய ஸர்ப்பத்தின் விஷஜ்வாலைகளால் நீங்கள் மன்மதனைச் சாம்ப லாக்கினீர்கள். உங்களுக்கு வெற்றி உண்டாகுக! ப்ரத்யக்ஷம்* முதலிய பிரமாணங்களுக்கு அப்பாற்பட்டவராக இருந்தாலும், சான்றுகளால் நிரூபிக்கக்கூடிய ஸ்வரூபமுடையவர். உங்களுக்குத் திரும்பத் திரும்ப வணக்கங்கள். ஞானத்தின் தலைவராகவும் அதேபோன்று

* *ஒரு விஷயத்தின் உண்மையை நிலைநாட்ட ப்ரத்யக்ஷம், அநுமானம், சப்தம் என்ற மூன்று வழிகள் உண்டு. ''சப்தம்' எனறால் வேதம். வேதங்களால் விளக்கப்படுபவர் பகவான்.*

மூன்று உலகங்களின் வடிவத்தைத் தாங்குபவராகவும் உள்ள உங்களுக்கு நமஸ்காரம். சிறந்த யோகிகள் தொட்டு வணங்கும் உங்களுடைய பாதகமலங்களை வணங்குகிறேன். கடக்கமுடியாத பிறவி என்ற பாவ வடிவான கடலைக் கடக்க உதவுவதற்கு இப்பாதங்கள் அற்புதமான திறமையுடையவை. மஹாதேவா! ஸாக்ஷாத் ப்ருஹஸ்பதியும் உங்களைத் துதி செய்யத் திறனற்றவர். ஆயிரம் முகங்களைக் கொண்ட ஆதிசேஷனுக்கும் உங்கள் குணங்களை வர்ணித்துக் கூறத் திறமை இல்லை. என் போன்ற அற்ப புத்தியுடைய பறவைக்கு என்ன திறமை இருக்க முடியும்?'' என்று கூறிப் பலவாறாகத் துதித்தது.

அந்தப் பறவை செய்த துதியைக் கேட்ட நான் ''பறவையே! நீ யார்? எங்கிருந்து வந்திருக்கிறாய்? உன் வடிவ அமைப்பு அன்னப்பறவை போன்று இருக்கிறது; ஆனால் உன் நிறத்தில் கருமை கலந்திருக்கிறது. எதை விரும்பி நீ இங்கு வந்திருக்கிறாய்? அதைக் கூறு'' என்று அதனிடம் வினவினேன்

பறவை கூறிற்று ''தேவர்களுக்கு அதிபதியே! பிரம்மதேவருடைய அன்னப்பறவை என்று என்னை அறிந்து கொள்ளுங்கள். எந்தச்செயலின் விளைவாக என் உடலில் இப்போது கருநிறம் வந்திருக்கிறதோ, அதைக் கேளுங்கள். நீங்கள் எல்லாம் அறிந்தவர் எனினும், நீங்கள் காரணத்தைக் கேட்டதால் சொல்கிறேன். சௌராஷ்ட்ர (ஸூரத்) நகரத்திற்கு அருகில் தாமரைகள் மலர்ந்து விளங்கும் பொய்கை ஒன்று இருக்கிறது. அதிலிருந்து பூரண வெண் திங்கள் துண்டு போன்று இருந்த வெள்ளை நிறத் தாமரை மலர்களின் ஒரு பிடி அளவை எடுத்துக் கொண்டு, மிக வேகமாக ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்தேன். பறந்து போகும்போதே திடீரென்று அங்கிருந்து தரையின் மீது விழுந்தேன். எனக்கு நினைவு வந்ததும், நான் கீழே விழுந்ததற்கான காரணம் எதுவும் புலப்படாத நிலையில், மனத்திற்குள் இவ்வாறு எண்ணத் தொடங்கினேன். - ''அடடா, என் மீது என்ன விழுந்திருக்கிறது? இன்று நான் எப்படிக் கீழே விழுந்தேன்? வெள்ளைக் கற்பூரம் போன்று இருந்த என் வெள்ளைநிற உடலில் இந்தக் கருமை நிறம் எப்படி வந்தது?'' இவ்வாறு வியப்படைந்து, நான் சிந்தித்துக் கொண்டிருந்தபோது, குளத்திலிருந்த தாமரை மலர்களிலிருந்து வெளிவந்த இச்சொற்கள் என் காதில் பட்டன. ''அன்னப் பறவையே எழுந்திரு! நீ கீழே விழுந்ததற்கும், உன் உடல் கருமையானதற்குமான காரணத்தைக் கூறுகிறேன்''. அப்போது நான் எழுந்து, குளத்தின் நடுவே சென்றேன். அங்கு ஐந்து தாமரைகளோடு கூடிய அழகான ஒரு தாமரைச் செடியைக் கண்டேன். அதை வணங்கி, அதைச் சுற்றி வலம் வந்தேன். நான் கீழே விழுந்ததற்கான காரணங்களைக் கேட்டேன். தாமரைச் செடி கூறிற்று ''அன்னமே! ஆகாய வழியில் நீ என்னைத் தாண்டிச் சென்றாய். அந்தப் பாவத்தின் விளைவாகவே நீ தரையில் விழ நேர்ந்தது; அக்காரணத்தினாலேயே உன் சரீரத்தில் கரிய நிறம் தென்படுகிறது. நீ விழுந்ததைக் கண்ட என் மனத்தில் இரக்கம் ஏற்பட்டது. மத்தியிலுள்ள இத்தாமரை மூலம் நான் பேசும் போது, என் வாயிலிருந்து வெளிப்பட்ட நறுமணத்தை முகர்ந்து அறுபதாயிரம் தேனீக்கள் விண்ணுலகை அடைந்தன. பறவைகளுக்கு அரசனே! எனக்கு இவ்வளவு மேன்மையும் இத்தகைய சக்தி வந்ததோ, அதன் காரணத்தைக் கூறுகிறேன், கேள். இப்பிறவிக்கு முன்பு, மூன்றாவது பிறவியில், இப்பூவுலகில் அந்தணர் ஒருவருடைய கன்னிகையாக நான் பிறந்திருந்தேன். அப்போது என் பெயர் ஸரோஜவதனா. பெரியோர்களுக்குப் பணிவிடை செய்துகொண்டு, எப்பொழுதும் கற்பு நெறி வழுவாது ஒழுகி வந்தேன். ஒரு நாள் நடந்த சம்பவம். நான் ஒரு மைனாவுக்குப் பாடம் கற்பித்துக் கொண்டிருந்தேன். இதனால் கணவருக்குப் பணிவிடை செய்வதில் கால தாமதம் ஏற்பட்டது. இதனால் கோபமடைந்த அவர், ''பாவி! நீ மைனாவாக ஆகக்கடவது'' என்று சாபம் கொடுத்தார்.

இறந்த பிறகு நான் மைனாவாக ஆனாலும், கற்பின் பெருமையால் முனிவர்களுடைய வீட்டிலேயே எனக்கும் புகல் கிடைத்தது. ஒரு முனிவரின் பெண் என்னைப் பேணி வளர்த்தாள். நான் இருந்த வீட்டிலிருந்த அந்த அந்தணர்கள் ''விபூதியோகம்' என்ற பெயர் கொண்டு புகழுடன் விளங்கும் கீதையின் பத்தாம் அத்யாயத்தைப் பாராயணம் செய்வார்கள். பாவங்களை அழிக்கும் அந்த அத்யாயத்தை நான் கேட்பது வழக்கம். அன்னமே! இறக்கும் தருணம் வந்ததும் மைனாவின் சரீரத்தை விடுத்து, பத்தாவது அத்யாயத்தின் மஹிமையினால் விண்ணுலகில் அப்ஸரப் பெண்ணாக ஆனேன். எனக்கு பத்மாவதி என்ற பெயர் ஏற்பட்டது. நான் பத்மா என்ற பெயருள்ள திருமகள் உகந்த தோழியாக ஆனேன். ஒரு நாள் விமானத்தில் அமர்ந்து சுற்றிக் கொண்டிருந்தேன். அழகிய தாமரை மலர்களால் அழகுற விளங்கிய இக்குளத்தின் மீது என் பார்வை விழுந்ததும் இதில் இறங்கி நான் ஜலக்கிரீடை செய்யத் தொடங்கியதுதான் தாமதம், அங்கு வந்த துர்வாஸ முனிவர் என்னை அதட்டினார். ஆடை ஏதும் அணிந்திருந்த நிலையில் அவர் என்னைப் பார்த்து விட்டார். அவரிடம் இருந்த அச்சத்தினால் நானே ஒரு தாமரைச் செடியாக வடிவம் எடுத்துக் கொண்டேன். என் இரு கால்களும் தாமரைகள் ஆயின; இரு கைகளும் கூட இரு தாமரைகள் ஆயின. மற்ற உறுப்புக்களுடன் கூட என் முகமும் ஒரு தாமரை ஆயிற்று. இவ்விதமாக நான் ஐந்து தாமரைகளுடன் கூடினவளாக இருக்கிறேன். முனிவர்களிற் சிறந்த துர்வாஸர் ஏன்னைப் பார்த்தார். அவருடைய கண்கள் சினத் தீயால் எரிந்து கொண்டிருந்தன. ''பாவியே! இதே வடிவில் நீ நூறாண்டு காலம் வரை கிட'' என்று அவர் சாபம் கொடுத்துவிட்டு கணநேரத்தில் மறைந்து விட்டார். தாமரைச் செடியாக இருந்தும் கூட, விபூதி யோக அத்யாயத்தின் பெருமையால் என் குரல் அழியவில்லை. என்னைத் தாண்டிச் சென்றதாலேயே நீ பூமியின் மீது விழுந்தாய். பறவைகளுக்கரசனே! இங்கு நின்று கொண்டிருக்கும் உன் முன்பே இன்று நான் சாபத்திலிருந்து விடுபடுகிறேன். ஏனெனில் இன்று நூறாண்டு காலம் பூர்த்தியாகிவிட்டது. என்னால் கானம் செய்யப்பட்ட அந்த உத்தம அத்யாயத்தை நீயும் கேள். அதைக் கேட்டமாத்திரத்திலேயே நீயும் உடனே இன்றே விடுபடுவாய்.''

இவ்வாறு கூறி, பத்மாவதி இனிமையான குரலில் தெளிவாக, கீதையின் பத்தாவது அத்யாயத்தைப் பாராயணம் செய்தாள்; அவள் சாபம் நீங்கினாள். அதன் பிறகு அவள் அளித்த சிறந்த தாமரை மலரைக் கொண்டு வந்து உங்களுக்கு அர்ப்பணம் செய்கிறேன்.

இவ்வளவு விரிவாகத் தன் கதையைச் சொல்லிவிட்டு, அப்பறவை தனது சரீரத்தைத் துறந்துவிட்டது. அற்புதம் போன்ற இந்த சம்பவம் உண்மையில் நடந்தது. பத்தாவது அத்யாயத்தின் மஹிமையினால் அப்பறவை அந்தணர் ஒருவருடைய குலத்தில் பிறந்துள்ளது. அவரிடமிருந்து கிடைத்த பயிற்சியினாலேயே குழந்தைப் பருவத்திலேயே இதன் வாயிலிருந்து பத்தாவது அத்யாயம் வெளிவருகிறது. பத்தாவது அத்யாயத்தின் பொருளைச் சிந்தித்துப் பார்த்தால், எல்லா உயிரினங்களிலும் அந்தர்யாமியாக விளங்கும், சங்கு, சக்கரம் ஏந்தியுள்ள பகவான் விஷ்ணு எப்பொழுதும் அவருக்குக் காட்சி அளித்துக் கொண்டே, இருக்கிறார். உடல் எடுத்த யார் மீதாவது, அன்பு நிறைந்த இவருடைய பார்வை எப்பொழுதாவது விழுந்தால், அவன் கள் குடிப்பவனாகவோ, பிரம்மஹத்தி செய்பவனாகவோ இருந்தால் தான் என்ன? அவன் முக்தி அடைகிறான். முற்பிறவியில் பயின்ற கீதையின் பத்தாவது அத்யாயத்தின் மஹிமையினால், கிடைத்தற்கரிய தத்வ ஞானத்தையும் இவர் அடைந்து விட்டார்; இவர் ஜீவன் முக்தியையும் அடைந்து விட்டார். ஆகவே இவர் பாதையில் எங்கேனும் நடக்கத் தொடங்கினால், நான் இவருக்குக்

கைகொடுத்து உதவி செய்து கொண்டிருக்கிறேன். ப்ருங்கியே! இவையெல்லாம் கீதையின் பத்தாவது அத்யாயத்தின் சிறந்த பெருமை''.

பார்வதி! இவ்விதம் ப்ருங்கியிடம் நான் கூறிய பாவங்களை அழிக்கும் கதையையே உனக்கும் கூறினேன். ஆணோ, பெண்ணோ அல்லது யாராயிருந்தால்தான் என்ன, இந்தப் பத்தாவது அத்யாயத்தைக் கேட்பதாலேயே எல்லா ஆச்ரமங்களின் விதிகளைக் கடைப்பிடிப்பதால் ஏற்படும் பலன்களும் அவர்களுக்குக் கிடைத்து விடுகிறது.

(24-ம் பக்கத் தொடர்ச்சி)

அத்.5. சூழ்நிலை ஸாதகமாக இருந்தாலும் சரி, பாதகமாக இருந்தாலும் சரி, சுகமுள்ளவனாகவோ, துக்கப்படுபவனாகவோ ஆகக்கூடாது.

இவற்றால் சுக-துக்கங்களை அடையும் மனிதன் உலகவாழ்விலிருந்து உயர்ந்து, மேலான ஆனந்தத்தை அநுபவிக்க இயலாது.

அத்.6. ஏதோ ஒரு ஸாதனை மூலம் உள்ளத்தில் ஸமபாவனை ஏற்பட வேண்டும். ஸமபாவனை ஏற்படாமல் மனிதன் பேதபாவனையற்றவனாக ஆக இயலாது.

அத். 7. எல்லாமே பகவான் தான் - இவ்வாறு ஏற்றுக் கொள்வது மிகச் சிறந்த ஸாதனை.

அத்.8. மரணத் தறுவாயில் உள்ள நினைவுக் கேற்பவே, ஜீவனின் கதி ஏற்படும். ஆகவே மனிதன் ஒவ்வொரு கணமும் பகவானை நினைத்துக் கொண்டே, தன்னுடைய கடமையைச் செய்து வர வேண்டும். இதனால் மரணத்துறுவாயில் பகவானுடைய நினைவு தொடர்ந்து இருந்து கொண்டிருக்கும்.

அத். 9. எந்த வர்ணத்தையோ, ஆசிரமத்தையோ, சம்பிரதாயத்தையோ, தேசத்தையோ சேர்ந்தவரானாலும், எந்தத் தொழிலைச் செய்பவராக இருந்தாலும், எல்லா மனிதர்களுமே பகவானை அடையத் தகுதி உடையவர்கள் தான்.

அத். 10. உலகத்தில் எங்கேனும் தனித்தன்மை, விசேஷச் சிறப்பு, அழகு, பெருமை, புலமை, வலிமை முதலியனை காணப்பட்டாலும் அதை பகவானுடையது என்றை கருதி பகவானையே சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும்.


அத். 11. இவ்வுலகை பகவானுடைய ஸ்வரூபமே என்று அறிவதன் மூலம் ஒவ்வொரு மனிதனாலும் பகவானுடைய விச்வரூபத்தை தரிசனம் செய்ய இயலும்.

அத். 12. உடல், புலன்கள், மனம், புத்தி இவற்றுடன் கூடத் தன்னையே பகவானுக்கு அர்ப்பணம் செய்பவன் பகவானுக்குப் பிரியமுள்ளவனாக ஆகிறான்.


அத். 13. உலகில் பரமாத்ம தத்வம் ஒன்று தான் அறிந்து கொள்ளத் தகுதி உடையது. அதை அறிந்த பின்னர் இறவா நிலையை அடையப் பெறுகிறோம்.

(தொடர்ச்சி 42-ம் பக்கம்)

ஸ்ரீமத் பகவத்கீதையின்
பதினொன்றாவது அத்யாயத்தின் பெருமை



மஹாதேவர் கூறுகிறார் ‘‘இனியவளே! கீதையின் வர்ணனை யுடன் தொடர்பு கொண்ட கதையையும், தொடர்ந்து விச்வரூப அத்யாயத்தின் புனிதமான பெருமையைப் பற்றியும் கேள். அகன்ற கண்களை உடைய பார்வதியே! இந்த அத்யாயத் தின் பெருமையை முழுமை யாக வர்ணிக்க இயலாது இதனுடன் தொடர்பு உள்ள கதைகள் ஆயிரக்கணக்கில்



உள்ளன. அவற்றி லிருந்து ஒரு கதையை நான் கூறப் போகிறேன். பிரணீதா நதிக்கரையில் மேகங்கரம் என்ற பெயர் கொண்ட, புகழ் பெற்ற, மிகவும் பெரியதான ஒரு நகரம் உள்ளது. அதைச் சுற்றியுள்ள மதிற்சுவர் களும், கோபுரங்களும்

மிக உயரமானவை. அங்கே தங்கத் தூண்கள் அழகூட்டும் பெரிய பெரிய ஓய்வு இல்லங்கள் இருக்கின்றன. அந்நகரத்தில் செல்வந்தர்கள், சுகமுள்ளவர்கள், சாந்தமான இயல்புடையவர்கள், நன்னடத்தை உள்ளோர், அதே போன்று புலன்களை வென்றவர்கள் வாழ்ந்து வந்தனர். அங்கே சார்ங்கம் என்ற பெயர் கொண்ட வில்லைக் கையில் ஏந்திய உலகநாயகனான பகவான் விஷ்ணு சிறப்புடன் விளங்குகிறார். அவர் பரபிரம்மத்தின் ஸகுண வடிவம். உலகின் கண்களாக ஒளி அளிப்பவர். அவருடைய திருமேனி திருமகளின் கண்களென்னும் தாமரை மலர்களால் பூஜிக்கப்படுகிறது. அது பகவானின் வாமனாவதாரத்தின் தோற்றம். அவரது திருவுருவம் சியாமள வர்ணம் கொண்டது; மெல்லியல்புடையது. அவரது திருமார்பில் ஸ்ரீவத்ஸ சின்னம் சோபையுடன் விளங்குகிறது. அவர் தாமரை மலராலும், வனமாலையினாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கிறார். பலவிதமான அணிகலன்களால் அழகுடன் விளங்கும் அவர், ரத்தினங்கள் நிறைந்த கடல் போன்று தோன்றுகிறார். மின்னல்களால் சூழப்பட்ட நீர்நிறைந்த மேகம் அழகு பெறுவது போன்று அவரது கருமேக வண்ணம் பீதாம்பரத்தால் பளிச் சென்று மின்னிற்று. அந்த வாமன பகவானை தரிசனம் செய்து, ஜீவர்கள் பிறவித் துன்பம், உலகியல் தளை இவற்றிலிருந்து விடுபடுகிறார்கள்.

அந்நகரில் மேகலா என்ற பெயர் படைத்த சிறந்த நீர்த்துறை இருக்கிறது. அதில் நீராடி, மனிதன் என்றும் நிலையான வைகுண்டத்தை அடைகிறான். அங்கே உள்ள உலக நாயகனும், கருணைக் கடலும் ஆன பகவான் நரசிம்மரை தரிசனம் செய்வதால், மனிதன் ஏழு பிறவிகளில் செய்த கொடிய பாவங்களிலிருந்து விடுபடுகிறான். மேகலாவில் விநாயகப் பெருமானை தரிசிப்பவர்கள் கடக்க முடியாத இடையூறுகளையும் கடந்து விடுகின்றனர்.

மேகங்கர நகரத்தில் சிறந்த அந்தணர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் பிரம்மசர்யத்தில் மிகுந்த ஈடுபாடுடையவர். ''நான், என்னுடையது' எனும் பற்று இல்லாதவர். வேதங்களிலும், சாஸ்திரங்களிலும் தேர்ந்த வித்வான். புலன்களை வென்றவர். அவர் பகவான் வாஸுதேவரைப் புகலாகக் கொண்டவர். அவர் பெயர் ஸுநந்தர். சார்ங்கம் என்ற வில்லைக் கையில் ஏந்திய பகவானுக்கருகே அவர் கீதையின் பதினொன்றாவது அத்யாயமான விச்வரூப தர்சன யோகத்தைப் பாராயணம் செய்து வந்தார். அந்த அத்யாயத்தின் மஹிமையினால் அவருக்குப் பிரம்மஞானம் ஏற்பட்டு விட்டது. பரமானந்தச் செறிவினால் நிறைந்த சிறந்த ஞானமயமான ஸமாதியின் மூலமாக, பொறி-புலன்கள் உள்நோக்கு கொண்ட காரணத்தால், அசைவற்ற நிலையை அடைந்துவிட்டார். எப்பொழுதும் ஜீவன்முக்தரான யோகியின் நிலையில் இருந்து வந்தார். ஒரு சமயம் குரு சிம்மராசியில் இருந்த போது, மஹாயோகியான ஸுநந்தர் கோதாவரி நதிக்கு யாத்திரை செய்யப் புறப்பட்டார். அவர் வரிசையாக விரஜதீர்த்தம், தாரா தீர்த்தம், கபிலா சங்கமம், அஷ்ட தீர்த்தம், கபிலாத்வாரம், நரசிம்மவனம், அம்பிகாபுரி, கரஸ்தானபுரம் முதலிய க்ஷேத்திரங்களில் நீராடி, தரிசனம் செய்து கொண்டே, விவாஹமண்டபம் என்ற பெயருள்ள நகரத்திற்கு வந்தார். அங்கே ஒவ்வொரு வீட்டிலும் சென்று, தங்குவதற்காக இடம் வேண்டினார்; ஆனால் எங்குமே அவருக்கு இடம் கிடைக்கவில்லை. கடைசியில் கிராமத்தின் தலைவர் அவருக்கு ஒரு தர்மசத்திரத்தைக் காட்டினார். தம்முடைய நண்பர்களுடன் கூட அந்த அந்தணர் அதற்குள் சென்று இரவில் தங்கினார். பொழுது புலர்ந்ததும் அவர் தர்மசத்திரத்திலிருந்து வெளியே தனியாக இருப்பதை உணர்ந்தார். ஆனால் அவருடைய மற்ற தோழர்கள் தென்படவில்லை. அவர்களைத் தேடுவதற்காக அவர் வெளிக் கிளம்பினார். அதற்குள் கிராமத் தலைவரை சந்தித்தார். கிராமத் தலைவர் கூறினார் ''முனிவர்களிற் சிறந்தவரே! எப்படிப் பார்த்தாலும், நீங்கள் நீண்ட ஆயுள் உடையவர் என்று தெரிகிறது. நல்ல பாக்கியம் உள்ளவர்கள், புண்ணியம் செய்த மனிதர்கள் இவர்கள் எல்லோரிலும் நீங்கள் மிகப்புனிதமானவர். சாதாரணமாக உலகில் காணக்கிடைக்காத ஏதோ ஒரு மஹிமை உங்களிடம் இருக்கிறது. உங்களுடைய நண்பர்கள்

எங்கு சென்றனர்? நீங்கள் இந்த வீட்டிற்கு வெளியே எப்படி வந்தீர்கள்? ஒரு விவரத்தைத் தெரிந்து கொள்ளுங்கள். உங்களைப் போன்ற தபஸ்வி வேறு எவரும் எனக்குத் தென்படவில்லை என்ற காரணத்தாலேயே நான் இவ்வளவு தூரம் சொல்கிறேன். அந்தணப் பெரியோரே! உங்களுக்குத் தெரிந்த மஹாமந்திரம் எது? எந்த வித்யையின் பலத்தை நம்பி இருக்கிறீர்கள்? எந்த தேவதையின் கருணையால் சாதாரணமாக உலகத்தில் காணக் கிடைக்காத சக்தி உங்களுக்கு வந்திருக்கிறது? கருணை கூர்ந்து இந்த கிராமத்தில் வசியுங்கள். உங்களுக்குத் தேவையான பணிவிடை, சேவை எல்லாவற்றையும் நான் செய்வேன்.''

இவ்வாறு கூறி, கிராமத் தலைவர் சிறந்த முனிவரான ஸுநந்தரைத் தமது கிராமத்தில் தங்க வைத்தார். இரவும் பகலும் மிகுந்த பக்தி சிரத்தையுடன் அவருக்குப் பணிவிடை செய்யத் தொடங்கினார். ஏழெட்டு நாட்கள் கழிந்த பின்னர், ஒரு நாள் விடியற்காலையில் கிராமத் தலைவர் மிகுந்த துக்கத்துடன் மஹாத்மாவின் முன் வந்து அழத் தொடங்கினார். அவர் கூறினார் ''ஐயோ! நான் துரதிர்ஷ்டம் பிடித்தவன். நேற்றிரவு அரக்கன் என் மகனைத் தின்றுவிட்டான். என் மகன் நற்குணங்கள் நிறைந்தவன்; பக்தியுள்ளவன்;'' கிராமத் தலைவர் இவ்வாறு கூறியதும் யோகியான ஸுநந்தர், ''அந்த அரக்கன் எங்கே இருக்கிறான்? அவன் ஏன் உங்கள் புதல்வனைத் தின்றான்?'' என வினவினார்.

கிராமத் தலைவர் கூறினார் ''அந்தணரே! இந்த நகரில் மனிதர்களைக் கொன்று தின்னும் மிகக் கொடிய ஒரு அரக்கன் வாழ்ந்து வருகிறான். ஒவ்வொரு நாளும் வ்ந்து நகர மாந்தர்களைக் கொன்று தின்பது அவன் வழக்கம். ஒரு நாள் நகரமாந்தர் அனைவரும் ஒன்று கூடி ''அரக்கனே! எங்கள் எல்லோரையும் நீ காப்பாற்ற வேண்டும். நீ உண்பற்கு வேண்டிய ஏற்பாட்டை நாங்கள் செய்து தருகிறோம். வெளியூரிலிருந்து இங்கு இரவில் வந்து உறங்கும் வழிப்போக்கர்களை நீ சாப்பிட வேண்டும்'' என்று அவனிடம் வேண்டினர். இவ்வாறு, கிராமத் தலைவனான என்னால் தர்மசத்திரத்திற்கு அனுப்பப்பட்டவர்களே ராக்ஷஸனுக்கு உணவாக வேண்டும் என்று நகரமாந்தர்கள் தீர்மானம் செய்தார்கள். தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவே அவர்கள் இவ்வாறு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மற்ற வழிப் போக்கர்களுடன் நீங்களும் வந்து இங்கே உறங்கினீர்கள். அரக்கன் அவர்கள் அனைவரையும் தின்றுவிட்டான், ஆனால் உங்களை மாத்திரம் விட்டுவிட்டான்; அந்தணப் பெரியோரே! உங்களிடம் என்ன அற்புத சக்தி உள்ளது? அதை நீங்களே அறிவீர்கள். இந்த சமயத்தில், என்னுடைய மகனின் நண்பன் ஒருவன் வந்திருந்தான்; ஆனால் என்னால் அவனை அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. அவன் என் மகனின் பேரன்புக்குரியவன். மற்ற வழிப் போக்கர்களுடன் சேர்த்து அவனையும் தர்மசத்திரத்திற்கு அனுப்பிவிட்டேன். தன் நண்பனும் தர்மசத்திரத்தில் தங்கியிருந்தான் என்பதைக் கேட்ட என் மகன் அவனை அழைத்து வர தர்மசத்திரத்திற்குச் சென்றான். ஆனால் அரக்கன் அவனையும் கொன்று தின்று விட்டான். இன்று அதிகாலையில், மிகவும் துக்கமடைந்து நான் அந்தப் பிசாசிடம் ''கொடியவனே! இரவில் என் மகனையும் சாப்பிட்டு விட்டாயே! உன் வயிற்றில் இருக்கும் என் மகன் உயிர் பெறக் கூடிய வழி ஏதாவது இருந்தால், அதைக் கூறு'' என்று கேட்டேன்.

''கிராமத் தலைவரே! தர்மசத்திரத்தில் நுழைந்த உங்களுடைய மகன் இன்னார் என்று அறியாததால், நான் அவனைச் சாப்பிட்டுவிட்டேன். என் அறியாமையால், மற்ற வழிப்போக்கர்களுடன் கூட உங்கள் மகனும் எனக்கு இரையாகிவிட்டான். என் வயிற்றில் அவன் உயிருடனும், பத்திரமாகவும் இருப்பதற்கான உபாயத்தை பிரம்மதேவனே நிர்ணயம் செய்திருக்கிறார். எப்பொழுதும் கீதையின் பதினொன்றாவது அத்யாயத்தைப் பாராயணம் செய்யும் அந்தணர்களின் மஹிமையினால் தான் எனக்கு விடுதலை கிடைக்கும்; என்னால் கொல்லப்பட்டவர்களும் திரும்பவும் உயிர் பெற்று எழுவார்கள். ஒருநாள் நான் இங்கிருந்து

வெளியேற்றிய ஓர் அந்தணர் ஒருவர் இங்கு வசித்து வருகிறார். அவர் இடைவிடாமல் கீதையின் பதினொன்றாவது அத்யாயத்தை ஜபம் செய்கிறார். இந்த அத்யாயத்தினை ஏழுமுறை ஜபித்து அந்த மந்திர நீரை என்மீது தெளித்தால் நான் சாபத்திலிருந்து விடுபடுவேன்'' என்று அவ்வரக்கன் பதில் கூறினான். இவ்விதம் அந்த அரக்கன் கூறிய செயதியைக் கேட்டு நான் உங்களிடம் வந்திருக்கிறேன்.

அந்தணர் ''கிராமத் தலைவரே! இரவில் உறங்கும் மனிதர்களைச் சாப்பிடும் அந்தப் பிராணி எந்தப் பாவச்செயலால் அரக்கனாக ஆகி இருக்கிறது?'' என வினவினார்.

கிராமத் தலைவர் கூறினார் ''அந்தணரே! இந்த கிராமத்தில் விவசாயம் செய்துவந்த அந்தணர் ஒருவர் இருந்தார். ஒரு நாள் அவர் மார்கழி மாதத்தில் அறுவடையாகும் பயிர்களை, ஆடுகள் மேய்ந்து விடாமல் காப்பாற்றிக் கொண்டிருந்தார். சிறிதே தூரத்தில் மிகப் பெரிய கழுகு ஒன்று ஒரு வழிபோக்கனைக் கொன்று தின்று கொண்டிருந்தது. அதே சமயத்தில் எங்கிருந்தோ வந்து கொண்டிருந்த ஒரு தபஸ்வி அந்த வழிப்போக்கனைக் காப்பாற்றும் நோக்கத்தில் தொலைவிலிருந்தே கருணையுடன் வந்து கொண்டிருந்தார். அதற்குள் அந்த வழிப்போக்கனைத் தின்றுவிட்டு, கழுகு ஆகாயத்தில் பறந்து சென்றுவிட்டது. கோபங் கொண்ட அந்த தபஸ்வி விவசாயியிடம் இவ்வாறு கூறினார் ''கலப்பையை சுமக்கும் துஷ்ட விவசாயியே! இகழத் தக்கவனே! நீ மிகவும் கொடூரமானவன்; தயவற்றவன்;பிறரைக் காப்பாற்றாமல் ஒதுங்கி, தன் வயிற்றை நிரப்புவதிலேயே ஈடுபட்டிருக்கிறாய். உன் வாழ்க்கை வீணானது. காப்பாற்றும் சக்தி தன்னிடம் இருந்தும், திருடன், துஷ்டமிருகங்கள், பாம்பு, பகைவன், நெருப்பு, விஷம், நீர், கழுகு, ராக்ஷஸன், பூதம், வேதாளம் இவற்றால் காயமடைந்த மனிதர்களைக் கவனிக்காமல், அலட்சியமாக இருப்பவன் அவர்கள் கொல்லப்படுவதால் ஏற்படும் பாவத்தை அடைகிறான். வலிமை இருந்தும் கூட, திருடன் முதலியவர்களுடைய பிடியில் சிக்கியுள்ள அந்தணனை விடுவிக்க முயலாதவன் கோரமான நரகத்தில் விழுவான்; பிறகு ஓநாயாகப் பிறப்பான். காட்டில் கொல்லப்படும் ஜீவர்களையும் கழுகு, புலி, இவற்றால் குறிவைத்துப் பார்க்கப்படும் ஜீவர்களையும் காப்பாற்றுவதற்காக, ''விடு, விடு'' என்று உரக்கக் குரல் எழுப்புபவன் பரமகதியை அடைகிறான். பசுக்களைக் காப்பாற்றுவதற்காக புலி, காட்டுவாசிகள், கொடுங்கோல் மன்னர்கள் - இவர்களால் கொல்லப்படும் மனிதர்கள் யோகிகளுக்கும் அரிதான விஷ்ணுவின் பரமபதத்தை அடைகிறார்கள். ஆயிரம் அச்வமேத யாகத்தின் பலன், நூறு வாஜ பேய யாகத்தின பலன் இவ்விரண்டையும் சேர்த்தாலும் கூட, புகலடைந்தவனைக் காப்பாற்றுவதால் ஏற்படும் புண்யத்தின் பதினாறில் ஒரு பங்குக்கு நிகராகாது. ஸாதுவான ஜீவர்கள், பயந்து நடுங்கும் ஜீவர்கள் இவர்களை அலட்சியம் செய்தால், புண்ணியசாலியான மனிதர்கள் கூட, உரிய காலத்தில், கும்பீபாகம்* என்ற பெயருள்ள நரகத்தில் துன்புறுவர். உனக்கு அவனைக் காப்பாற்றும் சக்தி இருந்தும் கூட,கொடிய கழுகினால் சாப்பிடப்பட்ட வழிப்போக்கனைக் காப்பாற்றவில்லை. இதிலிருந்து நீ தயவில்லாதவன் என்று தெரிகிறது. ஆகவே நீ அரக்கனாக ஆகக் கடவது''.

விவசாயி ''மஹாத்மாவே! நான் இங்கேயே இருந்தது என்னவோ உண்மைதான். வெகு நேரம் வயலைக் கவனிப்பதிலேயே என் கண்கள் கவனமாக இருந்தன. ஆகவே அருகில் இருந்தபோதிலும், கழகுக்கு மனிதன் இரையாகிக் கொண்டிருப்பதை என்னால் தெரிந்து

---

* **அஶ்வமேத$_4$ஸஹஸ்ராணி வாஜபேயஶதாநி ச ।**
ஶரணாக$_3$தஸந்த்ராணகலாம் நார்ஹந்தி ஷோட$_3$ஶீம் ॥
தீ$_3$நஸ்யோபேக்ஷணாம் க்ருத்வா பீ$_4$தஸ்ய ச ஶரீரிண: ।
புண்யவாநபி காலேந கும்பீ$_4$பாகே ஸ பச்யதே ॥
(பத்ம புராணம் 181 / 82, 84)

கொள்ள முடியவில்லை. ஆகவே எளியோனாகிய என் மீது நீங்கள் அருள் பாலிக்கவேண்டும்'' என்று கூறினான்.

தபஸ்வியான அந்தணர் ''தினந்தோறும் கீதையின் பதினொன்றாவது அத்யாயத்தை ஜபம் செய்வதன் மூலம் மந்திரிக்கப்பட்ட நீர் உன் தலையில் விழுந்தால், அப்போது நீ சாபத்திலிருந்து விடுபடுவாய்'' என்று கூறினார்.

இவ்வாறு கூறிவிட்டு, தபஸ்வியான அந்தணர் சென்று விட்டார். அந்த விவசாயி அரக்கனாக ஆனான். ஆகவே, அந்தணப் பெரியோரே! நீங்கள் சென்று பதினொன்றாவது அத்யாயத்தை ஜபம் செய்து நீரை மந்திரியுங்கள். பிறகு உங்கள் கையாலேயே அந்த அரக்கனின் தலையின் மீது அதைத் தெளியுங்கள்''.

கிராமத் தலைவரின் இந்த வேண்டுகோளைக் கேட்டதும் அந்தணரின் இதயத்தில் கருணை நிறைந்தது. ''மிகவும் நல்லது' என்று கூறி, கிராமத் தலைவருடன் அரக்கனருகே சென்றார். அந்த அந்தணர் ஒரு யோகி. ''விச்வரூப தர்சனம்' என்ற பெயர் கொண்ட பதினொன்றாவது அத்யாயத்தை ஜபித்து, அதனால் நீரை மந்திரித்து, அதை அரக்கனின் தலை மீது தெளித்தார். கீதையின் பதினொன்றாவது அத்யாயத்தின் மஹிமையினால் அந்த அரக்கன் சாபத்திலிருந்து விடுபட்டான். அவன் அரக்கருடைய சரீரத்தை விடுத்து, நான்கு கைகள் கொண்ட உருவத்தை அடைந்தான். அவன் கொன்று தின்ற ஆயிரக்கணக்கான வழிப்போக்கர்களும் கூட சங்கு, சக்கரம், கதை இவைகளை ஏந்தி நான்கு கைகள் கொண்ட வடிவினராக ஆகிவிட்டார்கள். அதன் பிறகு அவர்கள் எல்லோரும் விமானத்தில் ஏறிக் கொண்டார்கள். இதற்குள்ளாகவே, கிராமத்தலைவர் ''அரக்கனே! என் மகன் யார்? அவனைக் காட்டு'' என்று அரக்கனிடம் சொன்னார். அவர் இவ்வாறு கூறியதும் திவ்யமான புத்தியுள்ள அரக்கன் கூறினான் ''தமால மரம் போன்று கருநீல வண்ணம், நான்கு கைகள், மாணிக்கமயமான மகுடம் இவற்றால் சோபையுடன் விளங்குபவரும், மாணிக்கத்தால் செய்யப்பட்ட குண்டலங்களால் அலங்கரிக்கப்பட்டவரும், மாலை அணிந்துள்ள காரணத்தால் மனத்தைக் கவரும் தோள்கள் உடையவரும், தங்கத்தால் ஆன தோள் வளைகளால் அலங்கரிக்கப்பட்டவரும், தாமரை போன்ற கண்கள் உடையவரும், பார்ப்பதற்கு அழகான தோற்றத்துடன் விளங்குபவரும், கையில் தாமரை மலரை ஏந்திக் கொண்டு தெய்வீக விமானத்தில் அமர்ந்து தேவத் தன்மையை அடைந்து விட்டவருமானவர்தான் உங்கள் மகன் என்று அறிந்து கொள்ளுங்கள்''. இதைக் கேட்ட கிராமத் தலைவர் அதே வடிவில் இருந்த தம்முடைய மகனைப் பார்த்தார். அவனை வீட்டிற்கு அழைத்துச் செல்ல விரும்பினார். இதைப் பார்த்த அவர் மகன் கடகடவென்று உரக்கச் சிரித்துவிட்டு, ''கிராமத் தலைவரே! பல தடவை நீங்களும் என் மகனாக இருந்திருக்கிறீர்கள். முதலில் நான் உங்கள் மகனாக இருந்தேன். இப்போது அமரனாகிவிட்டேன். இந்த அந்தணப் பெரியோரின் அருளால் வைகுண்டத்திற்குச் செல்லப் போகிறேன். பாருங்கள்! இந்த அரக்கன் கூட நான்கு கைகளுடைய வடிவத்தைப் பெற்று விட்டான். பதினொன்றாவது அத்யாயத்தின் மஹிமையால் எல்லோருடனும் இவனும் வைகுண்டத்திற்குச் சென்று கொண்டிருக்கிறான். ஆகவே நீங்களும் இந்த அந்தணரிடமிருந்து கீதையின் பதினொன்றாவது அத்யாயத்தைக் கற்றுக் கொள்ளுங்கள். எப்பொழுதும் அதை ஜபம் செய்து கொண்டே இருங்கள். உங்களுக்கும் இத்தகைய உயர்ந்த கதி ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை. அப்பா! ஸாது ஸங்கம் மனிதர்களுக்குக் கிடைத்தல் அரிது. அது இப்போது உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. ஆகவே உங்களுடைய மனத்திற்கு விருப்பமானதை நிறைவேற்றிக் கொள்ளுங்கள். செல்வம், போகங்கள், தானம், யக்ஞம், தவம், முற்பிறவியில் செய்த செயல்கள் - இவற்றிலிருந்து அடைவதற்கு என்ன இருக்கிறது? விச்வரூபத்தை வர்ணிக்கும் அத்யாயத்தைப் பாராயணம் செய்வதாலேயே உயரிய மேன்மை ஏற்பட்டுவிடும். பூரண ஆனந்தச்செறிவான ஸ்ரீ கிருஷ்ணன் என்ற பெயர் பூண்ட பிரம்மத்தின்

திருமுகத்திலிருந்து குருக்ஷேத்திர புண்ய பூமியில் நண்பனான அர்ஜுனனுக்குக் கூறப்பட்ட அமுதமயமான உபதேசமே பகவான் விஷ்ணுவின் மிகச் சிறந்த தத்வம் நிறைந்த வடிவம். நீங்கள் அதையே சிந்தித்த வண்ணமாக இருங்கள். அது மோக்ஷத்தை அடைவதற்கான புகழ் பெற்ற மருந்து. உலக வாழ்வினால் அச்சம் கொண்ட மனிதர்களின் மனம், உடல் இவற்றை வருத்தும் துன்பங்களை அழிக்கக் கூடியது. பல பிறவிகளிலும் ஏற்பட்ட துன்பங்களை அழிக்கக்கூடியது. அதைத் தவிர துன்பத்தை அழிப்பதற்கான வேறு எந்த ஒரு சாதனமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே அதையே பாராயணம் செய்யுங்கள்'' என மொழிந்தான்.

ஸ்ரீமஹாதேவர் கூறுகிறார் ''இவ்வாறு கூறிவிட்டு, அனைவருடனும் அவன் விஷ்ணுலோகத் திற்குச் சென்றுவிட்டான். அதன் பிறகு கிராமத் தலைவர் அந்தணரிடமிருந்து அந்த அத்யாயத்தைக் கற்றுக் கொண்டார். அதன் மஹிமையினால் அந்த இருவருமே விஷ்ணுலோகத்திற்குச் சென்று விட்டனர். பார்வதி! உனக்கு இவ்வாறு பதினொன்றாவது அத்யாயத்தின் பெருமையை எடுத்துக் கூறினேன். இதைக் கேட்பதனாலேயே மிகப் பெரிய பாதகங்கள் கூட அழிந்து விடுகின்றன''.

(36-ம பக்கத் தொடர்ச்சி)

அத்.14. உலகத் தளையிலிருந்து விடுபட ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் - இந்த மூன்று குணங்களுக்கும் அப்பாற்பட்டவனாக ஆக வேண்டும். வேறு எதிலும் நாட்டமில்லாத பக்தியின் மூலம் மனிதன் இம்மூன்று குணங்களுக்கும் அப்பாற்பட்டவனாக ஆகிறான்.

அத்.15. இவ்வுலகத்திற்கு அடிப்படையான ஆதாரமும், மிகச் சிறந்த பரமபுருஷனும் ஆனவர் பரமாத்மா ஒருவரே! - இவ்வாறு கருதி வேறு எதிலும் லக்ஷ்யம் வைக்காமல் அவரை வழிபட வேண்டும்.

அத்.16. தீய குணங்கள், தீய நடத்தைகள் இவற்றாலேயே மனிதன் 84 லட்சம் பிறவிகளையும், மேலும் நரகத்தையும் அடைகிறான். ஆகவே பிறப்பு-இறப்பு இவற்றிலிருந்து விடுபடுவதற்காக தீய குணங்களையும் தீய நடத்தையையும் விட்டுவிடுவது அவசியம்.

அத்.17. சிரத்தையுடன் எந்த நற்செயலைச் செய்யத் தொடங்கினாலும், பகவானை நினைத்துக் கொண்டும் அவருடைய திருநாமத்தை உச்சரித்த பிறகுமே செய்யத் தொடங்க வேண்டும்.

அத்.18. எல்லா நூல்களின் ஸாரம் வேதங்கள்; வேதங்களின் ஸாரம் உபநிஷதங்கள்; உபநிஷதங்களின் ஸாரம் கீதை. கீதையின் ஸாரம் பகவானைச் சரணமடைவதே. வேறு எதிலும் நாட்டம் கொள்ளாமல், பகவானைச் சரணமடைபவனின் பாவங்கள் அனைத்திலிருந்தும் பகவான் அவனை விடுவிக்கிறார்.

ஸ்ரீமத்பகவத் கீதையின் பன்னிரண்டாவது அத்யாயத்தின் பெருமை



ஸ்ரீ மஹா தேவர் கூறுகிறார் ''பார்வதி! தென் திசையில் கோல்ஹாபுரம் என்ற பெயருள்ள ஒரு நகரம் இருக்கிறது. அது எல்லா விதமான சுகங்களுக்கும் ஆதார ஸ்தானம், ஸித்தி பெற்ற மஹாத்மாக்கள் வாழுமிடம்; ஸித்தி அடைவதற்கான க்ஷேத்திரம். பராசக்தி லக்ஷ்மீ தேவியின் முக்கியமான பீடம் அது. தேவதைகள் அனைவரும் அங்கே வந்து வழிபடுகிறார்கள்.

புராணங்களில் வெகுவாகக் கூறப்பட்டு, புகழுடன் விளங்கும் நகரம், அது போகங்களையும் மோக்ஷத்தையும் அருளக் கூடியது. அங்கே கோடிக்கணக்கான நீர்த் துறைகளும், சிவலிங்கங்களும் இருக்கின்றன. ருத்ரகயை கூட அங்கே இருக்கிறது. விசாலமான அந்நகரம் மக்களிடையே மிகவும் புகழ் பெற்று விளங்குகிறது. ஒரு நாள் ஒரு வாலிபன் அந்நகருக்கு வந்தான். அவன் ஏதோ ஒரு தேசத்து அரசகுமாரன். அவன் பேரழகு பொருந்தியவன்; அகன்ற கண்களும், சங்கு போன்ற கழுத்தையும் கொண்டவன்; அவனது

பருத்த தோள்களும், அகன்ற மார்பும், நீண்ட புஜங்களும், எடுப்பான தோற்றமும் காண்போர் கண்களைக் கவர்ந்தன. நகரத்தில் நுழைந்து நாற்புறங்களிலும் நிறைந்து விளங்கிய மாளிகைகளின் அழகைக் கூர்ந்து நோக்கிக் கொண்டு, தேவர்களுக்கெல்லாம் தலைவியான மஹாலக்ஷ்மியை தரிசிக்கும் பொருட்டு, பெரும் ஆவலுடன் மணிகண்ட நீர்த்துறைக்கு சென்றான். அங்கே நீராடிவிட்டு, அவன் பித்ருக்களுக்குத் தர்ப்பணம் செய்தான். பிறகு மஹாலக்ஷ்மியை வணங்கி பக்தியுடன் துதி செய்யத் தொடங்கினான்.

அரசகுமாரன் கூறினான் ''எல்லையற்ற தயை நிறைந்தவளும், எல்லா விருப்பங்களையும் நல்குபவளும், தன் கடைக்கண் நோக்கினாலேயே உலகைப் படைத்து, காத்து, அழிப்பவளும் ஆன அந்த உலகத்தாயான மஹாலக்ஷ்மிதேவிக்கு வெற்றி உண்டாகுக! எந்த தேவியின் சக்தியின் உதவியால் பிரம்மன் உலகைப் படைக்கிறானோ, பகவான் அச்சுதன் உலகைக் காக்கிறானோ, அதே போன்று பகவான் ருத்ரர் அகில உலகங்களை ஒடுக்குகிறாரோ, படைத்தல், காத்தல், அழித்தல் இவற்றின் சக்தியோடு கூடிய பராசக்தி தேவியை நான் வழிபடுகிறேன்.

கமலா தேவியே! யோகிகள் உங்கள் பாதத் தாமரைகளை சிந்தித்துக் கொண்டிருக்கின்றனர். தாமரையை இருப்பிடமாகக் கொண்டவளே! இயல்பான உங்களுடைய இருப்பினாலேயே, எங்களுடைய புலன்களால் அறியப்படும் விஷயங்களை அறிந்து கொள்கிறீர்கள். கற்பனைகள் அனைத்தையும், அவற்றைத் தோற்றுவிக்கும் மனத்தையும் நீங்களே உண்டுபண்ணுகிறீர்கள். இச்சாசக்தி, கிரியா சக்தி, ஞானசக்தி இவை அனைத்தும் உங்களுடைய: வடிவங்களே! நீங்கள் பரம ஞான வடிவானவள். உங்களுடைய வடிவம் மாசற்றது; என்றுமுள்ளது; உருவமற்றது; நிறமற்றது; முடிவு இல்லாதது; பயமில்லாதது; எதையும் சார்ந்து இல்லாதது; நோயற்றது; உங்களுடைய மஹிமையை வர்ணிக்க யாருக்குத்தான் திறமை இருக்கிறது? ஷட்சக்கரத்தைப் (ஆறு கோணத்தை) பிளந்து கொண்டு, அந்தக் கரணத்தின் பன்னிரெண்டு இடங்களில் உல்லாஸமாக இருப்பவளும், அனாஹதம், நாதம், பிந்து, நாதம், கலை இவற்றின் வடிவமானவளுமான அன்னை லக்ஷ்மிதேவியே! நான் உங்களை வணங்குகின்றேன். தாயே! நீங்கள் உங்கள் முகவடிவான பூர்ண சந்திரனிலிருந்து, அமுதவெள்ளத்தை பெருக்குகிறீர்கள். உங்களுக்கு பரா, பஶ்யந்தீ, மத்யமா, வைகரீ என்ற பெயருள்ள நாக்குகள் உள்ளன. ''அம்பிகையே! நீங்களே ப்ராம்மீ, வைஷ்ணவீ, மஹேச்வரீ என்ற சக்திகளாக விளங்குகிறீர்கள். வாராஹீ, மஹாலக்ஷ்மீ, நரஸிம்ஹீ, ஐந்த்ரீ, கௌமாரீ, சண்டிகை, உலகைப் புனிதமாக்கும் லக்ஷ்மீ, ஜகன்மாதாவான ஸாவித்ரீ, சந்திரகலா, ரோஹிணீ இவை அனைவரும் நீங்களே! பரமேச்வரியே! பக்தர்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதில் நீங்கள் கற்பகத் தருவை நிகர்த்தவள். என்மீது மகிழ்ச்சி கொள்ளுங்கள்''.

அவனது துதியால் மகிழ்ந்த அவனது கண்களுக்குப் புலனாகும் வடிவை எடுத்துக் கொண்டு, ''அரசகுமாரனே! நான் உன்னிடம் மகிழ்ச்சி கொண்டுள்ளேன். ஏதாவது சிறந்த வரத்தைக் கேள்'' என அந்த ராஜகுமாரனிடம் கூறினாள்.

அரசகுமாரன் ''என் தந்தையான ப்ருஹத்ரத மஹாராஜா அச்வமேதம் என்ற பெயர் கொண்ட யாகத்தைச் செய்து கொண்டிருந்தார். விதிவசத்தால் அவர் நோய்வாய்ப்பட்டு காலகதியை அடைந்தார். உலகம் முழுவதையும் சுற்றிவிட்டுத் திரும்பி வந்த யாகக்குதிரை யூபஸ்தம்பத்தில் (யாகக் குதிரையைக் கட்டுவதற்காக உள்ள கம்பம்), கட்டப்பட்டிருந்தது. இரவில் அதை யாரோ ஒருவன் கவர்ந்து சென்று ஒளித்து வைத்திருக்கிறான். அதைத் தேடுவதற்கு நான் சில ஆட்களை அனுப்பினேன். எந்த இடத்திலும் அதைக் காணாமல்

அவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பிவந்துவிட்டனர். யாகம் செய்ய அமர்ந்த ரித்விக்குகளின் (யாகத்தை நடத்தித் தர தீக்ஷை பெற்றவர்கள்) அநுமதி பெற்று, நான் உங்களைச் சரணமடைய வந்துள்ளேன். நீங்கள் என்னிடம் மகிழ்ச்சி கொண்டிருந்தால், யாகம் பூர்த்தி அடையும் பொருட்டு யாகக்குதிரை எனக்குக் கிடைக்கும்படி செய்யுங்கள். அப்போதுதான் என் தந்தையைக் கடனிலிருந்து என்னால் விடுவிக்க முடியும். புகலடைந்தவர்களுக்கு தயை செய்யும் உலகத் தாயான லக்ஷ்மீ தேவியே! யாகம் பூர்த்தி அடைவதற்கான உபாயத்தைச் செய்யுங்கள்'' என தேவியிடம் பிரார்த்தித்தாள்.

லக்ஷ்மீ தேவி ''அரசகுமாரனே! என் கோயிலின் வாயிலில் ஓர் அந்தணர் இருக்கிறார். மக்களிடையே ஸித்தஸமாதி என்ற பெயருடன் புகழ் பெற்றவராக விளங்குகிறார். எனது ஆணைப்படி அவர் உன்னுடைய கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பார்'' என அருளினார்.

மஹா லக்ஷ்மி இவ்வாறு கூறியதின் பேரில், ஸித்தஸமாதி வசித்து வந்த இடத்திற்கு அரசகுமாரன் வந்தான். அவருடைய பாதங்களில் விழுந்து வணங்கி, கைகளைக் கூப்பிக் கொண்டு, எதுவும் பேசாமல் அரசகுமாரன் நின்று கொண்டான். அப்போது அந்தணர் ''உன்னை அன்னையே இங்கே அனுப்பியுள்ளாள். நல்லது, உனது கோரிக்கைகளை நிறைவேற்றித் தருகிறேன்'' என மொழிந்தார். இவ்வாறு கூறிவிட்டு மந்திரங்களை அறிந்த அந்த அந்தணர் எல்லா தேவதைகளையும் அங்கே ஆகர்ஷித்தார். அச்சமயம் எல்லா தேவதைகளும் கைகூப்பிக் கொண்டும், பயந்தவாறும் அங்கே வந்து சேர்ந்தனர். அப்போது அந்த அந்தணச் செம்மல் அந்த தேவதைகளிடமும் ''தேவர் குழாமே! யாகத்திற்காக நிச்சயம் செய்யப்பட்டிருந்த இந்த அரசகுமாரனுடைய குதிரையை இரவில் திருடி, தேவர் தலைவனான இந்திரன் வேறு இடத்தில் ஒளித்து வைக்கிறான். விரைவில் அதைக் கொண்டு வருக!'' எனக் கூறினார்.

அவரது கூற்றுக்கிணங்க தேவதைகள் யாகக்குதிரையைக் கொண்டுவந்து சேர்த்தனர். இதன் பிறகு முனிவர் தேவதைகள் செல்வதற்கான ஆணையைப் பிறப்பித்தார். தேவதைகள் ஆகர்ஷிக்கப்பட்டதைப் பார்த்ததனாலும், இழந்த குதிரையை பெற்றதனாலும் மகிழ்ச்சியடைந்த அரசகுமாரன் முனிவரின் பாதங்களில் விழுந்து வணங்கி ''மஹரிஷியே! உங்களுடைய இந்தத் திறன் வியப்பை உண்டாக்குகிறது. நீங்கள்தான் இத்தகைய செயலைச் செய்ய வல்லவர்; வேறு ஒருவருக்கும் இத்தகைய திறமை இல்லை. அந்தணரே! என் வேண்டுகோளுக்கு செவி சாயுங்கள். என் தந்தையான ப்ருஹத்ரத மன்னர் அச்வமேத யாகம் செய்யத் தொடங்கினார். ஆனால் விதிவசத்தால், யாகம் பூர்த்தியாவதற்கு முன்பு, இறந்து விட்டார். அவருடைய உடலைக் கொதிக்க வைத்த எண்ணெயில் போட்டு வைத்திருக்கிறேன். பெரியீர்! அவரைத் திரும்பவும் உயிர் பெறச் செய்யுங்கள்'' என வேண்டினான்.

இதைக் கேட்ட மஹாமுனிவரான அந்தணர் ''வா! யாக மண்டபத்தில் உன் தந்தை இருக்குமிடத்திற்குச் செல்வோம்'' என்று புன்சிரிப்புடன் கூறினார். அரசகுமாரனுடன் அங்கே சென்று நீரை மந்திரித்து அதை சடலத்தின் தலையில் வைத்தார். அதை வைத்தவுடனேயே அரசன் பிழைத்தெழுந்து உட்கார்ந்து கொண்டான். பிறகு அந்தணரைப் பார்த்து ''தர்மத்தின் வடிவானவரே! நீங்கள் யார்?'' என வினவினான். அப்போது அரசகுமாரன் நடந்த சம்பவங்கள் அனைத்தையும், மஹாராஜாவுக்கு எடுத்துக் கூறினான். தன்னைப் பிழைக்க வைத்த அந்தணருக்கு நமஸ்காரம் செய்துவிட்டு, அவரை ''அந்தணரே! சாதாரணமாக உலகில் காணக் கிடைக்காத இந்த அற்புத சக்தி, எந்தப் புண்யத்தின் பயனாய் உங்களுக்குக் கிடைத்தது?'' என வினவினான். அவர் இவ்வாறு வினவியவுடன், அந்தணர் ''அரசே!

ஒவ்வொரு நாளும் சோம்பல் இல்லாமல், கீதையின் பன்னிரண்டாவது அத்யாயத்தை ஜபம் செய்கிறேன். அதனால் தான் எனக்கு இந்த சக்தி கிடைத்திருக்கிறது. இதனால் நீங்கள் திரும்பவும் உயிர்பெற முடிந்தது'' என்று இனிமையான குரலில் கூறினார். இதைக் கேட்டுவிட்டு, அந்தணர்களுடன் தொடர்ந்து அரசன் அந்த பிரம்மரிஷியிடமிருந்து, கீதையின் பன்னிரண்டாவது அத்யாயத்தைக் கற்றான். அதன் மஹிமையினால் அவர்கள் எல்லோருக்கும் நல்ல கதி ஏற்பட்டது. மற்றும் பலரும் அதைப் பாராயணம் செய்ததால், மேலான மோக்ஷத்தை அடைந்தனர்.

தாய்-தந்தையருக்கு ஸேவை செய்வதால், என்ன லாபம்?

தாய்-தந்தையருக்கு ஸேவை செய்வதால் இஹலோக-பரலோக வாழ்க்கை செம்மைப்படுகிறது; பகவான் மகிழ்ச்சி அடைகிறார். தாய்-தந்தையருக்கு ஸேவை செய்யாதவனிடம் பகவான் நம்பிக்கை வைப்பதில்லை - ''அப்பா-அம்மாவுக்குப் பணிவிடை, பக்தி பண்ணாத இவன், என்னிடமா பக்தி செலுத்தப் போகிறான்!''

புண்டரீகன், உடலாலும், உள்ளத்தாலும், ஆழ்ந்த ஈடுபாட்டுடன் தாய்-தந்தையருக்கு ஸேவை செய்தார். அவருடைய ஸேவையால் மகிழ்ந்த பகவான், அழைப்பு இல்லாமலே புண்டரீகன் வீட்டுக்கு வந்து - ''புண்டரீகனே! நீ உன் அப்பா-அம்மாவிடம் காட்டும் பக்தியினால் மனம் மகிழ்ந்து, நாணாகவே உனக்கு தர்சனம் கொடுப்பதற்காக நானே உன்னிடம் வந்திருக்கிறேன்'' - என்று கூறினார். அந்தச் சமயத்தில் புண்டரீகன், தாய்-தந்தையரின் பணிவிடையில் ஆழ்ந்திருந்தார். அதனால், அவர் பகவானிடம் - ''தாய்-தந்தையருக்குச் செய்யும் எந்த ஸேவை காரணமாகத் தாங்கள் இங்கே எனக்கு தர்சனம் கொடுப்பதற்காக வந்திருக்கிறீர்களோ, அந்த ஸேவையை நான் எப்படி விடுவேன்? இப்போது நான் தாய்-தந்தையருக்குப் பணிவிடை செய்து கொண்டிருக்கிறேன்; அது முடிந்த பின்னர்தான், நான் தங்களைத் தர்சனம் செய்யமுடியும். அதுவரை நீங்கள் காத்திருக்க விரும்பினால், இந்தச் செங்கற்களின் மேல் நின்று கொள்ளுங்கள்'' - என்று கூறிக்கொண்டே புண்டரீகன், இரண்டு செங்கற்களை முதுகுக்குப் பின்னால் விட்டெறிந்தார். பகவான் அவற்றின் மேல் நின்று கொண்டார். செங்கற்களின்மேல் நின்ற காரணத்தால், பகவானின் பெயர் ''விட்டல்'' என்றாயிற்று. பகவானுடைய இந்தக் காட்சியைக் காண விரும்பினால், (மஹாராஷ்ட்ரத்திலுள்ள) பண்டரீபுரம் சென்று காணலாம். இதுபோலவே, மஹாபாரதத்தில், ஊமைச் சண்டாளியின் கதை வருகிறது. ஊமைச் சண்டாளிக்கு அப்பா-அம்மாவிடமிருந்த பக்தியைப் பார்த்து, பகவானே அவள் வீட்டில் வசித்து வந்தார்! கருத்து என்னவென்றால், தாய்-தந்தையருக்குச் செய்யப்படும் ஸேவையால், மண்ணுலகத்திலும், மேலுலகத்திலும் எல்லாவிதமான நன்மைகளும் உண்டாகின்றன.

(கீதாப்ரஸ் வெளியீடான, **''குடும்பத்தில் எப்படி இருக்க வேண்டும்?''** - என்ற நூலிலிருந்து)

ஸ்ரீமத்பகவத்கீதையின்
பதின்மூன்றாவது அத்யாயத்தின் பெருமை



ஸ்ரீ மஹாதேவர் கூறுகிறார் ''பார்வதி! இப்போது பதின்மூன்றாவது அத்யாயத்தின் ஆழங்காணமுடியாத பெருமையை வர்ணிக்கப் போகிறேன், கேள்! அதைக் கேட்டால் நீ பெரிதும் மகிழ்ச்சி அடைவாய். தென் திசையில் துங்கபத்ரா என்ற பெயருடைய பெரிய ஆறு ஒன்று இருக்கிறது. அதன் கரையில் ஹரிஹரபுரம் என்ற அழகான நகரம் அமைந்துள்ளது. அங்கே ஹரிஹரன் என்ற பெயருள்ள சிவபெருமானே வீற்றிருக்கிறார். அவரை தரிசித்த மாத்திரத்திலேயே மிக உயரிய மேன்மை ஏற்படுகிறது. ஹரிஹரபுரத்தில் ஹரிதீக்ஷிதர் என்று பெயர் கொண்ட வேதவிற்பன்னரான அந்தணர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் தவத்திலும், வேதங்களைக் கற்பதிலும் ஈடுபட்டிருந்தார். அவர் வேதங்களின் கரைகண்ட வித்வான். அவருக்கு ஒரு மனைவி இருந்தாள். மக்கள் அவளை ''துராசாரா' என்று கூறி அழைத்தார்கள். இப்பெயருக்கு ஏற்றவாறே அவளுடைய செய்கைகளும் இருந்தன. தன் கணவனிடம் சொல்லத் தகாத சொற்களைக் கூறி வந்தாள். அவள் ஒரு போதும் அவருடன் கூடப் படுத்துறங்கவில்லை. தன் கணவரைச் சேர்ந்தவர்கள் வீட்டிற்கு வந்தால், அவர்கள் அனைவரையும் அதட்டி விரட்டுவாள். காமவெறி பிடித்து, விபசாரம் செய்பவர்களுடன் இன்புற்றிருப்பாள். நகரம் இங்குமங்கும் போய்க் கொண்டும் வந்து கொண்டும் இருந்த மாந்தர்களினால் நிறைந்திருப்பதைக் கண்ட அவள் ஜனசஞ்சாரமற்றதும்

எளிதில் அடையமுடியாததுமான காட்டில் ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தன்னுடையதாக ஆக்கிக் கொண்டாள். ஒரு சமயம் இரவில் தன்னிடம் எந்தக் காமுகனும் வராததைக் கண்டு, வீட்டின் தாழ்ப்பாளைத் திறந்துகொண்டு காட்டிலிருந்த தனது இடத்திற்குச் சென்று விட்டாள். அச்சமயம் அவள் சித்தம் காமத்தால் கலங்கி இருந்தது. ஒவ்வொரு புதருக்கும் மரத்தடிக்கும் சென்று யாராவது காமுகன் கிடைப்பானா என்று தேட ஆரம்பித்தாள். எல்லா இடங்களிலும் அவள் செய்த முயற்சி பயனளிக்கவில்லை. காமுகன் எவனும் தென்படவில்லை. நாற்புறங்களிலும் சுற்றித் திரிந்து கொண்டு காமாதுரத்தால் புலம்பிக் கொண்டிருந்த அப்பெண்ணின் குரலைக் கேட்டு, உறங்கிக் கொண்டிருந்த புலி ஒன்று விழித்து எழுந்தது. பாய்ந்து பாய்ந்து அவள் புலம்பிக் கொண்டிருந்த இடத்திற்கு வந்து சேர்ந்தது. ஏதோ ஒன்று வரும் ஒலியைக் கேட்ட அவள், அது காமுகனாக இருக்கலாம் என்ற ஆவலில் மறைவிலிருந்து வெளிவந்தாள். உடனே அப்புலி அவளை அடித்துக் கீழே தள்ளியது. இந்நிலையிலும் உரத்த குரலில் கத்திக் கொண்டு அவள் கூறினாள் ‘‘ஏ புலியே! இங்கே என்னை எதற்காகக் கொல்ல வந்திருக்கிறாய்? காரணம் கூறிவிட்டுப் பிறகு என்னைக் கொல்’’

அவளுடைய சொற்களைக் கேட்டுப் பேராற்றல் படைத்த அப்புலி, அவளைத் தன் இரையாக்கிக் கொள்ளாமல் நின்றது. பிறகு ‘‘தென் திசையில் மலாபஹா என்ற ஒரு நதி இருக்கிறது. அதன் கரையில் முனிபர்ணா என்ற நகரம் அமைந்திருக்கிறது. அங்கே பஞ்சலிங்கம் என்ற பெயருடன் ஸாக்ஷாத் சிவபெருமானே வாசம் செய்கிறார். அந்த நகரத்தில் தான் நான் ஒரு அந்தணருடைய மகனாகப் பிறந்து வாழ்ந்து வந்தேன். ஆற்றங்கரையில் தனிமையில் அமர்ந்து கொள்வேன். யாகம் செய்வதற்குத் தகுதி இல்லாதவர்களையும் யாகம் செய்ய வைத்து, அவர்களுடைய அன்னத்தை உண்டுவந்தேன். இதோடு மட்டுமின்றி, பணத்தில் கொண்ட பேராசையால், வேதபாராயணத்தின் பயனையும் எப்பொழுதும் விற்றுவந்தேன். பிச்சைக்காரர்களைத் திட்டி விரட்டும் அளவிற்கும், பிறருக்குக் கொடுக்கத் தகுதி இல்லாத பொருளைக் கூட நானே எடுத்துக் கொள்ளும் அளவிற்கும் என் பேராசை வளர்ந்தது. கடன் வாங்கும் சாக்கில் எல்லா மக்களையும் ஏமாற்றி வந்தேன். சிறிது காலம் கழிந்த பின்னர் நான் முதியவனானேன். என் ரோமங்கள் வெண்ணிறமாயின; கண்களின் பார்வை மங்கியது; வாயில் இருந்த பற்கள் அனைத்தும் விழுந்து விட்டன. இப்படியிருந்தும் கூட தானம் பெற்றுக் கொள்ளும் பழக்கம் விடவில்லை. புண்ணிய காலங்கள் வந்தால், தர்ப்பையை எடுத்துக் கொண்டு, ஆற்றங்கரைக்குச் செல்வது வழக்கம். அதன் பிறகு என் எல்லா அங்கங்களும் தளர்ந்து போய்விட்டன. ஒரு சமயம் கேட்டுப் பெற்றுக் கொள்ளவும், சாப்பிடவும் தீய நடத்தையுள்ள அந்தணன் ஒருவன் இல்லத்திற்குச் சென்றேன். அதே சமயத்தில் என் காலை ஒரு நாய் கடித்துவிட்டது. நான் நினைவு இழந்து, கணநேரத்திற்குள் தரைமீது விழுந்து விட்டேன். பிறகு என் உயிர் பிரிந்துவிட்டது. அதன் பிறகு இப்பொழுது இருக்கும் இப்புலியின் பிறவியை அடைந்தேன். அப்பொழுதிலிருந்து எளிதில் உள்ளே நுழைய முடியாத இக்காட்டில் வசித்து வருகிறேன். முற் பிறவியில் நான் செய்துள்ள பாவங்களை நினைத்து, அறவழி நிற்கும் ஆன்றோர், துறவி, நற்குணமுள்ள மனிதன், கற்புடைய பெண்கள் இவர்களை ஒரு பொழுதும் கொல்ல மாட்டேன். பாவம் செய்தவர்கள், தீய நடத்தை உள்ளவர்கள், கெட்ட நடத்தையுள்ள பெண்கள் இவர்களையே என் இரையாக ஆக்கிக் கொள்கிறேன். ஆகவே நீ கெட்ட நடத்தை உடையவளாக இருப்பதால் எனக்கு இரையாக ஆகப் போகிறாய்’’ எனக் கூறியது.

இவ்வாறு கூறிவிட்டு, கூர்மையான நகங்களால் அவளது சரீரத்தைத் துண்டு துண்டாக்கித் தின்றுவிட்டது. இதன் பிறகு யமதர்மராஜனின் தூதர்கள் அந்தப் பாவாத்மாவை ஸம்யமனீபுரிக்கு அழைத்துச் சென்றார்கள். யமதர்மாஜனின் கட்டளைப்படி பலமுறை அவளை மலம், மூத்திரம், இரத்தம் நிறைந்த பயங்கரமான குழிகளில் தள்ளினார்கள்.

கோடிக்கணக்கான கல்பங்கள் வரை அங்கே அவளை வைத்த பின்னர், அங்கிருந்து கொண்டுவந்து, நூறு மன்வந்தரம் வரை ரௌரவ நரகத்தில் தள்ளினார்கள். பிறகு நான்கு திசைகளிலும் தலையை நீட்டி, இரங்கத்தக்க நிலையில் புலம்பிக் கொண்டிருந்த அப்பெண்ணை இழுத்துவந்து, தஹனானனம் என்ற பெயருள்ள நரகத்தில் தள்ளினார்கள். அப்பொழுது அவள் தலைமயிர் அவிழ்ந்திருந்தது. அவள் உடல் பார்ப்பதற்கு கோரமாகக் காட்சி அளித்தது. இவ்விதமாக, கோரமான நரக யாதனைகளை அநுபவித்த பின்னர், அப்பெரும் பாவி இவ்வுலகில் சண்டாள குலத்தில் பிறந்தாள். சண்டாளனுடைய வீட்டில் வளர்ந்து பெரியவளாகி, முற்பிறவியில் செய்த செயல்களின் வாஸனையால் முன்போன்றே பாவம் செய்வதில் ஈடுபட்டாள். பிறகு அவள் தொழுநோயாலும், காசநோயாலும் பீடிக்கப்பட்டாள். கண்களில் வலி ஏற்படத் தொடங்கியது. பிறகு சிறிது காலங்கழித்து, அவள் திரும்பவும் தான் வாழ்ந்த இடமான ஹரிஹரபுரத்திற்குச் சென்றாள். அங்கு சிவபெருமானின் அந்தப்புரத்தின் தலைவி ஜம்பகாதேவி வீற்றிருக்கிறாள். அங்கே அவள் வாஸுதேவன் என்ற பெயர் கொண்ட புனிதமான அந்தணரைக் கண்டாள். அவர் இடைவிடாமல் கீதையின் பதின்மூன்றாவது அத்யாயத்தைப் பாராயணம் செய்து வந்தார். அவர் செய்த கீதா பாராயணத்தைக் கேட்டதுதான் தாமதம், அவள் சண்டாள சரீரத்திலிருந்து விடுபட்டாள். தெய்விகமான தேஹத்தைப் பெற்று விண்ணுலகடைந்தாள்.


தாய்-தந்தையருக்கு ஸேவை செய்தல் என்பதன் கருத்து என்ன?

தாய்-தந்தையருக்கு ஸேவை செய்தல் என்பதன் கருத்து நன்றி மறவாமையாகும். தாய்-தந்தையர் குழந்தையின் பொருட்டு என்னென்ன துன்பங்கள் அனுபவித்தார்களோ, அந்தக் கடன் மகன்மேல் இருக்கிறது. அந்தக் கடனை மகனால், ஒருபொழுதும் கொடுத்துத் தீர்க்க முடியாது. அம்மா, பிள்ளைக்கு எவ்வளவு உதவி செய்திருக்கிறாளோ, அவ்வளவு உதவியை மகனால் செய்யவே முடியாது. ''என்னுடைய உடம்புத் தோலைக் கொண்டு செருப்புத் தைத்து அம்மாவுக்குக் கொடுப்பேன்'' என்று எந்தப் பிள்ளையாவது சொன்னால், நாம் அவனிடம் கேட்கிறோம் - ''இந்தத் தோலை நீ எங்கிருந்து கொண்டு வந்தாய்? இதுவும் அம்மா கொடுத்ததுதானே? அந்தத் தோலைக் கொண்டு, செருப்புத் தைத்து அம்மாவுக்குக் கொடுப்பது, ரொம்பப் பெரிய செயலோ? கொடுக்கிறேன் என்று தற்பெருமை மட்டும் பேசிவிட்டாய்! இவ்விதமே ஶரீரம், பெரும் பங்கு அப்பாவினுடையது. அப்பாவின் முயற்சியாலேயே மகன் படிக்கவும், எழுதவும் தெரிந்து கொள்கிறான்; அவனுக்குச் சாப்பாடு, துணிமணி கிடைக்கிறது. இதற்குப் பதிலுதவி எப்படிச் செய்து கழிக்க முடியும்?'' ஆகவே, அப்பா-அம்மாவுக்கு ஸேவை செய்வதால், அவர்களை மகிழ்ச்சியோடு வைத்திருப்பதால் அந்தக் கடன் அடைக்கப்பட்டதாக ஆவதில்லை; ஆனால் மன்னிக்கப்பட்டதாக ஆகும்.

(கீதாப்ரஸ் வெளியீடான, **''குடும்பத்தில் எப்படி இருக்க வேண்டும்?''** - என்ற நூலிலிருந்து)

ஸ்ரீமத்பகவத்கீதையின்

பதினான்காம் அத்யாயத்தின் பெருமை



ஸ்ரீ மஹாதேவர் கூறுகிறார் ''பார்வதி! பிறவித் தளையிலிருந்து விடுபடுவதற்கு ஸாதனமாக உள்ள பதினான்காவது அத்யாயத்தின் பெருமையை இப்போது கூறுகிறேன், கவனமாகக் கேள், சிங்களத் தீவில் விக்ரம வேதாளன் என்ற பெயர் கொண்ட அரசன் இருந்தான். அவன் சிங்கத்திற்கு ஒப்பான பராக்கிரமம் உள்ளவனாக இருந்தான். அவன் எல்லாக் கலைகளிலும் வல்லவனாக இருந்தான்; ஒரு நாள் வேட்டையாட ஆவல் கொண்டு, அரசகுமாரர்களுடன் கூட இரண்டு பெண்நாய்களையும் அழைத்துக் கொண்டு காட்டிற்குச் சென்றான். அங்கு சென்றதும், மிக வேகமாகத் தப்பி ஓடிய முயலைப் பிடிக்கத் தன் நாயை ஏவினான். அப்போது எல்லாப் பிராணிகளும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, அந்த முயல் தப்பி ஓடியது பறப்பது போன்று இருந்தது. ஓடிக்கொண்டே போகும்போது மிகவும் களைப்புற்ற காரணத்தால் ஒரு ஆழமான குழியில் விழுந்து விட்டது. கீழே விழுந்த போதிலும் அது நாயின் பிடிக்கு அகப்படவில்லை. மிகவும் அமைதியான சூழ்நிலை இருந்த இடத்திற்குப் போய்ச் சேர்ந்தது. அங்கே மான்கள் அச்சம் எதுவுமின்றி அடர்ந்த மர நிழலில் அமர்ந்து இருந்தன. தாமாகவே கீழே விழுந்த தேங்காய்களாலும், மாம்பழங்களாலும் குரங்குகள் பசியாறின. அங்கே சிங்கங்கள், யானைக் குட்டிகளுடன் விளையாடின; பயம்

எதுவுமின்றி பாம்பு மயிலின் தோகைக்குள் புகுந்து கொண்டது. அந்த இடத்தில் ஓர் ஆசிரமத்தில் வத்ஸர் என்ற பெயர்கொண்ட முனிவர் வசித்துவந்தார். அவர் புலன்களை வசப்படுத்தியும், அமைதியுடனும் இடைவிடாமல் கீதையின் பதினான்காவது அத்யாயத்தைப் பாராயணம் செய்து வந்தார். ஆசிரமத்திற்கருகே வத்ஸமுனிவரின் சீடரொருவர் தமது கால்களைக் கழுவிக் கொண்டார். (அவரும் கீதையின் பதினான்காவது அத்யாயத்தைப் பாராயணம் செய்பவர் தான்) அவர் தமது பாதங்களைக் கழுவிக் கொண்ட நீரால் அதே இடம் ஈரமாகி சேறாயிற்று. முயல் இறந்து போகவில்லை. உயிர் ஒட்டிக் கொண்டிருந்தது. மூச்சு இரைக்க ஓடிவந்து அது அந்தச் சேற்றில் விழுந்தது. அந்த சேறு அதன் உடலில் பட்ட மாத்திரத்திலேயே, திவ்யமான விமானத்தில் அமர்ந்து கொண்டு முயல் விண்ணுலகை அடைந்தது. பிறகு பெண் நாயும் அதைத் துரத்திக் கொண்டு வந்தது. அங்கே அதன் உடலிலும் சேற்றின் துளிகள் ஒட்டிக் கொண்டன. பிறகு அதுவும், பசி, தாகம் இவற்றின் துன்பங்களிலிருந்து விடுபட்டு, நாயின் உடலை உகுத்து, தெய்வீகப் பெண்ணின் அழகான வடிவைப் பெற்றது. கந்தவர்களால் அழகுற விளங்கிய திவ்யமான விமானத்தில் ஏறிக் கொண்டு, அதுவும் விண்ணுலகுக்குச் சென்று விட்டது. இதைக் கண்டதும் கூர்மையான அறிவுள்ள முனிவரின் சீடர் தனக்குள் சிரிக்கத் தொடங்கினார். அந்த இரண்டு ஜீவர்களின் முற்பிறவியில் இருந்த பகைமைக்கான காரணத்தை எண்ணி, அவருக்கு மிகுந்த வியப்பு உண்டாயிற்று. அப்போது அரசனின் கண்களும் ஆச்சர்யத்தால் விரிந்தன. பக்தியுடன் அவரை வணங்கி, அரசன் ''அந்தணப் பெரியோரே! தாழ்ந்த பிறவிகளில் பிறந்துள்ள, இந்தப் பெண்நாயும் முயலுமான இரு பிராணிகளும், ஞானத்தைப் பெறாமலேயே விண்ணுலகு சென்று விட்டனவே, இதன் காரணம் என்ன? இதன் பின்னணியைக் கூறுங்கள்'' என்று அரசன் வினவினான்.

''அரசனே! இந்தக் காட்டில் வத்ஸர் என்ற பெயர்கொண்ட அந்தணர் வாழ்ந்து வருகிறார். அவர் புலன்களை வென்ற பெரிய மஹாத்மா. அவர் கீதையின் பதினான்காவது அத்யாயத்தை எப்பொழுதும் ஜபம் செய்துவருகிறார். நான் அவருடைய சீடன்தான். நான் கூட பிரம்மவித்யையில் தேர்ந்தவன். குருவைப் போன்றே நானும் ஒவ்வொரு நாளும் பதினான்காவது அத்யாயத்தை ஜபம் செய்து வருகின்றேன். என் கால்களை கழுவிக் கொண்ட நீரில் புரண்டதால் இந்த முயலும், பெண் நாயும் கூட விண்ணுலகை அடைந்து விட்டன. நான் எனக்குள் சிரித்துக் கொண்டதற்கான காரணத்தை இப்போது சொல்லுகிறேன்.

மஹாராஷ்டிரத்தில் பிரத்யுதகம் என்ற பெயருள்ள பெரிய நகரம் இருக்கிறது. அங்கே கபடமுள்ள மனிதர்களின் தலைவர் என்று எண்ணத் தகுதி பெற்ற கேசவர் என்ற அந்தணர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவருடைய மனைவியின் பெயர் விலோபனா. அவள் தன்னிஷ்டப்படி மோகத்தில் ஈடுபடுபவள். இதனால் கோபவசப்பட்டு வாழ்நாள் முழுவதிலும் இருந்த பகைமையை நினைவு கூர்ந்து, அந்தணர் தன் மனைவியைக் கொன்று தீர்த்தார். அந்த பாவத்தின் விளைவாகவே அவர் முயலாகப் பிறந்தார்; அந்தணர் மனைவியும் பாவத்தின் காரணமாகப் பெண் நாயாகப் பிறந்தாள். கீதையின் பதினான்காவது அத்யாயத்தின் பெருமையால் இருவரும் உய்ந்தனர்'' எனக் கூறி முடித்தார் அவர்.

ஸ்ரீ மஹாதேவர் கூறுகிறார்:-

இக்கதை முழுவதையும் கேட்டுவிட்டு; சிரத்தை கொண்ட அரசன் பதினான்காவது அத்யாயத்தைப் பாராயணம் செய்யத் தொடங்கினான். இதனால் அவனும் பரமகதியான மோக்ஷம் பெற்றான்.



ஸ்ரீ மஹாதேவர் கூறுகிறார் ‘‘பார்வதி! இப்போது கீதையின் பதினைந்தாவது அத்யாயத்தின் பெருமையைக் கேள். கௌட தேசத்தில் கிருபாண நரசிம்மர் என்ற பெயர் கொண்ட அரசர் இருந்தார். அவருடைய வாள் வலிமையால் தேவதைகள் கூடத் தோல்வியுற்றனர். கூர்மையான அறிவுடைய அவருடைய சேனாதிபதி சஸ்திரக் கலை, சாஸ்திரக் கலை இவ்விரண்டிலும் மிகுந்த அறிவுடையவராய் இருந்தான். ஸரபமேருண்டன் என்பது அவன் பெயர். அவனும் தலை சிறந்த வீரன். ஒரு சமயம் தீயவனான அவன் அரசகுமாரர்கள், அரசன் எல்லோரையும் கொன்று விட்டுத் தானே அரசனாக வேண்டும் என்ற எண்ணம் கொண்டான். இந்தத் தீர்மானம் செய்த சிறிது காலத்திற்குள்ளேயே அவன் நோய்க்கு பலியானான். சிறிது காலத்திற்குள்ளேயே பாவியான அவன் தன் முன்வினைப் பயனாக சிந்து தேசத்தில் பொலிவு மிக்க ஒரு குதிரையாகப் பிறந்தான். அதன் வயிறு ஒட்டியிருந்தது. குதிரையின் லக்ஷணங்களை அறிந்த ஒரு வணிகன், மிக அதிக விலை கொடுத்து அக்குதிரையை விலைக்கு வாங்கி விட்டான். மிகவும் முயன்று அதை ராஜ்யத்தின் தலைநகருக்கு ஓட்டிச் சென்றான். வணிகன் அக்குதிரையை அரசனுக்குக் கொடுப்பதற்காக வந்திருந்தான். அரசனுக்கு அவ்வணிகன் அறிமுகமானவன் என்றாலும், வாயில் காப்போர் அவன் வந்திருக்கும் செய்தியை அரசனுக்குத் தெரிவித்தனர். அரசர், ‘‘எதற்காக

வந்துள்ளாய்?'' என அவனை வினவினார். அதற்கு அவன் ''அரசே! ஸிந்து தேசத்தில் சிறந்த லக்ஷணங்களுடன் கூடிய குதிரை ஒன்று இருந்தது. மூவுலகங்களிலும் காணக் கிடைக்காத ஒரு ரத்தினம் என்று அதைக் கருதி, நிறைய விலை கொடுத்து வாங்கியுள்ளேன்'' என்று விடையளித்தான். அக்குதிரையை அங்கு கொண்டு வருமாறு அரசன் ஆணையிட்டான்.

உண்மையில் குணங்களில் அது உச்சைசிரவஸுக்கு நிகராக இருந்தது. அழகிய வடிவின் உறைவிடமாகவே அது இருந்தது. நல்ல லக்ஷணங்கள் நிறைந்துள்ளது. வணிகன் அதைக் கொண்டுவந்து நிறுத்தினான். அரசர் அதைக் கண்ணுற்றார். குதிரையின் லக்ஷணங்களை அறிந்த மந்திரிகள் அதை வெகுவாகப் புகழ்ந்தனர். அதைக் கேட்ட அரசர் எல்லையற்ற ஆனந்தத்தில் மூழ்கினார். வணிகனுக்கு அவன் கேட்ட தங்கக் காசுகளைக் கொடுத்து, அக்குதிரையை வாங்கினார். சில நாட்கள் கழித்து, வேட்டையாட ஆவல் கொண்டு, அரசர் அக்குதிரை மீது ஏறிக் கொண்டு காட்டிற்குச் சென்றார். குதிரையின் மீதிருந்தவாறே விலங்குகளைத் துரத்திச் சென்றார். கூடவே ஓடிவந்து கொண்டிருந்த படைவீரர்களுடைய தொடர்பு விட்டுப் போயிற்று. மான்களால் வசீகரிக்கப்பட்ட அவர் வெகுதூரம் வந்து விட்டார். தாகம் அவரை மிகவும் வாட்டியது. குதிரை மீதிருந்து கீழே இறங்கி நீர் இருக்கும் இடத்தைத் தேடலானார். ஒரு மரத்தின் கிளையில் குதிரையைக் கட்டினார். தான் ஒரு பாறை மீது ஏறித் தொடங்கினார். சிறிது தூரம் சென்ற பிறகு, இலைத் துண்டு ஒன்று காற்றில் பறந்து வந்து பாறையின் மீது வந்து விழுந்ததைப் பார்த்தார். அதில் கீதையின் பதினைந்தாவது அத்யாயத்தில் உள்ள ஒரு சுலோகத்தின் பாதி எழுதப்பட்டிருந்தது. அரசர் அதைப் படிக்கத் தொடங்கினான். அவருடைய வாயிலிருந்து வெளிவந்த கீதையின் சொற்களை கேட்டு, குதிரை விரைவிலேயே கீழே விழுந்து விட்டது. குதிரை உடலைத் துறந்து, விரைவிலேயே தெய்வீகமான விமானத்தில் அமர்ந்து கொண்டு அவன் (ஸரபமேருண்டன்) விண்ணுலகுக்குச் சென்றுவிட்டான். அதன் பிறகு அரசன் மலை மீது ஏறினார். அங்கே சிறந்த ஓர் ஆசிரமத்தைக் கண்டார். அங்கே நாகலிங்கமரங்கள், வாழைமரங்கள், மாமரங்கள், தென்னை மரங்கள் செழிப்பாக வளர்ந்திருந்தன. ஆசிரமத்திற்குள் ஓர் அந்தணர் ஒருவர் அமர்ந்தார். அவர் உலக வாஸனைகளிலிருந்து முழுவதும் விடுப்பட்டவர். அரசன் அவரை வணங்கி, மிகுந்த பக்தியுடன் ''அந்தணரே! சிறிது நேரத்திற்குமுன் என் குதிரை விண்ணுலகுக்குச் சென்று விட்டது. அதற்குக் காரணம் என்ன ?'' என வினவினார்.

முக்காலமும் அறிந்தவரும், மந்திரங்களை அறிந்தவரும், மஹான்களிற் சிறந்தவருமான விஷ்ணுசர்மா என்ற அவ்வந்தணர் அரசரின் சொற்களைக் கேட்டுவிட்டு, ''அரசே! முன்னொரு காலத்தில் உங்களிடம் ''ஸரபமேருண்டன்' என்ற பெயர் கொண்ட சேனாதிபதி இருந்தான். உங்களையும் உங்களுடைய புதல்வர்களையும் கொன்று விட்டு, ராஜ்யத்தைக் கைப்பற்ற எண்ணம் கொண்டிருந்தான். இதற்குள் அவன் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டான். அதன் பிறகு அப்பாவத்தின் விளைவாகக் குதிரையாகப் பிறந்தான். இலையில் எழுதப்பட்ட, கீதையின் பதினைந்தாவது அத்யாயத்தின் பாதி சுலோகம் கிடைத்தது. அதைத் தான் நீங்கள் படிக்கத் தொடங்கினீர்கள். உங்களுடைய வாயிலிருந்து வெளிவந்த அதையே கேட்டு அக்குதிரை விண்ணுலகை அடைந்து விட்டது'' என விடையளித்தார்.

அதன் பிறகு அரசரின் மெய்க்காப்பாளர்களான படைவீரர்கள் அரசரைத் தேடிக் கொண்டு அங்கே வந்து சேர்ந்தார்கள். அவர்கள் அனைவருடனும் அந்தணரை வணங்கிவிட்டு, அரசர் மகிழ்ச்சியுடன் அங்கிருந்து சென்றார். கீதையின் பதினைந்தாவது

அத்யாயத்தின் சுலோகம் எழுதப்பட்டிருந்த அந்த இலையைப் படித்துப் படித்து ஆனந்தம் கொள்ளத் தொடங்கினார். அவருடைய கண்கள் ஆனந்தத்தால் மலர்ந்தன. வீடு திரும்பிதும், மந்திரங்களை அறிந்த மந்திரிகளுடன் கூட, தம்முடைய மகன் ஸிம்மபலனுக்கு மகுடாபிஷேகம் செய்து வைத்து அவனை அரியணையில் அமர்த்தினார். தாமும் பதினைந்தாவது அத்யாயத்தை ஜபம் செய்து, மனத்தூய்மை பெற்று, மோக்ஷத்தை அடைந்து விட்டார்.


வரதட்சிணை வாங்குவது பாபமா? பாபம் என்றால், நமது ஶாஸ்த்ரங்களில் அதன் சிறப்பு ஏன் கூறப்பட்டிருக்கிறது?

ஶாஸ்த்ரங்களில் வரதட்சிணை கொடுக்க வேண்டும் என்ற முறை சொல்லப்பட்டிருக்கிறது. வாங்குவதற்கு அல்ல. வரதட்சிணை வாங்கக்கூடாது. வாங்காமலிருப்பதுதான் பெருமை. வரதட்சிணை கொடுப்பது, ஒருவர் சக்தியைப் பொறுத்தது. வரதட்சிணை பெற்றுக் கொள்வது, சக்திக்கு உட்பட்டதல்ல.

ஆசை என்பது இருவகைப்படும். (1) நம்முடைய பொருள் நமக்குக் கிடைக்க வேண்டியதுதானே? - இது நியாயமான விருப்பமேயானாலும், பரமாத்மாவை அடைவதற்கு இதுவும் இடைஞ்சல்தான். (2) மற்றவர்களுடைய பொருள் எனக்குக் கிடைக்கட்டுமே? - இந்த ஆசை நரகத்திற்கு இட்டுச் செல்லும். இதைப் போலவே வரதட்சிணை வாங்க வேண்டும் என்கிற ஆசை நரகத்திற்கு இட்டுச் செல்லும். வரதட்சிணை நிறையக் கிடைக்கலாம். குறைவாகக் கிடைக்கலாம். கிடைக்காமலே போகலாம் - இதெல்லாம் முந்தைய கர்மவினைப்படி நடக்கும். ஆனால் நீதியற்ற முறைகளில் பிறருடைய சொத்தை அடையவேண்டும் என்ற ஆசை இருக்கிறதே, அது துன்பமயமான நரகத்துக்கே அழைத்துச் செல்லும். மனித ஶரீரம் பெற்ற பின்னர் பயங்கரமான நரகங்களுக்குச் செல்வது எத்தனை பெரிய இழிவு! எத்தனை பெரிய வீழ்ச்சி! ஆதலால் குறைந்தபட்சம் பயங்கர நரகங்களுக்கு இட்டுச் செல்லும் ஆசையை, பிறர் பணத்துக்கு ஆசைப்படுவதை நிறுத்திவிட வேண்டும்.

பழைய காலத்தில் மகனுடைய மாமனார் வீட்டிலிருந்து வரதட்சிணையாக வந்த தொகையை, வெளியே வாரி வழங்கிவிடுவார்கள். தன் வீட்டில் சேர்ப்பதில்லை. ''பிறருடைய மகளைத் தானமாகப் பெற்றிருக்கிறோம்'' - இதற்குக் கழுவாயாக யக்ஞம், தானம், பிராமண போஜனம் முதலியன செய்தார்கள். விதிமுறையாகப் பசு முதலியவற்றைத் தானமாகப் பெறும் பிராமணர்கள், அதற்குப் பிராயசித்தமாக யக்ஞம், காயத்ரீ ஜபம் செய்கிறார்கள் என்பதை நாம் காண்கிறோம். பிறருடைய பணத்தை ஏற்பது பாபம் என்றால், வரதட்சிணை என்ற பெயரில் பணம் பெறுவதும் பாபம் என்று சொல்லவா வேண்டும்? வரதட்சிணை பெற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டால், அவருடைய மகிழ்ச்சிக்காகவே பெற்றுக் கொள்ள வேண்டும். பெற்றுக் கொள்வதில் சிறிதளவும் விருப்பமில்லாதிருந்து கொடுப்பவரின் மகிழ்ச்சிக்காகவே வாங்கிக் கொள்வது கொடுப்பதற்கு இணையானதே.

(கீதாப்ரஸ் வெளியீடான, **''குடும்பத்தில் எப்படி இருக்க வேண்டும்?''** - என்ற நூலிலிருந்து)



ஸ்ரீமத்பகவத்கீதையின்
பதினாறாவது அத்யாயத்தின் பெருமை

ஸ்ரீ மஹாதேவர் கூறுகிறார் ''பார்வதி! இப்போது நான் கீதையின் பதினாறாவது அத்யாயத்தின் பெருமையை எடுத்துக் கூறப் போகிறேன். கேள். குஜராத் பிரதேசத்தில் ஸௌராஷ்ட்ரம் என்ற பெயருடைய நகரம் ஒன்று இருக்கிறது. அங்கு இரண்டாவது இந்திரன் என்று அழைக்கத்தக்க, இந்திரனுக்கு சமமான வீரமுள்ள கட்கபாஹு என்ற பெயருடைய அரசன் அரசாண்டு வந்தான். அவனிடம் ஒரு யானை இருந்தது. அது எப்போதும் மதநீரைப் பெருக்கிக் கொண்டிருந்தது. அதனால் எப்போது மதம் பிடித்து மதவெறியுடன் இருந்து வந்தது. அரிமர்தனன் என்பது அந்த யானையின் பெயர். ஒரு நாள் இரவு பலவந்தமாக சங்கிலிகளையும் இரும்புத் தூண்களையும் உடைத்து நொறுக்கிக் கொண்டு, வெளி வந்தது. யானைப் பாகன் அங்குசத்தை எடுத்துக் கொண்டு அதன் இரு புறங்களிலிருந்தும் அதை அடக்கிக் கொண்டிருந்தான். ஆனால் கோபங்கொண்டு, அவை எல்லாவற்றையும் அலட்சியம் செய்துவிட்டுத் தனதிருப்பிடமான யானைக் கொட்டத்திற்கு விரைந்து சென்றது. நான்கு பக்கங்களிலிருந்தும் அதன் மீது ஈட்டிகளின் குத்து விழுந்து கொண்டிருந்தது. அப்படி இருந்த போதிலும் யானைப்பாகன் பயந்து கொண்டிருந்தான்; யானைக்குச் சிறிதுகூட பயம் ஏற்படவில்லை. ஆவலை உண்டாக்கக் கூடிய இந்த சம்பவத்தைப் பற்றி கேட்ட அரசன், யானையை அடக்கும் கலையில் நிபுணர்களான அரசகுமாரர்களுடன் அங்கு வந்தான். பலமான தந்தங்களுள்ள அந்த யானையைப் பார்த்தான். நகர மக்கள் தங்களுடைய மற்ற வேலைகள், தொழில்கள் இவற்றைப் பற்றி நினையாமலும், தங்கள் குழந்தைகளைப்


காப்பாற்றியவாறு, தொலைவில் நின்று கொண்டு மிகப் பயங்கரமான அப்பெரிய யானையைப் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். இதே சமயத்தில் குளத்தில் குளித்துவிட்டு அங்கிருந்து அதே வழியாக ஓர் அந்தணர் திரும்பி வந்து கொண்டிருந்தார். அவர் கீதையின் பதினாறாவது அத்தியாயத்திலுள்ள ''அபயம்' முதலிய சில சுலோகங்களை ஜபம் செய்து கொண்டிருந்தார். நகரமக்களும் யானைப் பாகர்களும் அவரைப் பலவாறாகத் தடுத்தார்கள். ஆனால் அவர் எதையும் ஏற்கவில்லை. யானையைக் கண்டு பயப்படவில்லை; ஆகவே அவர் சிறிதும் அசைந்து கொடுக்கவில்லை. யானை பிளிறும் ஒலியை எல்லாப் பக்கங்களிலும் பெருக்கிக் கொண்டிருந்தது. மதநீரைக் கைகளால் தொட்டுவிட்டு, அந்த அந்தணர் அச்சமின்றி வெளியே போய்விட்டார். இதைக் கண்ணுற்ற அரசனுக்கும் நகரமாந்தருக்கும் சொற்களால் வர்ணிக்க இயலாத வியப்பு ஏற்பட்டது. தாமரையொத்த அரசனின் கண்கள் வியப்பால் திடுக்கிட்டன. தான் அமர்ந்திருந்த வாகனத்திலிருந்து கீழே இறங்கி அந்தணரை அழைத்து, அவரை வணங்கினான். பிறகு ''அந்தணரே! இன்று நீங்கள் உலகில் காணமுடியாது அரியதொரு செயலைச் செய்திருக்கிறீகள். ஏனென்றால், காலனைப் போன்று பயங்கரமாக உள்ள இந்த பெரிய யானையின் முன்பு சென்று, சௌக்கியமாகத் திரும்பி வந்திருக்கிறீர்கள். நீங்கள் எந்த தேவதையைப் பூஜை செய்கிறீர்கள்? அவ்வாறே எந்த மந்திரத்தை ஜபம் செய்கிறீர்கள்? நீங்கள் எத்தகைய ஸித்தியை அடைந்திருக்கிறீர்கள் என்று சொல்லுங்கள்'' என வினவினான்.

''அரசே! நான் தினந்தோறும் கீதையின் பதினாறாம் அத்யாயத்திலுள்ள சில சுலோகங்களை ஜபம் செய்வது வழக்கம். இதனாலேயே நான் எல்லா ஸித்திகளையும் அடைந்திருக்கிறேன் என்றார் அந்தணர்.

மஹா தேவர் கூறுகிறார் ''அப்போது யானையைப் பார்க்கும் ஆவலை விட்டுவிட்டு அந்தணப் பெரியாரை அழைத்துக் கொண்டு, அரசன் தன் மாளிகைக்கு வந்தான். நல்லதொரு முஹூர்த்தத்தைப் பார்த்து, ஒரு லக்ஷம் தங்கக் காசுகளை தக்ஷிணையாக அந்தணருக்கு அளித்து, அவரைத் திருப்தி செய்தான். பிறகு அவரிடமிருந்து கீதையின் மந்திர தீக்ஷையைப் பெற்றான். கீதையின் பதினாறாவது அத்யாயத்தில் உள்ள ''அபயம்' முதலிய சில சுலோகங்களைப் பயின்ற பிறகு, யானையைச் சோதனை செய்து ஆவல் அவனுக்கு உண்டாயிற்று. பிறகு ஒரு நாள் படைவீரர்களுடன் வெளியே வந்து யானைப் பாகனைக் கொண்டு மதம் பிடித்த அந்தப் பெரிய யானையைத் தறியிலிருந்து விடுவிக்கச் செய்தான். அவன் பயமற்றவராக ஆனான். அரசின் சுகபோகங்களில் அவனுக்கு இருந்த மதிப்பு விலகிவிட்டது. தனது உயிரைத் துரும்பாக மதித்து, யானையின் முன்பு சென்றார். துணிச்சலுள்ளவர்களில் தலை சிறந்தவனாக கட்கபாஹு மந்திரத்தில் நம்பிக்கை வைத்து யானையருகே சென்றான். இடைவிடாது மதநீரைப் பெருக்கிக் கொண்டிருந்த யானையின் நெற்றிப் பகுதியைக் கையால் தொட்டு விட்டு பத்திரமாக திரும்பி வந்தான். யமன் வாயிலிருந்து பிழைத்த தர்மாத்மா போலவும், தீயவர்களின் பிடியிலிருந்து தப்பிய நல்லவர் போன்றும், அந்தப் பெரிய யானையிடமிருந்து தப்பிப் பிழைத்து வெளியே வந்தான். நகரத்திற்கு வந்ததும், மகனுக்கு மகுடாபிஷேகம் செய்வித்தான். கீதையின் பதினாறாவது அத்யாயத்தைப் பாராயணம் செய்து, பரமகதியை அடைந்தான்.

வாழ்க்கையை ஸ்ரீமத் பகவத் கீதாமயமாக ஆக்குவதற்கான வழி

கீதையில் கூறப்பட்டுள்ள ஸித்தாந்தங்களை நடைமுறையில் கொண்டுவந்து கொண்டே, 18வது அத்யாயத்தின் 68, 69 சுலோகங்களில் கூறியுள்ளபடி கீதையைப் படிப்பதில் பெருவிருப்பம் உள்ளவராக முயற்சி செய்யுங்கள்.



ஸ்ரீமத்பகவத்கீதையின் பதினேழாவது அத்யாயத்தின் பெருமை

ஸ்ரீமஹாதேவர் கூறுகிறார் ''பார்வதி! பதினாறாவது அத்யாயத்தின் பெருமை கூறப்பட்டது. இப்போது பதினேழாவது அத்யாயத்தின் எல்லையற்ற மஹிமையைப் பற்றிக் கேள். அரசன் கட்கபாஹுவின் மகனுக்கு துச்சாஸனன் என்ற பெயருடைய ஒரு வேலைக்காரன் இருந்தான். அவன் மிகவும் தீய புத்தியுள்ளவன். ஒரு சமயம் சிற்றரசர் களுடைய குமாரர்களுடன் நிறைய பணத்தைப் பந்தயம் வைத்து, யானை மீது ஏறிக் கொண்டான். சில அடிகள் முன்னால் சென்ற பின்னர், மக்கள் தடுத்தும் கூட, அறிவற்ற அவன் உரத்த குரலில் யானையைக் கொடூரமாக அதட்டினான். அவன் குரலைக் கேட்டதும் யானைக்குப் பெரும் கோபம் ஏற்பட்டது. கால்கள் வழுக்கியதால் துச்சாஸனன் தரை மீது விழுந்து விட்டான். கீழே விழுந்த துச்சாஸனனுக்கு மூச்சுத் திணறுவதைக் கண்டதும் கட்டுப்படுத்த அங்குசம் இல்லாததால், கோபம் நிறைந்த யானை அவனை மேலே தூக்கி எறிந்தது.மேலேயிருந்து கீழே விழும் போதே, அவன் உயிர் பிரிந்தது. இவ்விதம் விதிவசத்தால் மரணத்தைத் தழுவிய பிறகு, அவன் ஒரு யானையாகப் பிறந்தான். சிங்களத் தீவின் மன்னரின் மாளிகையில் அவன் பல காலம் வாழ்ந்தான். சிங்களத்தீவின் அரசனுக்கும் மஹாராஜா கட்கபாஹுவுக்கும் நெருங்கிய நட்பு இருந்தது. ஆகவே, தன் நண்பனை மகிழ்விப்பதற்காக, கடல் வழியாக அந்த யானையை அன்பளிப்பாக கட்கபாஹுவுக்கு அனுப்பி வைத்தான். ஒரு நாள், ஒரு கவி ஒரு சுலோகத்தின் *ஸமஸ்யையைப் பூர்த்தி


* *ஒரு செய்யுளின் ஒரு பாதியைக் கொடுத்தால் மற்றொரு பாதியைப் பூர்த்தி செய்தல்.*

செய்ததால் மகிழ்ச்சி அடைந்து, அவருக்கு அந்த யானையைப் பரிசாக கட்கபாஹு அளித்தான். அந்தக் கவி நூறு தங்கக் காசுகளைப் பெற்றுக் கொண்டு அந்த யானையை மாளவ தேசத்து அரசனுக்கு விற்றுவிட்டார். சிறிது காலம் சென்ற பிறகு, நன்றாக கவனத்துடன் காப்பாற்றப்பட்ட போதிலும் அந்த யானை கடும் ஜுரத்தினால் பீடிக்கப்பட்டு, இறக்கும் தறுவாயை அடைந்தது. யானைப் பாகன் யானையின் வருந்தத்தக்க நிலையைக் கண்டதும், அதற்கு சிகிச்சை செய்ய வேண்டும் என்ற நோக்கில் அரசனிடம் அதன் முழு நிலையையும் விளக்கி இவ்வாறு கூறினான்: ''மஹாராஜா! உங்களது யானையின் உடல் நிலை நன்றாக இல்லை. உண்பது, குடிப்பது, உறங்குவது எல்லாமே நின்று விட்டன. இதன் காரணம் என்ன என்பது எங்களுக்குப் புரியவில்லை''. யானைப் பாகன் கூறிய செய்தியைக் கேட்ட மன்னன், யானையின் நோய்களைக் கண்டுபிடிக்கும் வைத்திய நிபுணர்களான மந்திரிகளுடன் யானை ஜுரத்தினால் பீடிக்கப்பட்டுக் கிடந்த இடத்திற்கு வந்தான். அரசனைக் கண்ட மாத்திரத்திலேயே, நோயினால் ஏற்பட்ட வேதனையை மறந்து, உலகத்தை வியப்பில் ஆழ்த்தக்கூடிய குரலில் அந்த யானை, ''சாஸ்திரங்கள் அனைத்தையும் அறிந்தவரே! அரசியல் ஞானத்தின் கடலே! பகைவர்களின் கூட்டத்தைத் தோற்கடிப்பவரே! பகவான் விஷ்ணுவின் திருப்பாதங்களில் பக்தி செய்யும் அரசரே! இந்த மருந்துகளாலும், வைத்தியர்களாலும் எந்தப் பயனும் ஏற்படாது. தானம், ஜபம் இவற்றாலும் கூட என்ன நிறைவேறப் போகிறது? தயவு செய்து, கீதையின் பதினேழாவது அத்யாயத்தைப் பாராயணம் செய்யும் அந்தணர் ஒருவரை வரவழையுங்கள்'' என்று கூறிற்று.

யானை கூறியவாறே அரசன் செய்தான். அதன் பிறகு கீதையைப் பாராயணம் செய்த அந்தணர், புனிதமான நீரை மந்திரித்து, யானையின் மீது தெளித்தார். உடனே துச்சாஸனன் யானை உடலைத் துறந்து, முக்தி அடைந்தான். தெய்விகமான விமானத்தில் ஏறிக் கொண்டிருப்பதையும், இந்திரனுக்கு ஒப்பான பொலிவுடன் விளங்குவதையும் கண்ட அரசன், ''முன் பிறவியில் நீ யார்? உன் வடிவம் என்னவாக இருந்தது? உன் நடத்தை எப்படி இருந்தது? எந்தச் செயலின் விளைவாக யானையாகப் பிறந்து, நீ இங்கே வந்தாய்? இந்த எல்லா விஷயங்களையும் என்னிடம் கூறு'' என அவனிடம் அவனிடம் வினவினான். அரசன் இவ்வாறு வினவியதும் சங்கடத்திலிருந்து விடுபட்ட துச்சாஸனன் விமானத்தில் அமர்ந்த வண்ணமே, உறுதியுடன் தன் முற்பிறவி பற்றிய செய்தியை உள்ளபடியே எடுத்துக் கூறினான். அதன் பிறகு மாளவ தேசத்து அரசனும் கீதையின் பதினேழாவது அத்யாயத்தைப் பாராயணம் செய்யத் தொடங்கினான். இதன் பயனாக சிறிது காலத்திலேயே அவனும் முக்தி பெற்றான்.

ஸ்ரீமத் பகவத் கீதையை மனப்பாடம் செய்வதற்கான வழி :

1. *தினந்தோறும் 18, 9 அல்லது 6வது அத்யாயங்களை நியமத்துடன் பாராயணம் செய்க.*
2. *சிறிய குழந்தைகள் திரும்பத் திரும்ப சுலோகங்களைச் சொல்லி, ஒப்பிக்கட்டும்.*
3. *பெரியவர்கள் சுலோகங்களின் சொற்களைப் பதம் பிரித்து பொருளையும், திரண்ட கருத்தையும் கவனத்தில் கொண்டுவந்து, பிறகு சுலோகங்களை திரும்பத் திரும்பச் சொல்லவேண்டும்.*
4. *பாராயணம் செய்யும்போது, சுலோகங்களை வாய்விட்டு உரக்கவும், தெளிவாகவும் சொல்லுங்கள்.*
5. *மனப்பாடம் ஆன அத்யாயங்களை, புத்தகத்தைப் பார்க்காமல் பாராயணம் செய்யுங்கள்.*




ஸ்ரீமத்பகவத்கீதையின்

பதினெட்டாவது அத்யாயத்தின் பெருமை

பார்வதி தேவி கூறினாள் ''பகவானே! நீங்கள் பதினேழாவது அத்யாயத்தின் பெருமையை எடுத்துரைத்தீர்கள். இப்போது பதினெட்டாவது அத்யாயத்தின் பெருமையை விளக்கிக் கூறுங்கள்.

மஹாதேவர் கூறினார் ''மலை மகளே! சின்மயமான ஆனந்தத்தைப் பெருகவிடும் பதினெட்டாம் அத்யாயத்தின் புனிதமான பெருமையை எடுத்துக் கூறுகிறேன். இந்த அத்யாயம் வேதங்களை காட்டிலும் சிறந்தது. அதைக் கேள். சாஸ்திரங்கள் அனைத்தின் கருத்தும் அடங்கியது இது; அமுதத்திற்கொப்பானது இது. உலக வாழ்க்கை என்னும் துன்ப வலையைத் துண்டு துண்டாக்கக் கூடியது. ஸித்தி பெற்ற மனிதர்களுக்கான உயரிய ரஹஸ்யம் கொண்ட விஷயம் உடையது இது. அவித்யையை அழிப்பதற்கு முழுமையான திறன் பெற்றது இது. இது பகவான் விஷ்ணுவின் உணர்வு; மிகச் சிறந்த பரமபதம். இது மட்டுமின்றி, இது விவேகம் என்னும் கொடியின் வேர்; காமம், கோபம், மதம் இவற்றை அழிக்கக்கூடியது. இந்திரன் முதலிய தேவர்கள் இளைப்பாறும் திருக்கோயில். இது, ஸனகர், ஸனந்தனர் முதலிய பெரிய யோகியரின் மனத்தை இன்புறச் செய்வது. இதைப் பாராயணம்



செய்வதாலேயே யமதூதர்களின் கர்ஜனை நின்றுவிடும். மூன்று வித தாபங்களால் *மிகவும் துன்புறும் மாந்தர்களின் தாபங்களை போக்கக்கூடிய திறன் உள்ள, இத்தகைய ரஹஸ்யம் பொதிந்த, இதைவிடச் சிறந்த உபதேசம் வேறு எதுவும் இல்லை. மிகப் பெரிய பாதகங்களையும் இது அழிக்கக்கூடியது. பதினெட்டாவது அத்யாயத்திற்கு மிக அற்புதமான பெருமை உண்டு. இதோடு தொடர்பு உடைய கதை ஒன்று உண்டு; அதை பக்தியுடன் கேள். அதைக் கேட்ட மாத்திரத்திலேயே ஜீவன் எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபடுகிறான்.

மேரு மலையின் உச்சியில் அமராவதி என்ற பெயர் கொண்ட அழகிய நகரம் இருக்கிறது. முன்னொரு காலத்தில் அது விச்வகர்மாவால் அமைக்கப்பட்டது. அந்நகரில் தேவர்களால் பணிவிடை செய்யப்பட்டு, சசிதேவியுடன் இந்திரன் அங்கே வாழ்ந்து வந்தான். ஒரு நாள் அவன் தன் இருக்கையில் சுகமாக அமர்ந்திருந்தான். இதற்குள் பகவான் விஷ்ணுவின் தூதர்களால் சேவிக்கப்பட்ட வேறொரு மனிதன் அங்கே வருவதை அவன் பார்த்தான். புதிதாக வந்த மனிதனின் பொலிவினால் அவமதிக்கப்பட்டு, தான் வீற்றிருந்த மணிமயமான சிங்காதனத்திலிருந்து மண்டபத்தில் அவன் கீழே விழுந்தான், அப்போது இந்திரனுடைய பணியாட்கள் தேவலோக சாம்ராஜ்யத்தின் மகுடத்தை அப்புதிய இந்திரன் தலையில் வைத்து விட்டார்கள். பிறகு தெய்விக கீதங்களைப் பாடிக் கொண்டு, தேவ மாதர்களுடன் கூட தேவதைகள் அவனுக்கு ஆரத்தி எடுத்தனர். வேத மந்திரங்களைக் கூறி முனிவர்கள் அவனுக்கு ஆசி அளித்தனர். இனிமையான குரலில் கந்தர்வர்களின் பாட்டு ஒலித்தது.

நூறு யாகங்களைச் செய்யாமலேயே இந்திர பதவியை அடைந்து, பலவித மங்களச் செயல்களால் கௌரவிக்கப்பட்ட அப்புதிய இந்திரனைப் பார்த்து பழைய இந்திரனுக்கு மிகுந்த வியப்பு ஏற்பட்டது. ''இவன் சாலைகளில் தண்ணீர்ப்பந்தல்கள் அமைக்கவில்லை. குளங்கள் வெட்டவில்லை; வழிப் போக்கர்களுக்கு நிழலளிக்கக்கூடிய பெரிய மரங்களை நடவில்லை. பஞ்ச காலங்களில் அன்னதானம் செய்து பிராணிகளின் பசியைத் தீர்க்கவில்லை. புனித ஸ்தலங்களில் இவன் சத்திரங்களைக் கட்டுவிக்கவில்லை. கிராமங்களில் இவன் யாகங்களையும் செய்ததில்லை. அப்படி இருக்கும் போது அதிர்ஷ்ட வசமாக இப்பொருள்கள் எல்லாம் இவனுக்கு எப்படிக் கிடைத்தன?''

இவ்வாறு சிந்தித்ததால் துன்புற்று (பழைய) இந்திரன், பகவான் விஷ்ணுவிடம் இதன் காரணத்தைக் கேட்டறிந்து கொள்ள, அன்பு மேலிட்டு, பாற்கடலின் கரைக்குச் சென்றான். அங்கே, எதிர்பாராதவிதமாக திடீரென்று இந்திர பதவி பறிபோன துக்கத்தை அவருக்குத் தெரியப்படுத்தி, ''லக்ஷ்மீ பதியே! முன்னொரு காலத்தில் நீங்கள் மகிழ்ச்சி கொள்ளும் பொருட்டு, நூறு யாகங்களைச் செய்தேன். அந்தப் புண்ய பலனாகவே எனக்கு இந்திர பதவி கிடைத்தது; ஆனால் இப்போது வேறொருவன் இந்திரபதவியை அடைந்து அதிகாரம் செலுத்திக் கொண்டிருக்கிறான். அவன் ஒரு பொழுதும் தர்மத்தைக் கடைப்பிடித்ததில்லை; யாகங்களையும் செய்யவில்லை. அப்படி இருக்கும் போது, எனது அரியணையில் அமர அவன் எப்படி உரிமை பெற்றான்?'' என அவரிடம் வினவினான்.


பகவான் கூறினார் ''இந்திரா! அவன் கீதையின் பதினெட்டாவது அத்யாயத்திலுள்ள ஐந்து சுலோகங்களை தினந்தோறும் பாராயணம் செய்கிறான். அந்த புண்யத்தினாலேயே அவன் உன்னுடைய சிறப்பு மிக்க ஸாம்ராஜ்யத்தை அடைந்து விட்டான். கீதையின் பதினெட்டாம் அத்யாயத்தைப் பாராயணம் செய்வது எல்லாம் புண்யச் செயல்களிலும் தலை சிறந்தது. அதையே புகலாகக் கொண்டு, நீயும் உன் பதவியில் நிலைத்து இருக்கலாம்.

* *அத்யாத்மிகம் (மனதில் ஏற்படும் கிலேசம்) ஆதி பௌதிகம் (பிற பிராணிகள் மூலம் ஏற்படும் துன்பங்கள், ஆதி தைவிகம் (மழை, வெள்ளம் முதலிய இயற்கையின் உபாதைகளால் ஏற்படும் துன்பங்கள்)*

பகவான் விஷ்ணு கூறிய இச்சொற்களைக் கேட்டும், மிகச் சிறந்த இந்த உபாயத்தை அறிந்து கொண்டும், இந்திரன் அந்தண வேடம் தாங்கி கோதாவரி நதிக் கரைக்குச் சென்றான். அங்கே காலிகா கிராமம் என்ற பெயர்கொண்ட அழகும் புனிதமும் நிறைந்த நகரைக் கண்டான். அங்கே காலனையும் காலால் அழுத்தும் பகவான் காலேச்வரர் வீற்றிருக்கிறார். அங்கே கோதாவரி நதிக்கரையில் சிறந்த தர்மாத்மாவான அந்தணர் ஒருவர் வாழ்ந்திருந்தார். அவர் மிகுந்த தயை உடையவர்; வேதங்களில் கரை கண்ட வித்வான். தமது மனத்தை வசப்படுத்தி ஒவ்வொரு நாளும் கீதையின் பதினெட்டாவது அத்யாயத்தை ஆர்வத்துடன் கற்றுவந்தார். அவரைக் கண்டு, மிகுந்த மகிழ்ச்சியுடன் அவருடைய இரு பாதங்களிலும் தன் தலையைத் தாழ்த்தி பழைய இந்திரன் வணங்கினான். அவரிடமிருந்தே பதினெட்டாவது அத்யாயத்தைக் கற்றுக் கொண்டு படித்தான். பிறகு அந்தப் புண்யத்தின் பயனாக விஷ்ணுவின் *ஸாயுஜ்ய பதவியை அடைந்தான். இந்திர பதவி உள்ளிட்ட மற்ற தேவதைகளின் பதவிகளும் மிகவும் சிறியவையே என்பதை அறிந்து கொண்டு, மிகுந்த மகிழ்ச்சியுடன் மிகச் சிறந்த இடமான வைகுண்டத்தை அடைந்தான். ஆகவே இந்த அத்யாயம் முனிவர்களுக்கு மிகச் சிறந்த பரமதத்வம். பார்வதி! பதினெட்டாவது அத்யாயத்தின் இந்த திவ்யமான வர்ணனை இப்போது முடிந்து விட்டது. இதைக் கேட்பதாலேயே மனிதன் பாவங்கள் அனைத்திலிருந்தும் விடுபடுகிறான். இவ்வாறு பாவங்களை அழிக்கக்கூடிய கீதை முழுவதின் பெருமையையும் உனக்கு எடுத்துக் கூறினேன், பாக்கியசாலியே! சிரத்தையோடு இதைக் கேட்கும் மனிதன், எல்லா யாகங்களின் பயன்களையும் பெற்று இறுதியில் விஷ்ணு பகவானின் ஸாயுஜ்ய பதவியை அடைந்து விடுகிறான்.

---

* *ஸாயுஜ்ய பதவி - பகவானுடன் ஒன்றுதல்;*



॥ ஸ்ரீஹ.: ॥ 1134

கீதையின் பெருமையை விளக்கும் கதைகள்

गीतामाहात्म्यकी कहानियाँ (तमिल)



गीताप्रेस गोरखपुर
GITA PRESS, GORAKHPUR

கீதாபிரஸ், கோரக்பூர்